January-2018 | Volume-4 | issue-40

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜனவரி - 2018 பருவம் - 4 புனல் - 40 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only



## ரஜினி: மராட்டியரா? ஆர்.எஸ்.எஸ் காரரா?

பல்லடம் தீபா



# காதுகுத்தும் ஜிமிக்கிக் கம்மலும்





காட்டாறு ஏடு கடந்த 2017 ஆம் ஆண்டு 24. 12. 17 அன்று பாலினச் சமத்துவம் தொடர்பான பல்வேறு முழக்கங்களை முன்வைத்து சமையல் மறுப்புப் போராட்டத்தை நடத்தியது. போராட்டத்தின் முழக்கங்களில் ஒன்று "பெண்களை வெறும் அலங்காரப் பொம்மைகளாக மட்டுமே உருவாக்கும் வகையில், குழந்தைப் பருவத்திலேயே நடத்தப்படும் காதுகுத்து விழாக் களைத் தடைசெய்!" என்பதாகும். இந்த முழக்கம் தொடர்பாக மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதில் பொதுமக்கள் தெரிவித்த மாற்றுக்கருத்துக்களுக்கு உரிய விளக்கங்களை இக்கட்டுரையில் காணலாம்.

1. கலாச்சாரம், பாரம்பரியத்தை நிறுத்தக் கூடாது. உறவு களில் நெருக்கம் உண்டாகவும், பணம், பொருள், சேர்ப்பதற்கும் இவ்விழா வேண்டும். அவரவர் விருப்பம் போல, விழா எளிமையாகவோ, பெரிய விழாவாகவோ இந்த விழா நடத்தப்படுமே தவிர நிறுத்தக் கூடாது என்றனர் சில பொதுமக்கள்..

**நமது விளக்கம்**

ஒரே சாதி மக்களை குலதெய்வம், குலம் என்று பிரித்து மக்களை ஒன்று சேர விடாமல் - இந்தச் சாதிப் பழக்க வழக்கங்களை சடங்கு, சம்பிரதாயம் என்ற பெயரில் அழுத்தமாக கடைப்பிடிக்க பயன் படுவதே இந்தக் குல தெய்வ விழாக்கள்.

கலாச்சாரம், பாரம்பரியத்தை நிறுத்தக் கூடாது என்பதற்காக, குழந்தைக்கு காதுகுத்தி, மொட்டை அடிக்கிறார்கள். இந்த விழா அவரவர் வசதிக்குத் தகுந்தது போல் ஏற்பாடு செய்யப் படுகிறது. இதில் காதுகுத்து என்றாலே கிடா வெட்டு, காதுகுத்தி மொட்டை அடிப்பது போன்றவை குலதெய்வக் கோவில்களில் செய்யப் படுகிறது.

குல தெய்வக் கோவில்களில் கிடா வெட்டா தவர்கள் வீடுகளில் கிடா வெட்டுகிறார்கள். குலதெய்வக் கோவிலில் பொங்கல் வைத்து மொட்டை அடித்து விட்டு வீட்டுக்கு வந்து விருந்து ஏற்பாடு செய்கிறார்கள். அந்தக் கோவிலில் குழந்தைக்கு மொட்டை அடிக்க ஒரு சாதியையும், காதுகுத்த ஒரு சாதியையும் அழைப்பார்கள். ஆக குழந்தையின் முதல் நிகழ்வே அனைவரும் ஜாதி அடிப்படையிலான தொழிலைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தை உருவாக்குவதாக உள்ளது.

இந்த மாதிரிச் செய்வது, சமுதாயத்திலும் உற்றார், உறவினர்கள் மத்தியிலும் தன்னுடைய தற்பெருமையை காட்டிக் கொள்வதாகும். இதைத் தான் கலாச்சாரம் பாரம்பரியம் என்கிறார்கள். இம் மாதிரியான விழாக்கள் தன்னுடைய தற் பெருமைக்கும், மொட்டை அடிப்பதனால் தாய் மாமன் சீர்வாங்குவதற்கும் பணம், பொருள் சேர்ப்பதற்க்கும், அந்த குழந்தையைப் பயன்படுத்தி - விழா ஏற்பாடு செய்வது தேவையில்லாத ஒன்று.

தேவையில்லாமல் 11 மாதக் குழந்தைக்குக் காது குத்தி, காதில் புண் ஆறாமல் இருப்பது, வலி தாங்க முடியாமல் குழந்தைக்குச் சொல்லவும் தெரியாமல் அழுது கொண்டே இருக்கும். ஒரு சில குழந்தைக்கு காய்ச்சல் கூட வருவதுண்டு.

காதில் இருக்கும் புண் ஆறும் வரை, யாராவது கை அந்தக் காதுக்குப் பட்டாலோ, தன்னுடைய கையே பட்டாலும் அழுது கொண்டேதான் இருக்கும். பொருள் சேர்ப்பதற்காக காதுகுத்து விழா ஏற்பாடு செய்யப்பட்டாலும், ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் காதுகுத்தினாலும் ஆண் குழந்தை கம்மல் போடுவது இல்லை. பெண் குழந்தை தான் கம்மல் போடணும், பூவைக்கணும், பொட்டு வைக்கணும் என்று சொல்கிறார்கள்.

காது குத்தில் தொடங்கி ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கலாச்சாரம், பழக்கவழக்கம் என்று சொல்லி (பிறப்பு முதல் இறப்பு வரை ஏன் இறந்த பிறகும் கூட கலாச்சாரத்தை ) பின்பற்றி வாழ்ந்து கொண்டு கடனாளியாகத்தான் நம் மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

**பொருளாதார சிக்கல்**

அடித்தட்டு மற்றும் நடுத்தரப் பிரிவுப் பொது மக்கள் காது குத்து விழா வைக்கவில்லை என்றால் இந்தச் சமுதாயம் நம்மை என்ன சொல்லும். நம்முடைய உறவினர்கள் என்ன நினைப்பார்கள் என்று சொல்லி “கடன்” வாங்கிக் காது குத்தி, மொட்டை அடிக்கலாம். அப்புறம் மொய்ப் பணம் வாங்கிக் கடனை அடைத்து விடலாம். என்று விழா ஏற்பாடு செய்கிறார்கள்.

## ஆண் வளர வளர ஆணின் அடையாளம் ‘வீரம்’ என்றும், பெண்ணின் அடையாளம் ‘அழகு’ என்றும் இந்த இந்துச்சமுதாயம் சொல்லித்தருகிறது.

அப்படிச் செய்யும்போது தாய்மாமன் பணமாகவோ, நகையாகவோ, பொருளாகவோ சீர் செய்ய வேண்டும். இதுதான் நடைமுறைப் பழக்கமாக இருக்கிறது. தாய்மாமன் சீர் செய்ய குறைந்தது 30,000 தேவை என்று வைத்துக் கொள்வோம். ஆனால் காதுகுத்து ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டிற்கு அதைவிடச் செலவு அதிகமாகத்தான் இருக்கும்.

**செய்முறை செலவு**

மொய்ப் பணம் வைப்பதில் உறவினர்கள் நான் 2,000 வைக்கலாம் என்று நினைத்தேன், பங்காளி 3,000 வைக்கிறான் நாம் அவனைவிட அதிகமாகத் தான் வைக்கணும் என்று நினைப்பது, அப்படி நினைத்து கடன் வாங்கி மொய்ப்பணம் (செய்முறை) செய்வது, இப்படி வாங்கியக் கடனைத் திருப்பி அடைக்க நாம் மாதமாதம் தன்னுடைய குடும்பச் செலவுகளில் ஏதேனும் ஒரு செலவை குறைத்துக் கொண்டு கடனைக் கட்ட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

இதற்கு மத்தியில் விஷேச வீட்டில் சரியாக என்னைக் கவனிக்கவில்லை. எந்த விசயத்திற்கும் என்னிடம் ஆலோசனை கேட்கவில்லை. என்னை மதிக்கவில்லை என்று சங்கடங்களும், சண்டைகளும் ஏற்படுகிறது. இப்படியாக ஒரு புறம் இருக்க, காது குத்து விழா ஏற்பாடு செய்யப்பட்டு, விழா நடந்து முடிந்து விட்டது. மொய்ப்பணம் பொருள் எல்லாம் வாங்கியாச்சு. அதற்கு அடுத்த மாதம் தன்னுடைய உறவினர்களில் மூன்று பேர் வீடுகளில் ஒரே முகூர்த்த நாளில் வெவ்வேறு விஷேச நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த மூன்று குடும்பத்தாரும் தன்னுடைய வீட்டு (காது குத்து) விஷேசத்திற்க்கு குறைந்தது 5,000 மொய் பணம் வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் நாம் அதை திருப்பி செலுத்தும் போது 5,000 க்கு 6,000மோ, 7,000மோ வாகத்தான் செய்ய வேண்டும். இப்படி ஒரே நாளில் மூன்று பேருக்கும் செய்முறை செய்வது மிகவும் பொருளாதார சிக்கல் ஏற்படுகிறது. அதற்கு மீண்டும் கடன் வாங்க வேண்டியுள்ளது.

கடன் வாங்குகிறோம், விஷேசம் வைக் கிறோம், மொய்ப்பணம் வாங்குகிறோம், செய்முறை செய்கிறோம், இப்படியாக ஒரு சுழற்சியான வாழ்க் கையாக நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இப்படி நம்முடைய கலாச்சாரமும், பண்பாடும் நம்மைக் கடைசி வரைக்கும் கடனாளியாகவே வைத்திருக்கிறது. இந்து மத, ஜாதிப் பண்பாட்டை விட்டு வெளியேற முடியாமல் சிறை வைக்கிறது.

2. காது குத்து நிகழ்ச்சி என்பது தாய்மாமன் உறவு என்றென்றும் நீடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். என்பது சில பொதுமக்களின் கருத்து.

**நமது விளக்கம்**

உறவு முறைகள் நீடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். உறவு முறைகள் எதற்காக நீடிக்கிறது, பின்நாளில் திருமண உறவுகள் ஏற்படுத்துவதற்கு இந்த விழா பயன்படுகிறது. இதனுடைய விளைவு என்னவென்றால் மரபணு வழியாக ஏற்படக்கூடிய 3,000 வகையிலான நிரந்தர ஊனங்கள் உறவு முறைத் திருமணத்தில் ஏற்படுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. குறிப்பிட்ட சில வகையான மருத்துவ ஊனங்கள் உலகிலேயே தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் மட்டுமே இருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதுபோல் உறவு முறை திருமணங்கள் கூடாது என்று அரசு மருத்துவ மனைகளிலும் கூட விளம்பர படங்கள் வைக்கப் பட்டுள்ளன.

**உறவு முறை திருமணத்தினால்,**

1.பிறக்கும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு ஏற்படலாம்.

2.ஊனமுற்ற குழந்தைகளாகப் பிறக்கும் வாய்ப்பு மிக அதிகம்

3.மூளை வளர்ச்சியற்ற, புத்தி குறைவான குழந்தை பிறக்கும் வாய்ப்பு

4.பெண் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலை.

இந்த மாதிரியான ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவாகத்தான் இந்த மதச் சடங்குகள் பயன் படுகிறதே தவிர வேறு எதற்கும் இல்லை..

3. காது குத்துவதில் அறிவியல் இருப்பதாகவும் அந்த அறிவியலின் படி நன்மை இருப்பதாகவும் ஒரு சில மக்கள் கூறகின்றனர்.

**நமது விளக்கம்**

*காது குத்தி நகை அணிவதை பற்றி ஈஷா யோகா மையம் சத்குரு கூறகிறார்.*

"நம் உடல் ஆரோக்கியம் மற்றும் மன உறுதி போன்றவை சமநிலையுடன் இருப்பதற்கு காது, மூக்கு போன்ற சில உறுப்புகளில் உள்ள சக்தி மையங்களைக் கவனிப்பது மிகவும் முக்கிய மானதாக இருக்கிறது. அந்த இடத்தில் சிறிது உலோகத்தை உபயோகப் படுத்துகிறோம். இப்படிச் செய்யும் போது அங்குள்ள சக்தி மண்டலம் தூண்டப்படுகிறது. இதனால் உடல் நிலை உறுதியாகிறது.

காதில் சரியான இடத்தில் பார்த்து குத்த வேண்டும். நம் கலாச்சாரத்தில் அதற்காகவே ஆட்கள் இருந்தார்கள். இப்போது டாக்டரிடம் போய், குத்திக் கொள்கிறார்கள். ஆனால் அதற்கென்றே அனுபவம் உள்ள நபரிடம் செல்லும் போது அவர்கள் சரியான புள்ளியில் குத்துவார்கள். அப்போது உடல் மன ஆரோக்கியம் உறுதிப்பட வாய்ப்புள்ளது" என்று கூறகிறார்.

*அவர் சொல்வது போல் காது மூக்கு குத்தினால் மன உறுதி போன்றவை ஏற்படும். சக்தி மண்டலம் தூண்டப்படுகிறது . உடல்நிலை உறுதியாகிறது என்றால் அவர் கூற்றுப்படி ஆண்கள், பெண்கள் என்று எல்லோரும் காது, மூக்கு குத்த வேண்டியது தானே ஆனால் பெண்களுக்கு மட்டும் ஏன் காது, மூக்கு குத்துகிறார்கள்?*

*சத்குரு காது குத்துவதற்கு ஒரு சாதி உள்ளது என்று கூறுகிறார். சாதி இறுக்கமாகவே இந்த விழா பயன்படுகிறது என்பதற்கு அதுவே சாட்சி.*

*காது மூக்கு குத்தியுள்ளவர்களுக்கு உடல் வலுப்பெறும், உறுதி பெறும் என்றால் நம் நாட்டு பெண்கள் அனைவரும் விளையாட்டு வீராங்கனை களாகவும், போர் வீரர்களாகத்தான் இருந்து இருப்பார்கள். ஆனால் அப்படி இல்லை. காது மூக்கு குத்தாத, நகை அணியாத அயல் நாட்டு பெண்கள் எத்தனையோ பேர் விளையாட்டு வீராங்கனை களாகவும், அறிவு சார்ந்தவர்களாகவும், அறிவியல் மனப்பான்மை உள்ளவர்களாகவும் இருக்கிறார் களே. அது எப்படி? ஆக இவர் கூறும் உறுதி, வலிமை எல்லாம் வீட்டுவேலைக் காரியாகவும், அழகுப் பொம்மைகளாகவும், பிள்ளை பெறும் இயந்திரங் களாக்கத்தான் பயன்படும்.*

*காது குத்துவதை பற்றி இணையதளங்களில் தேடினால் கிடைக்கும் செய்தி*

**நோயைத் தவிர்க்க:**

*காது குத்துவதன் வழி (ஹிஸ்திரியா) மாதவிடாய் வலி போன்ற நோய்களைத் தவிர்க்கலாம் என்றும், தோடு (கம்மல்) மனிதனின் உடல் மின்சாரத்தை செம்மைப்படுத்துவதாக கருதப்படுகிறது.*

*காது மடல் மனிதனின் இடது மற்றும் வலது மூளையை ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாகும். எனவே, காதுகுத்தும் போது மூளை வளர்ச்சியும் ஞாபகசக்தியும் அதிகரிக்கும் என்று சொல்கிறது.*

*இதன்படி பார்த்தால் நமது இந்து மத கலாச்சாரத்தில் சுமார் 1,000 ஆண்டுகளுக்கும் மேலாக காது குத்துகிறார்கள் என்று பார்த்தால் யாரும் அறிவு சார்ந்தவர்களாகவும், விஞ்ஞானி களாகவும் இல்லை. கொஞ்சம் அறிவியல் வளர்ச்சி கிடைத்ததென்றால் ஆங்கிலேயர்கள் வந்த பிறகு தான். கல்வி அறிவு கிடைத்தது என்றால் பெரியார், அம்பேத்கர், காமராஜர் போன்றவர்களால் தான் கிடைத்தது.*

*இந்து மதச் சடங்குகள் அனைத்தும் விஞ்ஞானப் பூர்வமானது, அறிவியல் பூர்வமானது நமது முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை என்பார்கள். ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. அறிவியலுடன் போட்டி போட முடியாது. ஆகையால் இந்து மதச் சடங்குகள் அனைத்தும் அறிவியல் படி தான் அமைக்கப்பட்டுள்ளது என்று அறிவியலுக்குள் நுழைக்கப் பார்க்கிறார்கள் இந்து மதப் பார்ப்பனப் பாதுகாவலர்கள்.*

4. ஆணுக்கும், பெண்ணுக்கும் இருவருக்குதான் காது குத்துகிறார்கள். இங்கிருந்துதான் அலங்காரம் தொடருகிறது என்றால் பெண்கள் தொடர்கிறார்கள் ஆனால் ஆண்கள் தொடருவதில்லை காதுகுத்துவது அலங்காரத்திற்காகத்தான் என்றால் அது ஆண்களிடம் இல்லை ஏன்?

**நமது விளக்கம்**

*ஆணுக்குக் காது குத்தினாலும், அவன் தொடர்ச்சியாகக் காதணிகளை அணியா விட்டாலும் - அதிலும் ஜாதி அடிப்படையிலான தொழில்கள், தாய்மாமன் மடியில் அமர வைப்பது போன்ற சடங்குகளால் ஜாதிமுறை இறுக்கமாகவே இந்த விழா பயன்படுகிறது.*

*ஆண் வளர வளர ஆணின் அடையாளம் 'வீரம்' என்றும், பெண்ணின் அடையாளம் 'அழகு' என்றும் இந்த இந்துச்சமுதாயம் சொல்லித்தருகிறது. அதன் அடிப்படையில், ஆண் காதணிகளை விட்டு விட்டு, மீசை வளர்ப்பது, வேட்டியைத் தூக்கிக் கட்டுவது போன்ற பண்புகளைப் பின்பற்றுகிறான். பெண் தன்னை அழகு படுத்திக்கொள்ளப் பழக்கப் படுத்தப்படுகிறாள்.*

*பெண்ணின் அடையாளம் வெறும் அழகு மட்டுமல்ல; கல்வி, வீரம், ஆளும் திறன், நிர்வாகத்திறன் எல்லாம் பெண்ணுக்கும் உரியது தான் என்ற எண்ணத்தைப் பெண்ணுக்குக் கூறினால், பெண்களும் காதணிகளை விட்டு விட வாய்ப்பு உள்ளது. ஆனால், அப்படிப்பட்ட நினைப்பே வராமல் தடுப்பது இந்து மத தர்மங்கள் தான்.*

"எந்த வீட்டில் மாதர்கள் பூஷண (நகை) முதலியவற்றால் சந்தோசமடைகிறார்களோ அந்த வீட்டில் எல்லா தெய்வங்களும் சந்தோசத்துடன் வசிக்கிறார்கள் எந்த வீட்டில் அவ்வாறு பூஜிக்கப்பட வில்லையோ அந்த வீட்டில் செய்கிற காரியங்கள் எல்லாம் பலனில்லாமல் போய்விடுகின்றான்.

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 3.சுலோகம் 56*

## பெண்ணின் அடையாளம் வெறும் அழகு மட்டுமல்ல; கல்வி, வீரம், ஆளும் திறன், என்ற நினைப்பே வராமல் தடுப்பது இந்து மதம் தான்

"ஷேமத்தைக் கோரும் மனிதர்கள் எப்போதும் தன் வீட்டில் நடக்கும் விரதங்கள் கலியாணங்கள் இவை முதலிய விஷேசக் காலங்களில் தன் உடன் பிறந்தாள் முதலிய மாதர்களை பூஷணம் (நகை) வஸ்திர (ஆடை) சாப்பாடு இவற்றினால் சந்தோசப்படுத்த வேண்டியது."

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 3.சுலோகம் 59*

"பெண்களுக்கு நகை போட்டு அழகு பார்க்கா விட்டால் அவர்கள் உடல் உறவுக்கு வர மாட்டார்கள் அப்படி வராவிட்டால் வாரிசுகள் உருவாகாது"

*-மனுசாஸ்திரம் அத்தியாயம் 3.சுலோகம் 61*

"பெண்கள் படுக்கை ஆசனம் அலங்காரங்களுக்கு ஆசைப் படுபவர்கள் காமக் குரோதங்களுக்கு வசப்படுவார்கள் செய்யத்தகாததை செய்பவர் களாகவும் துரோகபாவத்தோடும் இருப்பார்கள்"

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 9.சுலோகம் 17*

*இப்படி, பெண்களின் மூளையில் இந்து மதப் பண்பாடுகள் அழுத்தமாக விதைக்கப்பட்டுள்ளது. இதை இடை விடாது கடைபிடிக்கச் செய்கின்றன நகைக் கடை விளம்பரங்கள். சமீப காலமாகப் பிரபலம் ஆன "ஜிமிக்கி கம்மல்" பாட்டைக் கேட்டிருப்பீர்கள்.*

*அந்தப்பாட்டைப் பார்த்த ஆண்கள் நகையைப் பார்ப்பதில்லை. எந்த ஆணும் பாட்டைப் பார்த்து ஜிமிக்கி வாங்கி அணியவில்லை. பெண்களாகிய நாம் நகையை மட்டுமே கவனிப் போம். இந்தப் பாடல் விளம்பரம் ஆன உடனேயே ஏகப்பட்ட புரட்சிப் பெண்ணியம் பேசும் முற்போக்குப் பெண்களே ஜிமிக்கி கம்மலை வாங்கிப் போட்டுக்கொண்டு முகநூல் பக்கங்களில் படங்களை வெளியிட்டுக் கொண்டனர். சராசரிப் பெண்களின் நிலையைக் கேட்கவா வேண்டும். வாங்கவும் முடியாமல், அந்தச் சிந்தனையே தவறு என்ற எண்ணமும் இல்லாமல் ஏங்கிக் கிடப்பார்கள்.*

*அந்த ஏக்கத்தைத் திணிப்பது இந்துப் பண்பாடுகள். அந்த இந்துப் பண்பாடுகளின் மிக முக்கியமான அடையாளமும் தொடக்கமும் இந்தக் காதணி விழாக்கள் தான். அதனால் தான் புறக்கணிக்க வேண்டும் என்கிறோம்.*

கவிஞர் தமிழ்மன்னன்

# பொதுவுடைமை பூக்கச் செய்வோம்

பகுத்தறியும் திறனில்லா மக்கள் கூட்டம்
'பக்தி'யிலே உழல்கின்ற மக்குக் கூட்டம்
தகுதியில்லாத் தற்குறியாய் ஆளும் கூட்டம்
தான்தோன்றித் தனமாக அலையும் கூட்டம்
உகுத்திடும் கண்ணீரோ(டு) உழைக்கும் கூட்டம்
ஊர்ப்பணத்தைக் கொள்ளையிடும் குருக்கள் கூட்டம்
வகுத்திட்ட சட்டங்களை வளைக்கும் கூட்டம்
வாயடித்து கதையடித்து வாழும் கூட்டம்.

சாதியென்னும் மலந்தின்று திரியும் கூட்டம்
சமயவெறி தலைக்கேறித் தகர்க்கும் கூட்டம்
நாதியற்றே ஒடுங்குகின்ற நலிந்தோர் கூட்டம்
நற்புத்தி இல்லாது சுரண்டும் கூட்டம்
சூதினாலே செல்வத்தை தொலைக்கும் கூட்டம்
சொந்தங்களைப் புறக்கணித்து சுகிக்கும் கூட்டம்
பாதிப்பை உணராத குடியர் கூட்டம்
பரிதவித்தே அழுகின்ற பெண்கள் கூட்டம்.

நன்னெறியை இகழ்கின்ற நச்சுக் கூட்டம்
நாள்தோறும் பகைமைதனை மெச்சும் கூட்டம்
புன்னெறியைத் தன்னெறியாய்ப் புகழும் கூட்டம்
பொதுநலனைக் கெடுக்கின்ற கயவர் கூட்டம்
இன்னுரைகள் மொழிந்தாலோ இகழும் கூட்டம்
எடுத்தெறிந்து பேசிதுயர் இழைக்கும் கூட்டம்
வன்முறையைப் பரப்புகின்ற வம்பர் கூட்டம்
மனத்தினிலே வன்மத்தை வளர்க்கும் கூட்டம்.

நிலவுகின்ற தனியுடைமைச் சமுதாய த்தில்
நேர்மறையாய் சிந்திப்பார் சிலரே உள்ளார்
களவுமுதல் பல்வேறு குற்ற மெல்லாம்
'கலை'யென்றே ஒழுக்கமில்லார் கூறு கின்றார்
பலவழியில் போதனைகள் செய்தும், நாட்டில்
பண்பாடு தேய்ந்துவிட்ட அவலம் நீங்க
நலம்அழிக்கும் தனியுடைமைக் கொடுமை வீழ்த்தி
நலம்அளிக்கும் பொதுவுடைமை பூக்கச் செய்வோம்!

கவிக்கண்ணன்

## இந்தியாவின் முதல் பெண்ணியவாதி

# சாவித்திரிபாய்



வரலாற்றில் மறைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பெண். அவர் இந்தியாவின் இரும்புப் பெண் சாவித்ரிபாய் பூலே. இவர் தான் இந்தியாவின் முதல் ஆசிரியையும் ஆவார். ஆனால், வழக்கம் போல் இந்திய வரலாறு தன் கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டது. நமக்குச் சொல்லித் தந்த பெண்ணியவாதிகள் வரிசையில் சாவித்ரி பாயின் பெயர் மறைக்கப் பட்டது மிகப் பெரிய துரோகம்.

இவரைப் பற்றியும் இவரின் சமூகப் பணி பற்றியும் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். இவர் 1831-ம் ஆண்டு ஜனவரி 3-ம் நாள் மஹாராஷ்டிராவில், நய்கொன் என்ற ஊரில் பிறந்தார். தனது 9-ஆவது வயதில் மகாத்மா ஜோதிராவ் பூலேவின் துணைவி ஆனார். கணவர் தான் அவரின் அடிப்படைக் கல்வி ஆசிரியர். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்த இவர், ஆசிரியை ஆனார். பெண்களுக்கான முதல் பள்ளியை 1848-ல் துவங்கினார். பெண்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் கல்வி கிடைக்கப் பாடுபட்டார்.

இந்தச் சமூகத்தில் கைவிடப்பட்ட பெண்கள், ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கல்வி வழங்குதல் என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதுவும் அந்த 19 ஆம் நூற்றாண்டில். ஒவ்வொரு நாளும் ஆசிரியர் பணிக்காகச் செல்லும் வழியில் ஆதிக்க சாதி ஆண்களால் கற்களாலும், சாணியாலும், அழுகிய பொருட்களாலும், கழிவுகளாலும் தாக்கப்பட்டார். தன் கணவரிடம் இதைப் பற்றி முறையிடவே, அவர் பழைய ஆடையைக் கட்டிக் கொண்டு புதிய ஆடையை கையில் எடுத்து பள்ளிக்குச் சென்று மாற்றி, பள்ளி முடிந்தவுடன் மீண்டும் பழைய ஆடையைக் கட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பி வருமாறு அறிவுறுத்தப் பட்டார்.

கல்விக்காக மட்டுமில்லாமல் இந்தியாவின் முதல் பெண்ணிய இயக்கத்தின் முன்னோடியாக சாவித்ரிபாய் பூலேயைச் சொல்லலாம். 1860-ல் விதவைகளுக்கு மொட்டை அடிக்க மாட்டோம் என்று மொட்டை அடிக்கும் தொழிலில் இருந்தவர் களிடம் பேசி இந்தப் பழக்கத்திற்கு எதிராக மிகப் பெரிய போராட்டம் நடத்தினார்.

‘சத்ய சோதக் சமாஜ்‘ அமைப்பில் மகளிர் பிரிவு தலைவராக டிசம்பர் 25 - 1873 -ல் பொறுப் பேற்றார். புரோகிதர் இல்லாத் திருமணத்தை வலியுறுத்தி புரோகிதர் இல்லாத் திருமணத்தை நடத்தியும் காட்டினார். கணவனை இழந்த இளம்பெண்கள் மேட்டுக்குடி ஆண்களால் பாலியல் பலாத்காரம் செய்வது அந்தக் காலங்களில் சமூக அங்கீகாரம் பெற்ற கொடூரங்களில் ஒன்று. இந்தப் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகும் பெண்கள் கருவுறும் போது வெளியே தெரிய வந்தால் என்னவாகும் எனப் பயந்து தற்கொலைகள் செய்வது வழக்கமாக இருந்தது.

இதே போல் பாதிக்கப் பட்ட ஒரு பார்ப்பன பெண்ணைத் தற்கொலையில் இருந்து காப்பாற்றி அந்தப் பெண்ணின் குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டார். அந்தக் குழந்தைக்கு ‘யஷ்வந்த்’ என்று பெயரிட்டார். பார்ப்பன ஆதிக்க சக்திகளின் கடும் எதிர்ப்பு, கடும் பொருளாதார சவால்களையும் மீறி கைவிடப்பட்ட பெண்கள், குழந்தைகள், தாழ்த்தப் பட்டவர்களுக்காகவே இல்லம் நடத்துவதை இந்தத் தம்பதிகள் தங்கள் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டனர்.

1870 இல் மகாராஷ்டிராவில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தினால் ஏராளமான குழந்தைகள் அனாதை ஆயினர். அவர்களுக்காகவே 52 உறைவிடப் பள்ளிகளை பூலே தம்பதியினர் மிகப் பெரிய சமூக, பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியில் தொடங்கினர். ஜோதிராவ் பூலே 1890 இல் இறந்த போது கட்டுப்பாடுகளை மீறித் தன் கணவனின் உடலுக்குத் தானே தீ மூட்டினார்.

1893 ஆம் ஆண்டு சாஸ்வத் என்ற இடத்தில் சமாஜத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். 1896 இல் பஞ்ச நிவாரணப் பணிக்கு பிரிட்டிஷ் அரசை நிர்பந்தித்து வெற்றியும் காண்கிறார். 1897 இல் கொடிய பிளேக் நோய் புனே நகரைத் தாக்கியது. நேரடி நிவாரணப் பணியில் ஈடுபட்ட அவரை பிளேக் நோய் தாக்கி 1897 மார்ச் 10 இல் மறைந்தார்.

சமூக விடுதலையைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாத 19 ஆம் நூற்றாண்டில் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு , பெண் கல்வி, விதவை மறுமணம், புரோகிதர் இல்லாத் திருமணம், தலித் மற்றும் ஒடுக்கப்பட்டோர் விடுதலை எனத் தன் மொத்த வாழ்நாளையும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி இந்த சமூகத்திற்காகவே செலவிட்ட இவர்தான் உண்மையான இரும்புப் பெண் என்று போற்றப்படக் கூடியவர். பழைய மதச் சங்கிலிகளை உடைத்து மனித நேயப் பாதைக்கு வித்திட்ட சாவித்ரி பாய் பூலே இந்திய வரலாறுகளில் மறைக்கப் பட்டதற்குக் காரணம், இந்திய வரலாறு என்பது மேட்டுக்குடிப் பார்ப்பனர்களால் உருவகப் படுத்துவதே ஆகும். ஆனால் உண்மைகள் ஒரு போதும் ஓய்வெடுப்பதில்லை.

ஜாக்குலின், பழனி

# உடற்பயிற்சியும் ஆண்மையும்

**"மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் ஆக்கப்பூர்வமான எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது"**

**"எக்காலத்திலும் தெளிவான சிந்தனையும் தீர்க்கமான செயல்பாடுகளும் இருந்தால் நாம் சாதிப்போம்!"**

விளையாட்டு வீராங்கனைகளான சாக்ஷி, சானியா மிர்சா, சிந்து, பி.டி.உஷா போன்றவர்களின் சாதனை, வளர்ச்சி, அவர்கள் சந்தித்த சோதனைகள் இவற்றைப்பற்றி நான் இப்போது பேசவரவில்லை. ஒரு சராசரிப் பெண் தன் உடல் நலத்தைக் காக்க விரும்பினால் அதுவும் உடற்பயிற்சி செய்து தன் நலனைப் பேண நினைத்தால், முயற்சித்தால், சந்திக்க வேண்டிய விசயங்களைப் பற்றித்தான் பேசப் போகிறேன். ஒரு முக்கியமான விசயம் என்ன வென்றால் திருமணத்திற்குப் பின் மிகப் பெரும்பாலான பெண்கள் நிறைய உடல் பிரச்சனைகளோடு உள்ளனர் என்பது உண்மை. அதற்கு எளிமையான தீர்வுகளில் முதன்மையானது உடற்பயிற்சியாகும்.



பெண்ணாய் இருந்தால் அடக்கமாய் இரு, வளையல் போடு, பூ வை, சிரிப்பதில் கூட மகிழ்ச்சியாய் வாய்விட்டுச் சிரிக்கக் கூடாது என்று சொல்லிச் சொல்லியே பெண்ணை எந்த உடற்பயிற்சியும், மனத்துணிவும் இல்லாமல் அடக்கியே வைத்திருக்கிறது இச்சமூகம்.

அதுவும் திருமணத்திற்குப் பின் பெண்ணானவள் உடற்பயிற்சி என்பதைக் கனவில் தான் காண முடியும். இரு சக்கர வாகனத்தில் கணவரோடு சென்றால் கூட சேலை கட்டி ஒரு பக்கமாகக் காலைத் தொங்க விட்டுதான் உட்கார வேண்டும். விழுந்து காயம் ஏற்பட்டாலும் கவலை இல்லை! சுடிதார் போட்டுக்கொண்டு இருபக்கமும் காலை வைத்து ஓட்டும் முறைதான் பாதுகாப்பானது, வசதியானது, முதுகு வலியும் வராது. கணவரோடு செல்லும்போது இரு புறமும் காலைப் போட்டு உட்கார்ந்து ( கணவர் பகுத்தறிவுவாதியாக இருந்து அவரது வற்புறுத்தலால்) செல்லும் பெண்கள் கொச்சைபடுத்தப் படுகிறார்கள். அதுவும் பணியில் இருக்கும் சக பெண் ஊழியர்களாலேயே என்பது தான் மன வேதனை. இதில் கொடுமை என்ன வென்றால் அதுவே அவருக்குப் பட்ட பெயராகி விடுவதுதான்.

மிதி வண்டி ஓட்டிச் சென்று கீழே விழுந்தால் கூட காயம் பட்டதா என்று பார்க்காமல் கல்யாண மான பொட்டச்சி தெருவுல அசிங்கமா விழுந் துட்டா என்றுதான் சொல்லிக் காட்டுவர். இந்தச் சமூகம் பண்பாடு எனும் பேரில் இதைப்பேசும் போது உடலெல்லாம் கூசி நிற்க வேண்டிய தாய் ஆகிறது.

இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட சமூகத்தில் இந்தப் பார்வையுள்ள சமூகத்தில் ஒரு பெண் அதுவும் திருமணம் ஆன பெண் தன் உடல் நலத்தைப் பேண உடற்பயிற்சி பொது வெளியில் செய்ய வேண்டும் என்றால் அது அதிக பட்சம் நடைப் பயிற்சி மட்டுமே. ஆனால் எந்த வயது ஆணாக இருந்தாலும் ஓடலாம், கால்களை ஆட்டி பயிற்சி செய்யலாம். பெண் இது போன்ற பயிற்சி செய்ய வேண்டும் என்றால் வீட்டில் அதற்கான கருவியில் வேண்டுமானால் செய்து கொள்ளலாம். அதுவும் கருவி வாங்கக் காசு உள்ளவர்களால் மட்டும். சாதாரண, நடுத்தரக் குடும்பப் பெண்களுக்கு இது வாய்ப்பே இல்லை.

இதற்குத்தான் கயமைத்தனமாக வீட்டைக் கூட்டுவது ஒரு exercise, வாசலைக் கூட்டி தண்ணீர் தெளிப்பது ஒரு exercise, கோலம் போடுவது ஒரு exercise. இதெல்லாம் ஒருவகை யோகாசனம் என்று விளக்கம் வேறு. (படையப்பா படத்தில் ரஜனி) ஏன் யோகாவே

எந்தப் பெண்ணும் பொது வெளியில் exercise பண்ணக்கூடாது என்பதற்காகவே நிறைய ஆண்கள் தங்களது மனைவிகளை யோகா வகுப்புகளுக்கு அனுப்புவது கண்கூடு. உண்மையில் அப்படிச் செல்லும் பெண்களுக்கு எந்தச் சிக்கலும் தீர்ந்த பாடில்லை என்பதே என் அனுபவ அறிவு.

நடைப்பயிற்சிதான் பிடிக்கும் என்றால் பிரச்சனையில்லை. ஆனால் மெதுவாக ஓடுதல், கை கால் நீட்சி செய்தல் போன்ற பயிற்சிகள் செய்ய விரும்பும் பெண்களின் நிலைதான் சிரமம். இப்பயிற்சிகள் செய்யும் திருமணமான பெண்ணைப் பார்க்கும் ஆண்களின் அயோக்கியப் பார்வை களைப் பொருட்படுத்தாமல் செய்வது என்பது மிகப் பெரிய மனப் போராட்டம்தான். இதில் உள்ள முக்கியமான விசயம் ஓடுதல், நீட்சி செய்தல் போன்ற பயிற்சிகள் நடைப்பயிற்சியை விட உடலை உறுதியாக்குகிறது. மனத் துணிவுக்கு உடற் துணிவு மிக அவசியம். இவற்றை உடைக்க திருமணமான பெண்கள் பொது வெளியில் இது போன்ற பயிற்சிகளைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். இப்படி நாம் செய்யச் செய்யத்தான் வெற்றி பெறுவோம்!!

**கண்ணுக்குத் தெரியாத அடிமைத்தனங்களால் பெண்கள் கட்டுண்டு இருக்கிறார்கள். அதைத் தகர்த் தெறிந்தாலே ஆணுக்குச் சரிநிகராவாள் பெண். உடற்பயிற்சி என்றாலே அது 'ஆண்மை' சம்பந்தப் பட்டது என்கிற எண்ணம் நம் சமூகத்தில் பெரும் பாலானவர்களிடையே உள்ளது. அந்த 'ஆண்மை' உலகிலுள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பில்லை என்பதை பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். "உலகத்தில் 'ஆண்மை'என்ற தத்துவம் அழிக்கப் பட்டாலல்லாது பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது உறுதி. 'ஆண்மை'யால்தான் பெண்கள் அடிமையாக்கப் பட்டிருக்கிறார்கள். சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் "ஆண்மை"க்குத் தான் அவைகள் உண்டென்று, ஆண் மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள்."**

- தோழர் பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? பக் 75, 76

( குறிப்பு: இது முழுக்க என் சொந்த அனுபவமே!! உடற்பயிற்சியிலும் "ஆண்மை" இருந்ததை உணர்ந்தேன். பெரியாரியலால் தகர்த்தேன்!!





# மத்திய தொழில்நுட்ப நிறுவனங்களில் B.Tech படிக்க

இந்தியாவில் CFTI (Centrally Funded Technical Institutes)என்றழைக்கப்படும் மத்திய அரசின் நிதியில் இயங்கும் தொழில்நுட்ப நிறுவனங்கள், IIT (Indian Institute of Technology), NIT (National Institute of Technology), IIIT (Indian Institute of Information Technology), IISER (Indian Institute of Science Education and Research), IIST (Indian Institute of Space Science and Technology) என பல மத்திய தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் உள்ளன.

### JEE தேர்வு

இந்தியாவைப் பொறுத்த வரை தரமான தொழில் நுட்பக் கல்வியை வழங்கும் மேற்கூறிய நிறுவனங்களில் இளங்கலைப் பொறியியல் பட்டப் படிப்பான பி.டெக் படிக்க Joint Entrance Examination (JEE) என்னும் நுழைவுத் தேர்வை எழுத வேண்டும். JEE தேர்வு, ஒவ்வொரு ஆண்டும் ஏதேனும் ஓர் ஐ.ஐ.டி ஆல் நடத்தப்படுகிறது. இது இரண்டு கட்ட நுழைவுத் தேர்வாகும்.

அதாவது, மாணவர்கள் முதலில் JEE Main என்னும் தேர்வை எழுத வேண்டும். அதில் தேர்ச்சியடையும் மாணவர்கள் இரண்டாம் கட்டத் தேர்வான JEE Advanced என்னும் தேர்வை எழுத வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 12 இலட்சம் மாணவர்கள் JEE Main தேர்வுக்கு விண்ணப்பிக்கின்றனர். 2018 இல், JEE Main தேர்வில் வெற்றி பெறும் முதல் 2,24,000 மாணவர்கள் JEE Advanced தேர்வெழுதத் தகுதியடைவர் என அறிவித்துள்ளனர். இந்த எண்ணிக்கையானது 2016 இல் 2,00,000 ஆகவும், 2017 இல் 2,20,000 ஆகவும் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வெண்ணிக்கை மாறும்.

### JEE Main நுழைவுத் தேர்வு

B.Tech படிக்க, JEE Main தேர்வின் முதல் தாளிற்கு (Paper-1) மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். டிசம்பர் முதல் வாரத்திலிருந்து ஜனவரி முதல் வாரம் வரை www.jeemain.nic.in என்ற இணையதளத்தில் தேர்வுக்கான கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். 2016 அல்லது 2017 ஆம் ஆண்டில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வெழுதிய மாணவர்களும், இந்த ஆண்டில் (2018 இல்) பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதவிருக்கும் மாணவர்களும் மட்டுமே "JEE Main-2018" தேர்வை எழுதத் தகுதியுடையவர்கள் ஆவர். எனவே, ஒரு மாணவர் 3 முறை மட்டுமே "JEE Main" தேர்வை எழுத முடியும்.

பெரும்பாலும் ஏப்ரல் மாதத்தில் இத்தேர்வு நடத்தப்படும். தேர்வுக்கான பாடத்திட்டத்தை (Syllabus) தேர்வுக்கு விண்ணப்பித்த இணையதளத்திலேயே பெறலாம். வினாத்தாளை இந்தி, ஆங்கிலம் ஆகிய ஏதேனும் ஒரு மொழியில் மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் குஜராத், டையூ டாமன் மற்றும் தாத்ரா நகர் ஹவெலி ஆகிய இடங்களில் தேர்வெழுதும் மாணவர்கள் மட்டும் குஜராத்தி மொழியிலும் வினாத்தாளைப் பெறலாம்.

இத்தேர்வின் கால அளவு 3 மணி நேரம். வினாத்தாளில் இயற்பியல், வேதியியல், கணிதம் என மூன்று பகுதிகளிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் 30 கேள்விகள் வீதம் மொத்தம் 90 கேள்விகள் இருக்கும். ஒவ்வொரு சரியான விடைக்கும் 4 மதிப்பெண் என மொத்தம் 360 மதிப்பெண்களுக்கு இத்தேர்வு நடைபெறுகிறது. ஒவ்வொரு தவறான விடைக்கும் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும்.

பெரும்பாலும், ஏப்ரல் மாத இறுதியில், இத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். இத்தேர்வின் மதிப்பெண் அட்டையில் மதிப்பெண்கள், இந்திய அளவில் அம்மாணவர் பெற்ற ரேங்க் (All India Rank), JEE Advanced தேர்வை அம்மாணவர் எழுதலாமா? போன்ற தகவல்கள் இடம் பெற்றிருக்கும்.

மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (The Ministry of Human Resource Development) 2017 ஆம் ஆண்டிலிருந்து JEE Main தேர்வில் இரண்டு மாற்றங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. அவை...

1) JEE Main தேர்வின் ரேங்க் கணக்கிடுவதற்கு, பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் எடுத்துக் கொள்ளப்படாது. JEE Main தேர்வில் பெற்ற மதிப்பெண்களை வைத்து மட்டுமே ரேங்க் கணக்கிடப்படும்.

2) JEE தேர்வின் ரேங்க்-ஐ அடிப்படையாகக் கொண்டு NIT, IIT, IIIT, CFTI-களில் சேர்க்கை நடைபெறும். சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் SC/ST மாணவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பில் 65% பெற்றிருக்க வேண்டும். மற்ற மாணவர்கள் 70% பெற்றிருக்க வேண்டும்.

JEE Main தேர்வின் தரவரிசைப்படி, பொதுப் பிரிவைச் சேர்ந்த முதல் 1,13,120 மாணவர்கள் (50.5%), OBC-Non creamy layer பிரிவைச் சேர்ந்த முதல் 60,480 மாணவர்கள் (27%), SC பிரிவைச் சேர்ந்த முதல் 33,600 மாணவர்கள் (15%), ST பிரிவைச் சேர்ந்த முதல் 16,800 மாணவர்கள் (7.5%) என மொத்தம் 2,24,000 மாணவர்கள் JEE Advanced தேர்வை எழுதத் தகுதி பெறுவர்.

## JEE Advanced நுழைவுத் தேர்வு

JEE Main தேர்வில் தகுதி பெற்ற மாணவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் இரண்டு முறை மட்டுமே JEE Advanced தேர்வை எழுதலாம். அதாவது "JEE Advanced 2018" தேர்வை, 2017 அல்லது 2018 இல் பன்னிரெண்டாம் வகுப்பை முடித்த மாணவர்கள் மட்டுமே எழுத முடியும். JEE Advanced தேர்வை எழுத www.jeeadv.ac.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். வினாத்தாளை இந்தி, ஆங்கிலம் ஆகிய ஏதேனும் ஒரு மொழியில் மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இத்தேர்வானது பெரும்பாலும் மே மாதம் நடைபெறும்.

B.Tech சேர விரும்பும் மாணவர்கள் இத்தேர்விலுள்ள இரண்டு தாள்களையும் (Paper-1 and Paper-2) எழுத வேண்டும். ஒவ்வொரு தாளும் 3 மணி நேரம் நடைபெறும். முதல் தாள் காலையிலும், இரண்டாம் தாள் மதிய வேளையிலும் நடைபெறும். இரண்டு தாள்களிலும் JEE Main தேர்வைப் போன்றே இயற்பியல், வேதியல், கணிதம் என மூன்று பகுதிகளிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் 54 வினாக்கள் இருக்கும். ஆனால், JEE Advanced தேர்வின் மொத்த மதிப்பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் வேறுபடும்.

தேர்வுக்கான பாடத்திட்டத்தை (Syllabus) தேர்வுக்கு விண்ணப்பித்த இணையதளத்திலேயே பெறலாம். தேர்வு முடிவுகளை வெளியிடும் போது, மாணவர்களுக்கு மதிப்பெண் அட்டைகள் வழங்கப்படும். அதில் அவர்கள் பெற்ற மதிப்பெண், ரேங்க் (All India Rank) இடம் பெற்றிருக்கும்.

## JoSAA கலந்தாய்வு

இந்தியாவிலுள்ள 31 என்.ஐ.டி-கள், 23 ஐ.ஐ.டி.-கள், 23 ஐ.ஐ.ஐ.டி-கள் , 20 CFTI என மொத்தம் 97 நிறுவனங்களிலுள்ள B.Tech இடங்கள் JoSAA (Joint Seat Allocation Authority) என்ற கலந்தாய்வின் மூலம் நிரப்பப்படுகின்றன.

JEE Main தேர்வில் மட்டும் தகுதி பெற்ற மாணவர்களும் (அதாவது முதல் 2,24,000 மாணவர்கள்), JEE Advanced தேர்விலும் சேர்த்துத் தகுதி பெற்ற மாணவர்களும் இக்கலந்தாய்விற்கு ஜூன் மாதத்தில் https://josaa.nic.in/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் போதே மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான நிறுவனங்களையும், பாடப்பிரிவையும் வரிசைப்படுத்த வேண்டும்.

மாணவர்களின் JEE Main ரேங்க் அடிப்படையில் NIT, IIIT, CFTI, போன்ற நிறுவனங்களின் இடங்கள் நிரப்பப்படும். JEE Advanced ரேங்க் அடிப்படையில் IIT இடங்கள் மட்டுமே நிரப்பப்படும். எனவே IIT-இல் சேர்வதற்கு விரும்பும் மாணவர்கள் JEE Advanced தேர்விலும் சிறந்த ரேங்க் பெற்றிருக்க வேண்டும்.

இக்கலந்தாய்வு ஆன்லைனில் மட்டுமே நடைபெறும். மாணவர்களின் தரவரிசைப்படி, இடங்கள் ஒதுக்கப்படும். முதல் சுற்றில் விருப்பமான இடம் ஒதுக்கப்படவில்லையெனில், அடுத்த சுற்று வரை காத்திருக்க வேண்டும். இவ்வண்ணம் ஏழு சுற்றுகள் நடைபெறும். மாணவர்கள் தங்களுக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்த பின், அந்த நிறுவனத்திற்கு நேரடியாகச் சென்று மற்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், JEE Advanced தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மூலம் IISER, IIST போன்ற நிறுவனங்களிலுள்ள B.Tech இடங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

JEE Main மற்றும் JEE Advanced தேர்வுகளை சிறந்த முறையில் எதிர்கொண்டு, IIT NIT-களில் சேர விரும்பும் மாணவர்கள் ஒன்பதாவது வகுப்பிலிருந்தே அதற்குரிய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கி தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.





அதி அசுரன்

# பீமா கோரிகான்: திராவிடர் - ஆரியச் சமரின் தொடர்ச்சி

தமிழ்நாட்டில் 'திராவிடர்', 'பெரியார்' என்ற சொற்கள் எப்படிப் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன அடிமைகளுக்கும் விழுங்க முடியாத நெருப்புத் துண்டுகளாக இருக்கிறதோ, அதே அளவுக்கு அகில இந்திய அளவிலான பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன அடிமைகளுக்கும் 'பீமா கோரிகாவ்' வரலாறு ஒரு நெருங்கமுடியாத நெருப்பாகவே இருக்கிறது.

'பீமா கோரிகாவ்'. புனே மாநகரின் வடகிழக்கே 23 கி.மீ தொலைவில் உள்ள கோரிகாவ் என்ற ஊரில் உள்ள 'பீமா' என்ற நதிக்கரை தான் இந்த ஆண்டின் முதல் பரபரப்புச் செய்தி. நாம் அந்த ஊரை ஆங்கில உச்சரிப்பின் அடிப்படையின் 'கோரிகான்' என்கிறோம். மராட்டியர்கள் 'கோரிகாவ்' என்று அழைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக காட்டாறு ஏடு 01.01.2018 இல், அந்த வீரஞ்செறிந்த போரின் வீரவணக்கநாளை ஒரு உறுதி ஏற்பு நிகழ்வாக அறிமுகப்படுத்தியது. திருப்பூர், திண்டுக்கல் நகரங்களில் நடந்து முடிந்தது. கோபிச்செட்டிபாளையத்திலும் நடைபெற உள்ளது. திண்டுக்கல்லில் 'சாதி மதவெறி எதிர்ப்புக் கூட்டமைப்பு' அந்தப் போர் தொடர்பான இன்றைய சூழலையும் விவாதிக்கும் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வுகளை நாம் திட்டமிட்டதன் நோக்கம் ஒன்றுதான்.

**பார்ப்பனர்கள் நமக்கு அந்நியர்கள். இங்கு இந்தியப் பகுதியில் வாழும் பட்டியலின மக்கள், பிற்படுத்தப்பட்டவர், பழங்குடியினர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்ற அனைத்து மக்களும் ஒரே இனம்தான் என்பதைப் புரியவைக்க வேண்டும்.**

இது நமது நோக்கம் மட்டுமல்ல; தோழர் பெரியார், தோழர் அம்பேத்கர் போன்ற எண்ணற்ற தலைவர்களின் கருத்தும் இதுதான். இந்த நோக்கத்தைத் தெளிவாகக் கூறுவதற்கு வரலாறே நமக்குத் தந்த கொடைதான், பீமா கோரிகாவ் போர் வரலாறு.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இஸ்லாமிய, கிறிஸ்தவர்கள் ஓர்அணி. பார்ப்பன பேஷ்வாக்கள் எதிர்அணி. இந்து வேத, மனுசாஸ்திரத்திற்கு எதிராக நடந்த முதல் ஆயுதப் போராட்டம். பாரத வர்ஷம் என்ற பகுதி, இந்தியாவாக உருவாகிக் கொண்டிருந்த காலத்தில் நடந்த முதல் விடுதலைப் போராட்டம். ஒருவேளை இப்போராட்டம் தோல்வியைத் தழுவியிருந்தாலும், இப்போரை நாம் கொண்டாடியே ஆக வேண்டும். இந்த திராவிடர் - ஆரியச் சமரை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், மராட்டிய வரலாற்றில் கொஞ்சம் பின்னோக்கிச் சென்று, பிறகு 1818 க்கு வருவது நல்லது.

### சிவாஜி பட்டம் ஏற்கத் தடைவிதித்த பார்ப்பனர்கள்

கி.பி.1674 இல் மராட்டியப் பேரரசின் மன்னராக சிவாஜி முடிசூட்டிக்கொண்டார். அதற்கு முன்பு ஏறத்தாழ 370 போர்களில் வென்று தனது வீரத்தைப் புரியவைத்தவர் சிவாஜி. மாபெரும் வீரனாக இருந்தாலும், பார்ப்பனர்களுக்குப் பெரும் அடிமையாகவே இருந்தார்.

போர்வீரனாகவே வாழ்ந்து வந்த சிவாஜி, தனது ஆட்சியைத் தனது பார்ப்பன குரு இராமதாசுக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டு, அடுத்தடுத்த போர்க்களங்களை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். அவரது போராட்டக் காலங்களில், மராட்டிய அரச நிர்வாகம் முழுக்க முழுக்கப் பார்ப்பனர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. போராடிக் கொண்டிருந்த சிவாஜி, கொஞ்சம் நிதானித்து, தான் மன்னராகப் பட்டம் ஏற்க வேண்டும் என நினைத்தார். அதுவரை தலைமை நிர்வாகிகளாக இருந்த அவரது குரு இராமதாஸ் உட்பட அனைத்துப் பார்ப்பனர்களும் அதைக் கடுமையாக எதிர்த்தனர்.

இந்து மத வேதங்களின் படியும், சாஸ்திரங்களின் படியும் சூத்திரனான சிவாஜிக்கு மன்னராக முடிசூட்டிக் கொள்ளத் தகுதி இல்லை என்று மறுத்தனர். அவர்களின் எதிர்ப்பை மீறி உத்திரப் பிரதேசம் பகுதியிலிருந்து காகப்பட்டர் என்ற பார்ப்பனரை அழைத்து, பட்டமேற்க முடிவு செய்தார் சிவாஜி. காகப்பட்டரும் மனுசாஸ்திரப்படி சிவாஜி பட்டம் ஏற்க முடியாது என்றே கூறினார். ஆனால், அதற்குப் பிராயச்சித்தமாக 50 ஆயிரம் பார்ப்பனக் குடும்பங்களுக்கு பொன்னையும், பொருளையும், நிலத்தையும் கொடுக்க வேண்டும் என்று ஒரு மாற்றுவழி கூறினார். சிவாஜி அதை ஏற்றுக் கொண்டு காகப்பட்டர் கூறியதைச் செய்து கொடுத்தார். அந்தக் காலத்தில் அதற்காக அவர் செலவழித்த தொகை 7 கோடி ரூபாய்களாகும். 1674 இல் 7 கோடி ரூபாய் என்றால் 2018 ல் கணக்குப் போட்டுப் பாருங்கள்.

370 கோட்டைகளை வென்ற மாபெரும் வீரராக இருந்தாலும்-பெரும் நிலப்பரப்பை ஆள்பவராக இருந்தாலும் முடிசூட்டிக்கொள்வது என்ற சடங்கிற்காக அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கருவூலத்தையும் பார்ப்பனர்களுக்குக் கொட்டிக் கொடுத்து - பார்ப்பனர்களின் அங்கீகாரத்தைப் பெறத் துடித்தார். அதுதான் அன்றைய சமுதாய நிலை. ஆனால், அப்படி மன்னராகப் பதவியேற்றதில் பார்ப்பனர்கள் நடந்துகொண்ட மனுசாஸ்திர அணுகுமுறை மன்னர் சிவாஜியைப் பார்ப்பன எதிர்ப்பாளராக மாற்றியது.

### மனுசாஸ்திர எதிர்ப்பாளர் சிவாஜி

பார்ப்பனக் கொடுமைகளைக் கடந்து, கருவூலத்தையே காலியாக்கி, பட்டமேற்ற பின்னர் இரண்டு மாதங்களிலேயே மற்றும் ஒரு பட்டம் ஏற்பு விழாவை நடத்தினார் சிவாஜி. அது புத்த மத முறைப் படியான பட்டமேற்பு விழா ஆகும். 'சாக்கியபந்த்' என்று கூறப்படும் அந்த புத்த முறைப்படி, மன்னராக முடிசூடுபவர் ஒரு தலித் பெண்ணின் கணவராக இருக்கவேண்டும். அதனால், சிவாஜி ஒரு தலித் பெண்ணைத் திருமணம் செய்து, அதன் பின்னர் புத்தமுறைப்படி மகுடம் சூடிக்கொண்டார். இந்த 'சாக்கியபந்த்' தின் படி அவர் ஒரு இந்து அல்ல. புத்த மதத்தவர்.

பதவிஏற்புக்கு முன்னரேகூட, சில இந்துச் சட்டங்களை அவர் எதிர்த்திருக்கிறார். அந்தக் காலத்தில் கணவன் இறந்த உடன் உயிரோடு இருக்கும் மனைவியையும் அந்தத் தீயிலேயே போட்டு எரிக்கும் இந்துமதப் பண்பாடான 'உடன்கட்டை ஏறுதல்' மிக மிகக் கட்டாயமாக இருந்தது. ஆனால், சிவாஜியின் தந்தை சாகாஜி இறந்தபோது, சிவாஜி தனது தாயார் ஜிஜாபாயை உடன்கட்டை ஏற அனுமதிக்கவில்லை.

பதவி ஏற்ற பிறகு மக்கள் ஒடுக்கப்படுவதற்குக் காரணமான இந்து மதத்தின் மீதும், இந்து வேத சாஸ்திரச் சட்டங்களின் மீதும் பல நேரங்களில் எதிர்வினை ஆற்றினார். பார்ப்பனர்களுக்கு இணையாக, இஸ்லாமியர்களுக்கும், பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நிர்வாகங்களில் இடம் கொடுக்கத் தொடங்கினார்.

ஆயுதம் தாங்கும் உரிமையைச் சத்திரியர்களுக் குத்தான் கொடுத்துள்ளது மனுசாஸ்திரம். சூத்திரர்கள் மற்ற அனைத்து ஜாதிகளுக்கும் அடிமைச் சாதிகள். அவர்களது கடமை, பார்ப்பனர் களுக்கும், சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் அடிமை வேலைகள் செய்வது மட்டும்தான் என்கிறது மனுசாஸ்திரம். அந்த அடிப்படையில் தான் சூத்திரன் சிவாஜிக்கு பட்டம் மறுக்கப்பட்டது. பதவி ஏற்ற உடன் தனது மராட்டியப் படையில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், சிறுபான்மை இஸ்லாமியர் என அனைத்துப் பிரிவினரையும் இணைத்தார்.

கடல்கடந்து போரிடச் செல்லும்போது தவம் செய்து, யாகங்களை நடத்தி, பரிகாரங்களைச் செய்து, பார்ப்பனர்களுக்கு பொன்னையும், பொருளையும் கொடுக்க வேண்டும். ஆனால், பதவி ஏற்புக்குப் பிறகு சிவாஜி எந்தத் தவத்தையும், யாகத்தையும், பரிகாரங்களையும் மேற்கொள்ள வில்லை.

சூத்திரனுக்கு எதைக்கொடுத்தாலும் கல்வி யைக் கொடுக்கக்கூடாது, சூத்திரன் வேதங்களைக் காதால் கூடக் கேட்டுவிடக்கூடாது, கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றது மனுசாஸ்திரம். சிவாஜியோ தனது மகன் சாம்பா ஜிக்கு சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்த மொழியில் அவரது மகன் சாம்பாஜி பெரும் புலமை பெற்றார். அதன் வழியே பார்ப்பனர்களின் பித்தலாட்டங்களைப் புரிந்து கொண்டார்.

### சிவாஜியின் படையில் முஸ்லீம் தளபதிகள்

சிவாஜியின் இராணுவத்தில் குறிப்பிடத்தக்க அளவில் முஸ்லீம்கள் இடம் பெற்றிருந்தார்கள். ஏறத்தாழ 34 சதவீதம் படைவீரர்கள் இஸ்லா மியர்களாக இருந்தனர். சிவாஜியின் அனைத்து படையெடுப்புகளிலும் இருந்த மிகுந்த நம்பிக்கை வாய்ந்த தளபதிகளில் ஒருவர் ஹைதர் அலி கோஹரி ஆவார். காலாட்படைத் தளபதியாக நூர்கான் பெக் இருந்தார். கப்பற்படைத் தளபதிகளாக இப்ராஹிம் கானும், தௌலத்கானும் இருந்தார்கள். பீரங்கிப் படைக்கு சிட்டி இப்ராஹிம் தலைவராக இருந்திருக் கிறார். சிவாஜியின் மெய்க்காப்பாளர் ரஷ்டம் இ ஷமான் ஒரு இஸ்லாமியர்தான். சிவாஜியின் வாழ்க்கையில் இவர் மிக முக்கியமானவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

1659 நவம்பர் 10 ஆம் நாளில் பிஜப்பூர் சுல்தானின் படைகளுக்கும் சிவாஜியின் படைகளுக் கும் கடும் போர் மூண்டது. போருக்கு முன்பு, பிஜப்பூர் சுல்தானின் தளபதி அப்சல்கான் சிவாஜியைத் தனிமையில் சந்திக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்தத் தனிப்பட்ட சந்திப்பைத் திட்டமிட்டு, அதற்கு சிவாஜியிடம் ஒப்புதலைப் பெற்றவர் யார் தெரியுமா? அப்சல்

கானின் ஆலோசகராக இருந்த கிருஷ்ணாஜி பாஸ்கர் குல்கர்னி என்ற பார்ப்பனர் ஆவார்.

தனிப்பட்ட சந்திப்புக்கு பார்ப்பனர் ஏற்பாடு செய்கிறார் என்றவுடன், சிவாஜியின் மெய்காப்பாள ரான 'ரஷ்டம் இ ஷமான்' என்ற இஸ்லாமியர், சிவாஜியை எச்சரிக்கிறார். யாருக்கும் தெரியாமல் விரல் நகங்களில் கூரிய ஆயுதங்களைக் கொண்டு செல்லுங்கள் என ஆலோசனை தருகிறார். அதன் படி, வெளிப்படையான குறுவாளோடு, மறைமுக மாக விரல் நகத்திலும் ஆயுதத்தை மறைத்து எடுத்துச் சென்றார் சிவாஜி.

எதிர்பார்த்தபடியே, அப்சல்கான் சிவாஜி யைக் கட்டிப்பிடிப்பது போல இறுக அணைத்துக் கொலைசெய்ய முயற்சி செய்தான். வெளிப்படை யாக சிவாஜியின் இடுப்பில் இருந்த குறுவாளை அப்சல்கானின் ஆலோசகரான பார்ப்பனர் பிடுங்கிக் கொண்டு, சிவாஜியைக் குத்தினான். இருவரின் தாக்குதலில் இருந்தும் சிவாஜி தப்பினார். இஸ் லாமிய மெய்க்காப்பாளரும், சிவாஜியும் இணைந்து அப்சல்கானைக் கொன்றனர். பார்ப்பன குல்கர் னியை சிவாஜியே தலையை வெட்டிக் கொன்றார். அதன்பிறகு போர் தொடங்கியது. போரில் சிவாஜியின் படைகள் வென்றன.

அந்தக் காலத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு பெரிய குற்றம் செய்தாலும், அவர்களுக்கு மரண தண்டனை என்பது கிடையவே கிடையாது. மனுசாஸ்திரம் அந்தச் சட்டப் பாதுகாப்பை அவர் களுக்கு வழங்கி இருந்தது. அந்தத் துணிச்சலில் தான் பார்ப்பனர்கள் அனைத்து வகைத் துரோகங்களிலும் ஈடுபட்டனர். மனுசாஸ்திரப்படி நடந்திருக்க வேண்டிய சிவாஜி அதைப்பற்றிக் கவலைப்படாமல், கிருஷ்ணாஜி பாஸ்கரக் குல்கர்னியைப் படுகொலை செய்தார்.

கல்யாண் என்ற பகுதியில் இருந்த இஸ்லாமியர்களின் சமஸ்தானத்துக்கு எதிராக நடந்த போரில், கல்யாண்கோட்டையைக் கைப் பற்றிய மராட்டிய வீரர்கள், அந்நாட்டின் இளவரசி யைத் தூக்கிவந்து சிவாஜியிடம் ஒப்படைத்தனர். வீரர்களின் அச்செயலைக் கடுமையாகக் கண்டித்த சிவாஜி இளவரசியைப் பாதுகாப்புடன் மீண்டும் அவரது நாட்டுக்கே அனுப்பி வைத்தார். தனது பதவிக்காலத்தில், இந்து, முஸ்லீம் என அனைத்து மதக் கோவில்களுக்கும் ஏராளமான நிதி உதவி களைச் செய்தார். மசூதிகளைப் புதுப்பித்தார்.

இப்படித் தொடர்ச்சியாக, பார்ப்பனர் களுக்கும், இந்து மதச் சம்பிரதாயங்களுக்கும் எதிராக நடந்துகொண்டார். அதன் விளைவாக, சிவாஜியை வளர்த்தவர், ஆளாக்கியவர் என்று பார்ப் பனர்களால் கூறப்படும் குரு இராமதாஸே சிவாஜிக்கு விஷம் வைத்துக் கொன்றார். 1680 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் நாளில், மன்னர் சிவாஜியைக் கொன்ற இந்தப் பார்ப்பன இராமதாஸ் முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் உளவாளியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சத்ரபதி சாம்பாஜி**

சத்ரபதி சிவாஜிக்குப் பிறகு, அவரது மகன் சாம்பாஜி கி.பி.1680 இல் மன்னராகிறார். பார்ப்பன எதிர்ப்பில் தந்தை சிவாஜி காலங்கடந்து அறிவு பெற்றதைப் போல அல்லாமல், மன்னராகும் முன்பிருந்தே பார்ப்பன எதிர்ப்போடு வளர்ந்தார். சிவாஜியை விஞ்சிய வீரர். பார்ப்பனர்களை அஞ்சி நடுங்கச் செய்த சமூகநீதியாளர். நல்ல இலக்கியவாதி. மராட்டிய மொழியில், 'புத்தபூஷண்' என்ற புத்தமத விளக்க நூலை எழுதியவர். புத்த நெறியாளர்.

தனது தந்தையை விட ஒருபடி மேலேசென்று தனது ஆட்சி, அதிகாரங்களிலும், நிர்வாகங்களிலும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சம உரிமை, சம வாய்ப்பை அளித்தார். தந்தை சிவாஜியின் மரணத் துக்குப் பழிவாங்கும் விதமாக, 500 பார்ப்பனர் களைப் பிடித்து, அவர்களின் இரண்டு கைகளையும், யானையைக் கொண்டு மிதித்து உடைத்து, நசுக்கி எறிந்தார்.

பார்ப்பனர்களுக்குக் கடும் எதிரியாகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உற்ற தோழனாகவும் ஆளத் தொடங்கியதால், சத்ரபதி சாம்பாஜி மராட்டிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடம் சிவாஜியைவிட மிக அதிகமான நம்பிக் கையைப் பெற்றார். சாம்பாஜியைக் கருவறுக்கத் திட்டமிட்டுக் காத்திருந்த பார்ப்பனர்கள் ஔரங்க சீப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

1689 இல் ஔரங்கசீப்புக்கும் சாம்பாஜிக்கும் இடையே கடும் போர் மூண்டது. பிப்ரவரி 1 இல் தொடங்கிய போர் மார்ச் 11 இல் தான் முடிந்தது. போரில் சத்ரபதி சாம்பாஜி கைது செய்யப்பட்டார். உலகில் எந்த மனிதனுக்கும் நடந்திராத கடுமையான சித்ரவதைகள் அவர்மீது நடந்தன. முகலாயப் படைகளை முன்னிறுத்திக் கொடுமைகளை நடத்திய வர்கள் பார்ப்பனர்கள். சாம்பாஜியின் கண்கள் குருடாக்கப்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாக, சிறிது சிறிதாக சாம்பாஜியின் உடலை வெட்டிக் கூறு போட்டனர். சிதறிக் கிடந்த உடல் பாகங்களை 'வாது' என்ற ஊரில், பீமா நதிக்கரையில் வீசினர். உடலின் பாகங்களை தேடி எடுத்து எவரும் இறுதிச் சடங்குகள் செய்யக்கூடாது என்றும் உத்தர விட்டனர். சாம்பாஜியின் படுகொலைக்குக் காரண மானவர் அவரது நண்பராக நடித்து ஔரங்க சீப்புக்குத் துணைபோன 'கலுஷா காப்ஜி' என்ற பார்ப்பனர் ஆவார்.

சாம்பாஜியின் உறவினர்களே - சொந்த ஜாதியினரே இறுதிநிகழ்வுகளைச் செய்யப் பயந்து ஒதுங்கினர். வரலாற்றில் மிகப்பெரும் பேரரசன், பார்ப்பனர்களை எதிர்த்ததால் அனாதையாக - உடலே கிடைக்காத அளவுக்கு மிகக்கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுக்கிடந்தார். தாழ்த்தப் பட்ட மகர் இனத்தைச் சேர்ந்த 'கோவிந்த் கோபால் கெய்க்வாட்' தனது உயிரைத் துச்சமாக எண்ணி, சாம்பாஜி மன்னரின் உடலின் பாகங்களைத் தேடி எடுத்து, அடக்கம் செய்து, இறுதி மரியாதை

செலுத்தினார். சாம்பாஜியின் நினைவிடத்திலேயே கோவிந்த் கோபாலுக்கும் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப் பட்டுள்ளது.

நாடே எதிர்த்த நிலையிலும், சாம்பாஜியை நல்லடக்கம் செய்ய ஒரு தலித் துணிந்துள்ளார் என்ற வரலாறு, கோவிந்த கோபாலின் துணிச்சலைப் பதிவுசெய்வதோடு - சாம்பாஜி மன்னர் ஒடுக்கப் பட்ட மக்களுடன் எந்த அளவுக்குத் தோழமையாக ஆட்சி செய்துள்ளார் என்பதையும் உணர வைக்கிறது.

**சாம்பாஜி வீரமரணத்துக்குப் பின் பார்ப்பன பேஷ்வாக்களின் ஆட்சி**

சத்ரபதி சாம்பாஜியின் மறைவிற்குப் பிறகு, சாம்பாஜியின் சகோதரர் இராஜாராம் மராட்டிய அரசராகப் பதவி ஏற்றார். இவர் ஆரம்பக் காலத் திலிருந்தே பார்ப்பனர்களின் செல்லப்பிள்ளை யாகவே வளர்ந்தவர். சாம்பாஜியின் மனைவியும் மகனும் ஔரங்கசீப்பால் கைது செய்யப்பட்டு, டில்லியில் சிறை வைக்கப்பட்டனர். இராஜாராமின் மறைவிற்குப் பிறகு 1700 இல் அவரது மூத்த மனைவி தாராபாய் பதவி ஏற்றார். எட்டு ஆண்டுகள் கழித்து டில்லி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாம்பாஜி யின் மகன் சாகுஜி கி.பி.1708 இல் மராட்டிய அரசானார்.

இந்த சாகுஜியின் ஆட்சியில் தான் பாலாஜி விஸ்வநாத் பாஜிராவ் என்ற பார்ப்பனர் 1713 இல் ‘பேஷ்வா’வாக, அதாவது பிரதமராக அறிவிக்கப் படுகிறார். இவர் மராட்டிய சித்பவன் பார்ப்பனர் ஆவார். இந்த சித்பவன் பார்ப்பனர்கள் தான் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு தொடங்கிய காலம் முதல் இன்று வரை தேசியத் தலைவர்களாக பதவி வகிக்கின்றனர். காந்தியைப் படுகொலை செய்த நாதுரம் கோட்சேயும் சித்பவன் பார்ப்பனர்தான்.

இந்த வரலாறு எதற்காக என்றால், இந்துவான சாம்பாஜிக்கும் - முஸ்லீமான ஔரங்கசீப்புக்கும் இடையே போர் என்றால், வெற்றி பெற்ற ஔரங்கசீப்தான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். ஒரு இஸ்லாமியரிடம் ஆட்சிப் பொறுப்பு போயிருக்க வேண்டும்.

ஆனால் பார்ப்பன அடிமையான - இந்துவான - இராஜாராம் எப்படி ஆட்சிக்கு வந்தார்? ஔரங்கசீப் கைதுசெய்து கொண்டு சென்ற சாகுஜி 18 ஆண்டுகள் கழித்து மீண்டும் மராட்டியத்துக்கு அனுப்பப்பட்டு அரசராகிறார். அரசரான உடனே யே பாஜிராவ் தலைமை அமைச்சராகிறார். அவருக்குப் பிறகு இரண்டாம் பாஜிராவ் ஆட்சிக் காலம் வரை - கி.பி.1818 ஜனவரி 1 ஆம் நாள் வரை மராட்டியத்தின் ஆட்சி முழுக்க முழுக்க பேஷ்வாப் பார்ப்பனர்களிடமே இருந்தது.

எனவே நடந்தது இந்து-முஸ்லீம் போர் அல்ல; பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதாருக்கிடையே நடந்த போர். திராவிடர்-ஆரியர் போர். இதில் பார்ப்பனர் கள் இஸ்லாமியர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை. இந்த வரலாறு களைப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் தான் 1818 ஜனவரி முதல் நாள் நடந்த பீமா கோரிகாவ் போரையும் - 2018 ஜனவரியில் தலித்துகள் மீது நடந்த தாக்குதல்களையும் பார்க்க வேண்டும்.

**பீமா கோரிகான் போர்**

சாம்பாஜி மறைவுக்குப் பிறகு 1689 லிருந்து பேஷ்வாக்கள் முழுமையாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்களது காலத்தில், இந்து மத வேதங்களின் சட்டத்தொகுப்பான மனுசாஸ்திரம் முழுவீச்சில் கடுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டது. சிவாஜி. சாம்பாஜி மன்னர்களின் காலத்தில் பார்ப்பனக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றிருந்த மராட்டியத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் மீண்டும் புதைகுழிக்குள் தள்ளப்பட்டார்கள். விடுதலை நெருப்பு அவர்களுக்குள் கனன்று கொண்டே இருந்தது.

1817 இல் ஆங்கிலேயர்களுக்கும், பேஷ்வாப் பார்ப்பனர்களுக்கும் மோதல் அதிகரித்தது. இரு தரப்புக்கும் இடையே போர் மூண்டது. போருக்கு முன்பாக, மகர்களின் தளபதி சித்தநாக், பார்ப்பன மன்னரான இரண்டாம் பாஜிராவைச் சந்திக்கிறார். ஆங்கிலேயர் தாக்குதல் நடத்தப்போகும் வேளையில் பாஜிராவிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறார். இனி மேலாவது பார்ப்பன, மனு சாஸ்திரக் கொடுமை களிலிருந்து விலக்கு அளியுங்கள். உங்களுக்காக நாங்கள் போரிடுகிறோம் எனக் கூறுகிறார். போர் மேகம் சூழ்ந்த நிலையிலும், தான் தோற்றாலும் பரவாயில்லை. இந்து மத தர்மங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஆதிக்க வெறியில், தளபதி சித்தநாக்கை அவமதிக்கிறார் பாஜிராவ்.

அதன் பிறகு தான், இந்து வேதங்களுக்கு எதிராக மகர்களும், பிற்படுத்தப்பட்ட மராட்டா ஜாதியினரும், ராஜ்புத் என்ற ஜாதியினரும், இஸ்லாமியரும் இணைந்து ஆங்கிலேயருடன் கைகோர்த்துப் போரைத் தொடங்குகின்றனர்.

போர் தொடங்கிய 12 மணி நேரத்தில் பாஜிராவின் படைத் தலைவர் பார்ப்பனக் கோகலே உட்பட 600 பார்ப்பனர்கள் கொல்லப்பட்டார்கள். 20000 க்கும் மேற்பட்ட பார்ப்பனப் படைவீரர்கள் சிதறி ஓடினர். மராட்டியம் பார்ப்பனரின் நேரடிக் கொடுமைகளிலிருந்து சில காலம் விடுதலை பெற்றது. அந்த வரலாற்றைக் கடந்த இதழில் விரிவாகப் பார்த்தோம்.

**சாம்பாஜி ப்ரிகேட்: “நாங்கள் இந்துக்கள் அல்ல”**

சிவாஜி - சாம்பாஜி காலத்தில் தாழ்த்தப்பட்ட வர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், சிறுபான்மை யினரும் மனிதர்களாக மதிக்கப் பட்டார்கள். ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். அதனால்தான் இன்றும் மராட்டிய மக்கள் இந்த இரு மன்னர் களையும் தங்கள் வழிகாட்டிகளாகக் கருது கிறார்கள்.

01.01.2018 அன்று பீமாகோரிகானில் உள்ள வெற்றித் தூணின் அருகே, தோழர் அம்பேத்கர் சிலையும், சிவாஜியின் சிலையும் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான தாழ்த்தப் பட்ட மக்களும் ஆயிரக்கணக்கான பிற்படுத்தப்

பட்ட, இஸ்லாமிய மக்களும் பீமா நதிக்கரையில் உள்ள வெற்றித்தூணுக்குச் செல்லும் முன்பாக - சாம்பாஜியின் உடல் விதைக்கப்பட்டுள்ள 'வாது' நினைவிடத்திற்கும், அங்குள்ள மகர் சமுதாய வீரர் கோவிந்த் கோபால் கெய்க்வாட் நினைவுச் சின்னத்திற்கும் மரியாதை செலுத்திவிட்டுத்தான் பீமா நதிக்கரைக்கு வருகின்றனர்.

மன்னர் சிவாஜியின் ஜாதியினர் பிற்படுத்தப்பட்ட சூத்திர வர்ணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கெய்க்வாட், போஸ்லே, மராட்டா எனப் பல பெயர்களில் உள்ளனர். (தலித்துகளிலும் கெய்க்வாட் என்ற பெயர் உள்ளது.) பொதுவாக மராட்டியத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 'மராட்டா' என அழைக்கப்படுகின்றனர். இந்த மராட்டா மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்ற அமைப்பு 'சாம்பாஜி ப்ரிகேட்' என்ற அமைப்பு ஆகும்.

1990 இல் உருவான 'மராட்டி சேவா சங்' என்ற அமைப்பின் முன்னணி அமைப்பாக 1997 இல் இந்த 'சாம்பாஜி ப்ரிகேட்' உருவானது. இந்த இரு அமைப்புகளையும் உருவாக்கியவர் புருஷோத்தம் கடேகர் ஆவார். சாம்பாஜியின் பரம்பரை வாரிசான 'பிரவீன் கேய்க்வாட்' என்பவர் இந்த அமைப்பின் தலைவராக இருந்துள்ளார். அரசியலிலும் சாம்பாஜி ப்ரிகேட் இறங்கியுள்ளது. ஆனால், பார்ப்பனர்களை உறுப்பினர்களாகக்கூடச் சேர்ப்பதில்லை என அறிவித்து அரசியலில் இயங்குகிறது.

இந்த அமைப்பினர் தங்களை இந்துக்கள் என்று சொல்வதில்லை. அவர்கள் 'சிவ்தர்மம்' என்ற பெயரில் மன்னர் சிவாஜியை வழிகாட்டியாகக் கொண்டு, தனி மதமாக அதை ஏற்று வாழ்ந்து வருகின்றனர். கடந்த 2002 லிருந்து இந்த சாம்பாஜி பிரிகேட் என்ற பிற்படுத்தப்பட்ட மக்களின் அமைப்பு, 'பீமா கோரிகாவ்' வெற்றியை வீரவணக்க நாளாகக் கொண்டாடிவருகிறது. இலட்சக்கணக்கான தலித் மக்களுடன் இந்த அமைப்பும் பீமாநதிக்கரைக்குச் செல்கிறது.

அம்பேத்கரின் பேரனான பிரகாஷ் அம்பேத்கர், 2018 ஜனவரி 4 ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில், பீமாகோரிகானில் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையே எந்த மோதலும் இல்லை. தலித்துகளுடன் 'சாம்பாஜி ப்ரிகேட்' என்ற பிற்படுத்தப்பட்ட அமைப்பும் இணைந்துதான் பீமா கோரிகான் நிகழ்ச்சியை நடத்துகிறது. அங்கு நடந்த தாக்குதலுக்குக் காரணம், ஆர்.எஸ்.எஸ் ஆதரவு இந்துமதவெறி அமைப்புகளே என அறிவித்துள்ளார்.

சாம்பாஜி பிரிகேட் நடத்தும் பல கூட்டங்களின் துண்டறிக்கைகளில் அம்பேத்கர், புத்தர் படங்கள் இடம்பெற்றுள்ளன. புனே நகரிலிருந்து கோரிகாவ் செல்லும் சாலை முழுவதும் உள்ள ஃப்ளக்ஸ்களில் அம்பேத்கர், புத்தர், சாம்பாஜி ஆகிய மூவரின் படங்கள் தவறாமல் இடம்பெற்றுள்ளன. பல இடங்களில் சிவாஜியின் படமும் உள்ளது. இந்த அளவுக்கு அமைப்புகள் அங்கே ஒற்றுமையாகவே இயங்குகின்றன.

## சிவாஜியைத் தனதாக்கிய பார்ப்பனர்கள்

மன்னர் சிவாஜி தனது இறுதிக்காலத்திலும், சாம்பாஜி தொடக்கத்திலிருந்தும் பார்ப்பன எதிர்ப்பாளர்களாகவே இருந்தனர். அதனாலேயே மராட்டிய மக்களிடம் இன்றுவரை நீங்காத இடம் பிடித்துள்ளனர். மராட்டிய மக்களிடையே சிவாஜி, சாம்பாஜி மன்னர்களுக்கு இருக்கும் செல்வாக்கைத் தங்களது ஆதிக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஆர்.எஸ்.எஸ் அமைப்பும், சித்பவன் பார்ப்பனர்களும் அதே சிவாஜி, சாம்பாஜி படங்களையும், பெயர்களையும் பயன்படுத்தி புதுப்புது அமைப்புகளையும், தலைவர்களையும் உருவாக்குகின்றனர். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலும் 'சிவசேனா' என்ற பெயரில் இந்து மத வெறி அமைப்புகள் இயங்குவதைப் பார்க்கிறோம்.

மேற்கண்ட மராட்டிய மன்னர்களின் வரலாற்றை நாம் கூறுவதற்கான அடிப்படைக் காரணம் சிவாஜியையோ, சாம்பாஜியையோ பார்ப்பனர்களிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும்; தமிழ்நாட்டில் முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அந்த மாபெரும் பார்ப்பன எதிர்ப்பாளர்களுக்கு நேர்ந்த நிலை இனி வேறு எந்தத் தலைவருக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே கூறினோம்.

## தாக்குதலுக்குக் காரணம் என்ன?

வரலாற்று அடிப்படையிலும், 2018 ஜனவரி 1 நிகழ்விலும் பீமா நதிக்கரையில் தலித்துகளுக்கும் - பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இடையே எந்தச் சிக்கலும் இல்லை. கடந்த 200 வருடங்களாக அங்கு நடைபெறும் வீரவணக்கநாள் நிகழ்வுகளில் எந்தச் சிறு சிக்கலும் ஏற்படவில்லை. சட்டம் - ஒழுங்குக்கு எந்தப் பாதிப்பும் எழுந்ததில்லை.

இலட்சக்கணக்கான மக்கள் கூடும் இடத்தில் பாதுகாப்புக்கு வந்திருந்த காவலர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதிர்ச்சியான உண்மை இது. அதிகப்பட்சம் 50 காவலர்கள் மட்டுமே வந்திருந்தனர். புனே - அவுரங்காபாத் சாலையிலிருந்து, சாம்பாஜி மன்னரின் நினைவிடத்துக்குச் செல்லும் பிரிவில் மட்டும் 10 காவலர்கள் போக்குவரத்தை ஒழுங்குசெய்தனர். கோரிகாவ் 3 கி.மீக்கு முன்பு எல்.இ.டி ப்ரொஜெக்டரில், பிரதமர் மோடி அவர்களின் பிரச்சார ஆவணப்படம் ஒன்று ஓடிக்கொண்டே இருந்தது. அந்த இடத்துக்கு 5 காவலர்கள் போடப்பட்டிருந்தனர். மேலும் ஒரு சில காவலர்கள் ஜீப்பில் இருந்தனர். அவ்வளவுதான்.

'அகில பாரத பிராமண மகாஜனசபா' என்ற பார்ப்பன அமைப்பு, வெளிப்படையாக,

**"பீமா கோரிகான் போராட்டம் என்பது தேச விடுதலைக்கு எதிராக நடந்த போராட்டம். அதைக் கொண்டாடுவது தேசத்துரோகம்"** என்று அறிக்கை வெளியிட்டு, அந்த நிகழ்வுகளைத் தடைசெய்ய வேண்டும் என்று காவல்துறையில் புகார் அளித்துள்ளது.

*2017 டிசம்பர் 31 இல் புனே நகரில் பிரகாஷ் அம்பேத்கர் தலைமையில், ஜிக்னேஷ் மேவானி உள்ளிட்ட பல தலைவர்கள் பங்கேற்கும் பீமா கோரிகான் நினைவுக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது. அதற்கு அனுமதி வழங்கக்கூடாது என இந்தப் பார்ப்பன அமைப்பு அறிக்கை வெளியிட் டுள்ளது.*

*கடந்த ஆண்டுவரை சட்டம் ஒழுங்குக்கு எந்தச் சிக்கலும் உருவாகாத நிலையில், 2017 டிசம்பர் 29 இல்,* **'சிவப்ரதிஷ்டான் ஹிந்துஸ்தான்', 'சமஸ்தா ஹிந்து ஏகாடி'** *என்ற இரு அமைப்புகளும் ஒரு குழப்பத்தை அரங்கேற்றின. இந்த இரு அமைப்பு களின் தலைவர்களும் பார்ப்பனர்கள். இவர்களால் தூண்டப்பட்ட சில மராட்டா ஜாதியினர், சாம்பாஜி நினைவிடத்தில் உள்ள கோவிந்த் கோபால் கெய்க் வாட் என்ற மகர் இன வீரரின் பெயரை அழித் துள்ளனர். அதன் காரணமாக, வன்கொடுமை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த சிவப்ரதிஷ்டான் என்ற அமைப்பின் தலைவர்* **'மனோகர் பைடே'** *என்பவர் ஒரு சித்பவன் பார்ப்பனர். 10 வயதில் இருந்து ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் முழு நேரப் பணியாளராகப் பணியாற்றி யவர். பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற பிறகு ஆர்.எஸ்.எஸ். இவரது தலைமையில் ஒரு அமைப்பை உருவாக்கியது. அமைப்புக்குத் தலைவராகும் போது இவரது பெயரை* **'சாம்பாஜி பைடே'** *என்று மாற்றிக் கொண்டார். 2014 பாராளுமன்றத் தேர்தலின் போது, இவரது தலைமையில் நடந்த ஒரு கூட்டத்துக்கு நரேந்திர மோடி வந்திருந்தார். அக்கூட்டத்தில் அப்போதைய பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி பேசியது...*

*"குரஜி இந்தக்கூட்டத்திற்கு அழைக்கவில்லை. கட்டளை இட்டார். அவரது கட்டளைக்கு இணங்க இங்கு வந்துள்ளேன்" என்றார். மோடியையே கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் பார்ப்பனர்தான் இந்த மனோகர் பைடே. மற்றொரு கலவர அமைப்பின் தலைவராக* **'மிலிந்த் ஏக் போடே'** *வும் சித்பவன் பார்ப்பனர்தான். 1997 லிருந்து பி.ஜே.பி. யில் முக்கியப் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.*

1. எந்த ஆண்டும் இல்லாத எதிர்ப்புகள் இந்த ஆண்டு உருவானதைத் தொடர்ந்து, பார்ப்பன முதல்வர் பட்னாவிஸ் அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும்.

2. அவுரங்காபாத் - புனே நான்கு வழிச் சாலையில், புனே யிலிருந்து பீமா கோரிகாவ் செல்லும் வழியில் 10 கி.மீக்கு முன்பே வாகனங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால், அதே சாலையில், அவுரங்காபாத்திலிருந்து பீமா கோரிகான் வரும் வழியில் அதாவது, எதிர்த்திசையில், வாகனங்கள் தடைசெய்யப் படவில்லை. பீமா நதியின் பாலம் வரை அனைத்து வாகனங்களும் அனுமதிக்கப் பட்டன. அந்தப் பாலத்தின் அருகேதான் வாகனங்கள் தாக்கப்பட்டன. எரிக்கப்பட்டன. இது அரசே கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தை உருவாக்குகிறது.

**பார்ப்பன அமைப்பின் எதிர்ப்பை அம்பலப்படுத்தாதது ஏன்?**

*மராட்டிய மண்ணின் பார்ப்பன எதிர்ப்பு வரலாற்றின் தொடர்ச்சியாக சில தலித் அமைப்பு களும் - சில பிற்படுத்தப்பட்ட அமைப்புகளும் - சில இஸ்லாமிய அமைப்புகளும் ஒன்றிணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர். வாமன் மேஷ்ராம் தலைமையிலான பாம்செஃப் அமைப்பும், சாம்பாஜி ப்ரிகேட் அமைப்பும் பார்ப்பன எதிர்ப்பு நோக்கில் மக்களைத் திரட்டுகின்றனர். இந்த இரண்டு அமைப்புகளையும் தடை செய்ய வேண்டும் என்று 'சிவபிரதிஷ்டான்' தலைவர் பார்ப்பன 'மனேகர் பைடே' அறிக்கை வெளியிட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.*

*தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை யின மக்களிடையே பார்ப்பன எதிர்ப்பு மனநிலை உருவாகி விடக்கூடாது - ஒருங்கிணைப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக, இந்து பயங்கரவாத அமைப்புகள் திட்டமிட்டு நடத்திய கலவரம் தான் 2018 ஜனவரி 1 இல் பீமா கோரிகானில் நடந்த கலவரம்.*

*காவிப் பார்ப்பனர்களின் கனவு பலிக்க வில்லை. அவர்களது திட்டம் அவர்களுக்கே எதிராகத் திரும்பிவிட்டது. பீமா கோரிகான் கலவரங்களுக்கு எதிராக நடந்த போராட்டங்களில், 250 க்கும் மேற்பட்ட தலித் அமைப்புகளும், பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின அமைப்பு களும், கம்யூனிச இயக்கங்களும் இணைந்து போராடினர்.*

*அனைவரும் இந்தக் கலவரங்களுக்குக் காரணமான இந்து மதவெறி அமைப்புகளின் தலைவர்களான சாம்பாஜி பைடே, ஏக் போடே இருவரையும் தூக்கிலிட வேண்டும் என அறிவித்தனர். பிரகாஷ் அம்பேத்கர் அறிக்கையாக வெளியிட்டுள்ளார். மராட்டா கிராந்த்தி மோர்ச்சா, சாம்பாஜி ப்ரிகேட் போன்ற பிற்படுத்தப்பட்டோர் அமைப்புகளும் இதே கோரிக்கையை முன்வைத்துத் தொடர்ச்சியாகப் போராடிவருகின்றன.*

*இந்து மதவெறி அமைப்புகளுக்கு எதிராக மராட்டிய மண்ணின் மைந்தர்கள் ஒருங்கிணைந்து நடத்திய முழுஅடைப்புப் போராட்டம் ஒட்டு மொத்த இந்தியாவையே மிரட்டியது மகிழ்ச்சிதான். ஆனால், கலவரங்களுக்குக் காரணமான முக்கிய மான அமைப்பு 'அகில பாரத பிராமண மகாஜனசபா' ஆகும். வெளிப்படை யாகவே,* **"பீமா கோரிகான் போராட்டம் என்பது தேச விடுதலைக்கு எதிராக நடந்த போராட்டம். அதைக் கொண்டாடுவது தேசத்துரோகம்"** *என்று அறிவித்தது. அந்த அமைப் பைக் கலவரங்களுக்குக் காரணமான அமைப்பாக எவரும் அறிவிக்கவில்லை. பாம்செஃப் மட்டும் அறிவித்தது. நூற்றுக்கணக்கான தலித் அமைப்பு களும், பிற்படுத்தப்பட்ட அமைப்புகளும் இணைந்து முழுஅடைப்பு நடத்தினாலும், உண்மையான எதிரியைத் தப்பவிடுவது ஏன் என்பதுதான் நெருடலாக உள்ளது.*

**தமிழ்நாட்டில் முதன்முறையாக பீமா கோரிகான் வீரவணக்கநாள்**

மேற்கண்ட 400 ஆண்டு கால வரலாறுகளின் அடிப்படையில், பார்ப்பன எதிர்ப்பு - பார்ப்பனர் அல்லாதார் ஒருங்கிணைப்பு என்ற நோக்கத்தில், இந்த 2018 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதன் முறையாக, பீமா கோரிகான் 200 வது வீரவணக்க நாளை ஒரு உறுதி ஏற்பு நிகழ்வாகக் காட்டாறு ஏடு திட்டமிட்டது. திருப்பூரில் காட்டாறு ஏடு சார்பாகவும், திண்டுக்கல்லில் சாதி மதவெறி எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பாகவும் உறுதி ஏற்புகள் நடந்தன.

ஜாதி ஒழிப்பில் அக்கறை உள்ளவர்கள் என நாம் நம்பியிருந்த பல தோழர்கள் இதை வரவேற்றனர். பலர் கள்ளமவுனம் காத்தனர். சில தோழர்கள் வெளிப்படையாக எதிர்த்தனர்.

**“ பிற்படுத்தப்பட்டவர்கள் இதில் பங்கேற்க வில்லை. இது முழுக்க முழுக்க மகர் இனம் மட்டுமே களமாடிய போர்”,**

**“மகர் மக்களைத் ‘திராவிடர்கள்’ என்று கூறக்கூடாது”,**

**“இந்த இரண்டும் திராவிடத்தின் திரிபுகள் –தலித் மக்களின் அடையாளங்களை அழிக்கும் வேலைகள்”**

என்பது போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துச் சமூக வலைத்தளங்களில் களமாடினர்.

பார்ப்பனர்களை எதிர்த்து வென்ற இந்தப் போரில் 500 மகர் வீரர்கள் போரிட்டுள்ளனர். இது மகர்களின் வீரத்தைப் பறைசாற்றிய வெற்றி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. மகர் இன வீரர்கள் மட்டுமே போரிட்டனர் என்பது தவறான வரலாறு. தோழர் அம்பேத்கரே இவர்களுக்குப் பதில் அளித்துச் சரியான வரலாற்றைப் பதிவு செய்துள்ளார்.

அம்பேத்கர் தொகுப்புநூல் வரிசையில் ஆங்கிலத்தில் வெளியான தொகுதி 17, பிரிவு 3 லும், தமிழில் வெளியாகியுள்ள தொகுதி 37, பகுதி 1 லும் பீமா கோரிகான் போர் தொடர்பாக எழுதப் பட்டுள்ள கட்டுரையில் இருந்து...

**“போரில், சென்னை பீரங்கிப் படையினர், பம்பாய் உட்நாட்டுக் காலாட்படை இரண்டாம் பிரிவின் வீரர்கள் 50 பேர், பிரிட்டிஷ் அலுவலர்கள் 3 பேர் உயிர் துறந்தனர். கொல்லப்பட்ட பம்பாய் உட்நாட்டுக் காலாட்படை இரண்டாம் பிரிவின் வீரர்கள் ‘மகர்கள்’ எனப்படும் ‘பார்வாரி’ வகுப்பினர். (‘னாக்’ என்ற பெயர் விகுதிகளிலிருந்து இதை அறியலாம்) 16 மராத்தியர்கள், 8 ராஜ்புத்திரர்கள், இருவர் முஸ்லீம்கள், ஓரிருவர் இந்திய யூதர்கள்”**

பீமா கோரிகான் போர் என்பது தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - சிறுபான்மை - பழங்குடி மக்கள் ஒருங்கிணைந்து நடத்திய போர்தான் என்பதைத் தோழர் அம்பேத்கரே விளக்கிவிட்டார். மராட்டி மொழியில் அவர் எழுதியுள்ள “பாகிஸ்க்ரிட் பார்டாட்டில் அக்ரலேக்” என்ற நூலில் இருந்து இத்தகவல் தொகுக்கப்பட்டுள்ளது.

மேலும் பீமா கோரிகானில் உள்ள நினைவுச் சின்னத்தில் வீரமரணமடைந்த 49 வீரர்களின் பெயர்ப்பட்டியல் கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. வடநாடு என்பதால் அதில் அனைத்து வீரர்களின் ஜாதிப்பெயரும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அதில், ‘பவார்’, ‘சவான்’, ‘கோரே’ ‘சாவந்த்’ போன்ற பல மராட்டா ஜாதியினரின் பெயர்கள் உள்ளன. ஷேக் அகமத், அப்துல் கர்சான் என்ற இரண்டு இஸ்லாமியரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

தோழர் அம்பேத்கரும், பீமா கோரிகான் வெற்றித்தூணும் அறிவித்ததைத்தான் நாம் பதிவு செய்தோம். இது “தலித்துகளின் அடையாளத்தை அழிக்கும் முயற்சி - திராவிடத்தின் சூழ்ச்சி” என்று சாதி ஒழிப்பாளர்கள் என நாம் நம்பியவர்களே எதிர்ப்பது நியாயமா?

**திராவிடர் – ஆரியச் சமர் என்பது தவறா?**

பீமா கோரிகான் போரில் வீரமரணமடைந்த மகர் இன வீரர்கள் அனைவருக்கும் ‘நாக்’ என்ற விகுதிப் பெயர் இருக்கிறது. அதைத் தோழர் அம்பேத்கரே பதிவு செய்துள்ளதைப் படித்தீர்கள். அந்த ‘நாக்’ மக்கள்தான் நாகர்கள். நாகர்களுக்கும் திராவிடர்களுக்கும் என்ன தொடர்பு? இதோ அம்பேத்கரே விளக்குகிறார்.

**“நாகர்கள் – திராவிடர்கள் இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களே. ஒரே இன மக்களுக்கு உள்ள இரண்டு பெயர்கள் தான் நாகர் – திராவிடர்.”**

**“இந்தியாவில் நாகர்கள், ஆரியர்கள் என்ற இரண்டு இனம் இருந்தது. நாகர்கள் என்பது திராவிடர்களே. திராவிடம் என்பது மொழியால் வந்த பெயர். நாகர் என்பது இனப்பெயர்.”**

– தோழர் அம்பேத்கர்
ஆங்கில நூல் தொகுப்பு 7; பக்கம் 300

**“தமிழ் அல்லது திராவிடம் என்பது தென் இந்தியாவின் மொழியாக மட்டுமே இருக்கவில்லை; மாறாக அது ஆரியர்கள் வருவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழியாகவும் இருந்தது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை பேசப்பட்டு வந்தது என்பதே ஆகும். உண்மையில், இந்தியா வெங்கிலும் நாகர்களால் பேசப்பட்டு வந்த மொழி யாகவும் திகழ்ந்தது.”**

– தோழர் அம்பேத்கர் நூல் தொகுப்பு, (தமிழ்)
தொகுதி 14, பக்கம் 95

திராவிடர் என்பதற்குத் தோழர் பெரியார் கூறும் விளக்கத்தையும் பாருங்கள்.

**“முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் ‘திராவிடர்கள்’ என்ற தலைப்பின் கீழ் வருவார்கள்”.**

-தோழர் பெரியார் - குடி அரசு - 26.11.1939

எனவே, அழுத்தமாகச் சொல்வோம். பீமா கோரிகான் போர் என்பது திராவிடர் - ஆரியச் சமரே!

தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கக் காலமான 1925 - 1938 வரையில், அப்போது இருந்த பிற்படுத்தப்பட்ட ஜாதி அமைப்புகள், தாழ்த்தப் பட்டோருக்கான ஜாதி அமைப்புகள், சிறுபான்மை யினரின் அமைப்புகள் அனைத்தும் பார்ப்பன எதிர்ப்பில் அக்கறை கொண்டிருந்தன.


1928 இல் பெரியார் மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தை நடத்தியபோது, ஆதி திராவிட மகாஜனசபையும் மனுசாஸ்திரத்தை எரித்தது. மருத்துவர் குல சங்க மாநாடுகளிலும், உடை யார்கள், நாடார்கள், செட்டியார்கள் மாநாடு களிலும் மனுசாஸ்திரத்தை எரிக்க வேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. 1980 களில் மண்டல்குழு அறிக்கையை நிறைவேற்றக்கோரி பிற்படுத்தப்பட்ட ஜாதிச் சங்கங்கள் போராடிய காலங்களில் திராவிடர் கழகத்திற்கு நெருக்கமாகவே இயங்கின.

அதுபோன்ற ஒரு சூழல்தான் தற்போது மராட்டிய மண்ணில் நிலவுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கக் காலத்தில் இருந்த சூழல் மாறிவிட்டது. பிற்படுத்தப்பட்டோர் அமைப்புகளும், தலித் அமைப்புகளும் - பார்ப்பனர் களுக்கும், இந்துத்துவ அமைப்புகளுக்கும் நெருக்க மாகச் சென்று கொண்டுள்ளன. வெளிப்படையா கவும், மறைமுகமாகவும் இந்த ஜாதிச்சங் கங்க ளுக்குப் பார்ப்பன நெருக்கங்கள் அதிகரித்துள்ளன. அதனால்தான் ஜாதியத் தாக்குதல்களும் அதிகமாகி யுள்ளன.

ஜாதிஒழிப்பில் அக்கறை கொண்ட நமது தோழர்கள் நமது அணுகுமுறையைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். சுயமரியாதைக் காலத்தைப் போல, 1980 களைப் போல ஜாதிச் சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர் களைப் பார்ப்பன - பார்ப்பனிய எதிர்ப்பு நோக்கித் திருப்ப வேண்டும். நாம் பிறந்த ஜாதியின் சங்கத்தை விட்டுவிட்டு, வேறு ஏதாவது ஒரு ஜாதியின் சங்கத்தையோ, சங்கப் பொறுப்பாளரையோ மாற்ற முயற்சிக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் - சிறுபான்மையினர் ஒருங் கிணைப்புக்கு வேண்டிய அனைத்து முயற்சி களையும் மேற்கொள்ள வேண்டும். அதைத்தான் ‘பீமா கோரிகாவ்’ 200 வது வீரவணக்கநாள் உணர்த்துகிறது.

மராட்டிய பேஷ்வாக்களை நேரடியாகப் போர்க்களத்தில் வென்றோம். ஆனாலும் அடிமைத்தனம் ஒழியவில்லை. ஏனென்றால்,

**நாம் அடக்கப்படுவது ஒரு தனி மனிதராலோ - ஒரு குறிப்பிட்ட பேரரசாலோ, ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சியாலோ மட்டுமல்ல. பார்ப்பனர்களுக்கும், அவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் அரசர்களுக்கும், பிரதமர்களுக்கும் மேலே நிரந்தர ஆதிக்கக் கருத்தியலாக இருக்கும் இந்துமத வேதங்களாலும், சாஸ்திரங்களாலும் அவை உருவாக்கியுள்ள பண்பாடுகளாலும்தான் அடிமைப்படுத்தப் பட்டோம். அவற்றை அழித்து ஒழிக்காமல் நமக்கு வெற்றி என்பது உண்மையல்ல.**



தாராபுரம் பூங்கொடி





# தூ(ய்)மை துணி

## பேட் மேன்–விங் மேன்

பொதுவாகக் குடும்பத்தில் கணவன் ஏதாவது ஒரு விசயத்தைக் குறித்து மனைவியிடம் கேட்கும்போது இது உங்களுக்கு தேவையில்லாத விஷயம், போய் உங்க வேலையைப் பாருங்கள் என்று கூறினால், கணவன் உடனே, “எப்படி நீ என்னை அப்படி சொல்லலாம்” என குதிப்பார்கள் அல்லது நமக்குச் சம்பந்தப்படாத விசயம் போலன்னு விட்டு விடுவார்கள்.

ஆனால் இந்த மனிதர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு நாள் இவருடைய மனைவி எதையோ பின்னால் மறைத்து வைத்துக்கொண்டு கழிப் பறைக்குச் செல்வதைக் கவனித்த இவர் என்ன அது என வினவியிருக்கிறார்? அவர் மனைவி மேலே கூறியது போல உங்க வேலையைப் பாருங்கன்னு சொல்லிட்டாங்க. இவர் விடவே இல்லை பின் தொடர்ந்துச்சென்று என்னவெனப் பார்த்திருக் கிறார். ஒரு அசுத்தமான துணியை மாதவிடாய் உதிரத்தை உறிஞ்சுவதற்கு பயன்படுத்த அவர் எடுத்துச் செல்வதை உணர்ந்து கொண்டு ஏன் இதை பயன்படுத்துகிறாய்? தொலைக்காட்சி விளம் பரத்தில் சானிட்டிரி நேப்கின்ஸ் காண்பிக்கிறார் களே அதை பயன்படுத்தலாமே என்று கூறியிருக் கிறார்.

அதற்கு அவர் மனைவி பயன்படுத்தலாம் தான். ஆனால் நம்வீட்டுக்கு பால் வாங்குவதை நிறுத்தி னால் தான் சானிட்டிரி நேப்கின்ஸ் வாங்க முடியும் என்றும் ஒரு சானிட்டிரி பாக்கெட்டின் விலை 4 ரூபாய் என்றும் கூறியிருக்கிறார். இதைக் கேட்ட உடனே கடைக்கு சென்ற அக்கணவர் ஒரு சானிட்டிரி பாக்கெட்டை வாங்கியிருக்கிறார், அடிப் படையில் லேத் வெல்டர் என்பதால் அதனுடைய எடையை கணக்கிட்டுக் கொண்டே உள்ளே என்ன இருக்கிறது என ஆராய்கிறார்.

ஒரு பாக்கெட்டின் எடை சுமார் 10 கிராம், உள்ளே இருக்கும் பஞ்சின் விலையோ 10 பைசா தான் ஆனால் அதை 40 மடங்கு அதிகமான லாபத்தில் விற்பதை உணர்ந்து தன் மனைவிக்காக தானே சானிட்டிரி பேட் தயாரிக்கப் போவதாக முடி வெடுக்கிறார். அந்த நபர் தான் கோவை அருணாசலம் முருகானந்தம்.

இவரை இந்தியாவின் சிறகு மனிதர் (wing man) என்று அழைக்கலாம் என நான் கூறுவேன். ஏனென்றால், எந்த மனைவிக்காக சேனிட்டிரி பேட் தயாரிக்கத் தொடங்கிய முயற்சியில் ஈடுபட்டாரோ அவரே இவரைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து சென்ற சூழ்நிலையிலும் முயற்சியைக் கைவிடாமல் சேனிட்டிரி நேப்கின் மற்றும் அதைத் தயாரிக்கும் இயந்திரம் இரண்டையும் தயாரித்து (98 இல் தொடங்கிய முயற்சி 2006 இல் முடிவுறுகிறது) காப்புரிமையும் பெற்றுவிட்டார். 2006 ஆம் ஆண்டிலேயே அவ்வியந்திரத்திற்கு ‘சமூக மேம் பாட்டிற்கான சிறந்த கண்டுபிடிப்பு’ விருது கிடைத்தது. அதைக் கொண்டு பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் விற்று கோடிகளில் புரள்வது எப்படி என இவர் கணக்கு போடவில்லை. அப்பொழுது சேனிட்டிரி நேப்கின் தயாரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகள் பயன் படுத்திய இயந்திரத்தின் விலை மூன்றரை கோடி, இவர் தயாரித்த இயந்திரத்தின் விலையோ 65,000 ரூபாய் தான்

மாறாக என்ன செய்தார் தெரியுமா? வங்கிகள் மூலம் கடனுதவி ஏற்பாடு செய்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், தன்னார்வத் தொண்டு நிறு வனங்களுக்கும் இயந்திரங்களைக் கொடுத்து, கூடவே 3 மணி நேரத்தில் தொழில் பயிற்சியும் கொடுக்கிறார். ஒரு இயந்திரத்தின் மூலம் பத்து பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். இப்பொழுது சொல்லுங்கள். பெண்கள் உயர, பொருளாதாரத் தற்சார்பு மற்றும் தனிநபர் சுகாதார மேம்பாடு என்று இரண்டு சிறகுகளைத் தந்து அதற்கு இயக்கமே நடத்திக் கொண்டிருக்கும் இவரை இந்தியாவின் சிறகு மனிதர் (WING MAN) என அழைக்கலாம் தானே.

இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில் 23 மாநிலங்களில் இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இந்தியாவில் ஏழ்மையில் உள்ள மாநிலங்களான பீஹார், மத்தியப்பிரதேஷ், ராஜஸ்தான் மற்றும் உத்திரப்பிரதேஷம் ஆகிய வற்றில் இவரது திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு வந்தாரை மட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து சென்றோர்கூட வடமாநிலத்த வரை வாழவைத்திருக்கின்றனர் என்று சொல்லலாம்.

100 மில்லியன் இந்தியப் பெண்களுக்கு வாழ்வாதாரத்தை உண்டாக்குவதும், 100% சேனிட்டிரி நேப்கின்ஸ் உபயோகிப்பவர்களாக இந்தியப் பெண்களை மாற்றுவதும், 106 நாடுகளில் இதை விரிவு படுத்துவதுமே இவரது லட்சியம். நியாயப்படி பார்த்தால் இவரது வாழ்க்கையில் இந்த கண்டுபிடிப்பு களுக்காக என்னவெல்லாம் செய்தார் என்று கோலிவுட்காரர்கள் தான் தமிழில் சினிமா வாக எடுத்திருக்கனும். ஆனால் பாலிவுட் என அழைக்கப்படும் ஹிந்தி திரைத்துறை (PAD MAN) என்ற பெயரில் சினிமாவாக எடுக்கிறது. டிரெய்லர் பார்த்த வரையில் அருணாச்சலம் முருகானந்தம் அவர்களை தமிழ்நாட்டுக்காரராக காண்பித்த மாதிரி தெரியவில்லை. மற்ற விசயங்களை படம் வந்தபிறகு விவாதிக்கலாம்.

இந்தியாவில் உள்ள 15 சதவீதப் பெண்கள் தான் சானிட்டிரி நேப்கின்கள் உபயோகிக்கின்றனர் மீதமுள்ள 85 சதப் பெண்கள் மரத்தூள், காய்ந்த இலை, சாம்பல், செய்தித்தாள், மணல், பழையதுணி இவற்றையே மாதவிடாய் சமயத்தில் உபயோகிக் கின்றனர். சுகாதாரமற்ற மாதவிடாய் பராமரிப்பால் சிறுநீர் பாதை தொற்று (Urinary Tract Infection), கர்ப்பப்பைவாய் புற்றுநோய் (cervical cancer), இனப் பெருக்க உறுப்புக்குழாய் தொற்று (Reproductive Tract Infection) ஆகியவை உண்டாகின்றன. இன்னும் சொல்லப்போனால் மகப்பேறு இண்மைக்கு கூட இது வழிவகுக்கிறது.

**ஒரு உயிரைப் பாதுகாத்து வளர்க்க உருவான இந்த ஏற்பாடு எப்படி அசுத்தமானதாகும். மனித இனமே இதிலிருந்து தோன்றியதுதானே.**

இதைப்பற்றிய எந்தப் புரிதலும் இல்லாமல், உபயோகித்த துணிகளை அலசி, (தண்ணீர் பற்றாக் குறைக்கு மத்தியில்) மற்றவர்கள் கண் பார்வையில் படக்கூடாது என்கிற கண்ணோட்டத்தில் மற்ற துணிகளுக்கு அடியில் போட்டு காயவைக்கிறார்கள். (முறைப்படி இத்துணிகளை வெயிலில் தான் காய வைக்க வேண்டும், அப்பொழுது தான் கிருமிகள் நீங்கும்) சரியாக உலராத துணிகளை அப்படியே எடுத்து அதற்கென இருக்கும் மறைவிடத்தில் வைத்து விடுவர். இந்தத் துணியை எடுத்து மாதவிடாய் சமயத்தில் பயன்படுத்தும் போது பிறப்புறுப்பில் பூஞ்சை தொற்று உண்டாகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் முதலில் மாதவிடாய் என்றால் என்ன? அந்தச் சமயத்தில் நம் உடம்பை எவ்வாறு பேணவேண்டும்? எந்த கால கட்டத்தில், எதற்காக சேனிட்டிரி நேப்கின்ஸ் தயாரிக்கப் பட்டது? போன்ற செய்திகளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்

மாதவிடாயை ஆங்கிலத்தில் மென்சஸ் (Menses, Mensturation) என கூறுவார்கள். பிறக்கும்போதே அனைத்துக் குழந்தைகளுக்கும் மூளையில் பிட்டியூட்டரி சுரப்பி (Pitiuatary Gland) என்று ஒரு சுரப்பி இருக்கும். நம் உடம்பிலுள்ள நாளமில்லாச் சுரப்பிகள் அனைத்துக்கும் இந்த பிட்டியூட்டரி சுரப்பி தான் அடிப்படை. ஒரு பெண் பருவ வயதை அடைந்தவுடன் பிட்டியூட்டரி சுரப்பி யானது இரண்டு ஹார்மோன்களை உற்பத்தி செய்யும். ஒன்று நுண்ணுயிர் ஊக்குவிக்கும் ஹார் மோன் Folucule Stimulating Hormone மற்றொன்று Mutilising Hormone. இந்த நுண்ணுயிர் ஊக்குவிக்கும் ஹார்மோன் ஆனது சினைப்பையில் இருக்கும் சிறு, சிறு செல்களைத் தூண்டி, அந்தச் செல்களை ஊதி, பெருசாக்கி நிறைய எரிபொருளை உள்வாங்கும்.

ஒரு கரு உருவானால் மூன்று மாதத்திற்கு அந்தக் கருவுக்குத் தேவையான ஊட்டச்சத்து அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு மிகப்பெரிய எரிபொருள் கிடங்கை அந்த செல் உற்பத்தி செய்யும். ஒரு சிறுமி ஒரு சமயத்தில் ஒரே ஒரு கரு முட்டையைத்தான் உருவாக்குவார். அதே சமயம் வயது வந்த ஆண் உருவாக்கும் 23 குரோமோ சோம்களைக் கொண்ட செல் அமைப்பை விந்தணு என சொல்கிறோம்.

சராசரியாக ஒரு ஆண் ஒரு நாளைக்கு 200 மில்லியன் விந்தணுக்களை உற்பத்தி செய்வார். நிறைய கொழுப்பு, புரதம் எரிபொருள் தேவைப் படுவதால் ஒரே ஒரு கருமுட்டை சினைப்பையில் உருவாகும் போதே கர்ப்பப்பையில் சில மாற்றங்கள் நடக்கும். இத்தனை மெனக்கெடலுக்கு பிறகு உருவாகும் கருமுட்டை சினை கருத்தரித்து விட்டால் அந்தக் கருவை உள்வாங்கிக் கொள்வதற் கான சத்துக்களை உள்ளடக்கிய ஒரு இரத்தப் படலம், இரத்தக்கம்பளியே விரித்து வைத்து கருவுக்காக காத்திருக்கும். உடலுறவு கொண்டு கருவும் தரித்தால் அந்தக் கரு 9 மாதத்தில் சிசுவாக வெளிவரும்.

ஒருவேளை உடலுறவு கொண்டும், கரு உருவாகவில்லையென்றால் கருவுக்காகக் கர்ப்பபை செய்து வைத்திருந்த இத்தனை ஏற்பாடுகளும்

காலாவதியாகி விடும். ஒவ்வொரு மாதமும் புதுப்புது ஏற்பாட்டைத் தான் கர்ப்பப்பை செய்யும். ஆதலால் காலாவதியான இரத்தக்கம்பளம் நெகிழ்ந்து, உதிரம் வெளியேறுவதை தான் நாம் மாதவிடாய் என்கிறோம்.

ஒரு உயிரைப் பாதுகாத்து வளர்க்க உருவான இந்த ஏற்பாடு எப்படி அசுத்தமானதாகும். இதை அசுத்தம் என கூறுவோமானால் மனித இனமே இதிலிருந்து தோன்றியதுதானே. அவ்வளவாக அறிவியல் வளராத அந்தக் காலகட்டத்தில் கூட மாத விடாய் நாட்களை, தூய்மை நாட்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். காலப்போக்கில் இச்சொல் மருவி தூமை என்று ஆகிவிட்டது. துணி உபயோகிக்கத் தொடங்காத காலகட்டத்தில் அனைவர் வீடுகளிலும் தனியாகக் குளியலறை இல்லாததால் பொதுக்குளத்தில் குளித்திருப்பார்கள். ஆதலால் மற்றவர்களுக்கு பாதிப்பு வரும் என்கிற எண்ணத்தில் அந்த நாட்களில் தனியாக ஒதுங்கி இருந்தனர்.

**பெண்கள் கல்வியில், வேலைவாய்ப்பில், பொதுவெளியில் இயங்குவதற்கு தடையாக உள்ள (அந்த மூன்று நாட்கள்) மாதவிடாய் சமயத்தில் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கண்டுபிடிக்கப்பட்டது...**

ஆனால் தற்போது அனைவர் வீட்டிலும் கழிப்பறை இருக்கிறது, வீதிக்கு ஒரு பொதுக் கழிப்பறையும் இருக்கிற காலகட்டத்தில் மாதவிடாய் நாட்களில் தனித்து அமர வைக்கும் நடைமுறையைக் கையாள வேண்டிய அவசியமே இல்லை. இந்த நாட்களில் உடலையும், பிறப்புறுப்பு பகுதிகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கூடுமானவரை சானிட்டிரி நேப்கின்ஸ்களை உபயோகப்படுத்தலாம். உதிரப்போக்கு இருந்தாலும், இல்லையென்றாலும் 4 மணி நேரத்திற்கு ஒருமுறை சேனிட்டிரி நேப்கின் களை மாற்ற வேண்டும், அப்பொழுது தான் பூஞ்சை தொற்று (Fungal Infections) ஏற்படாது.

உபயோகித்த சேனிட்டிரி நேப்கின்களை இறுக மூடுப்பட்ட சிமெண்ட் குடுவையில் போட்டு தீயிட்டு எரித்துவிடவேண்டும் அல்லது பழைய செய்தித்தாளில் சுற்றி குப்பை தொட்டியில் போட்டு விடலாம். எக்காரணத்தைக் கொண்டும் கழிப் பறைக்குள் போடக்கூடாது. மற்ற குப்பைகளுடனும் போடக்கூடாது. ஒவ்வொரு தடவை பேட் மாற்றிய பிறகும் சோப்பு போட்டு நன்றாகக் கைகளை அலச வேண்டும். மாதவிடாய் நாட்களில் இவ்வாறு சுகாதாரமாக இருக்க வேண்டும்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த கால கட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஆணும், பெண்ணும் சரிநிகர் என அறிவித்து ஆணைப் போலவே பெண்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் சமவாய்ப்பு கொடுக்கப் படவேண்டும் என்று வலியுறுத்தியது. பெண்கள் கல்வியில், வேலைவாய்ப்பில், பொதுவெளியில் இயங்குவதற்கு தடையாக உள்ள (அந்த மூன்று நாட்கள்) மாதவிடாய் சமயத்தில் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கண்டுபிடிக்கப் பட்டது தான் சேனிட்டிரி நேப்கின்ஸ். பெண்களும் பங்கு கொள்ளும் போது தான் நாட்டின் பொருளாதாரமும் உயரும் என்பதற்காக கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் தற்போதும் 15 சதம் பெண்கள் தான் பயன்படுத்துகின்றனர், அக்டோபர் 2016ஆம் ஆண்டு எடுத்த சர்வேயின்படி 12 ல் இருந்து 18 வயது பெண்களில் ஏறக்குறைய 20 சதம் பெண்கள் மாதவிடாய் தொடர்பான பிரச்சனைகளாலும், அறியாமையாலும் பள்ளிப்படிப்பைப் பாதியில் கைவிட்டுவிட்டனர் என தெரிவிக்கிறது. இது தேசிய அவமானம் என்றே சொல்லலாம். வறுமையில் உழலும் ஏழை, எளிய மக்களுக்கு இவற்றின் விலை எளிதில் வாங்கக் கூடியதாக இல்லாமல் ஆக்கி விடுகிறது. தமிழக அரசின் கல்வித்துறை நமது பள்ளிக்கூடங்களில் இலவச சேனிட்டிரி பேட் விநியோகிக்கிறது. ஆனால் இது போதாது.

**மாதவிடாய் பற்றிய அறிவியல் விளக்கத்தை ஒரு பாடத்திட்டமாகச் சேர்த்து மாணவர்களிடையே இருக்கும் கூச்சத்தைக் களைந்து விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.**

பெரியகுளம் குமரேசன்



# பார்த்ததும் கேட்டதும்

## திராவிடத்தால் படித்தோம் நாம்

திராவிடம் தான் எங்களைப் படிக்க வைத்ததென்றால் மற்ற மாநிலங்களில் எல்லோரும் படித்திருக்கிறார்களே அவர்களை எல்லாம் யார் படிக்கவைத்தது. இது பார்ப்பனிய சிந்தனைகளை உள்வாங்கும் தமிழ் தேசியவாதி களின் கேள்வி. இங்க தான் திராவிடம் பேசி மற்ற மொழிக்காரர்கள் எங்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று புலம்பல் வேறு. சரி, திராவிடம் இப்ப யாரு பேசுராங்க என்று நாம் கேட்டால் தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசுகிறவர்கள் என்று பதில் சொல்கிறார்கள்.

இவர்கள் சொல்வதைப் பார்த்தால் தினமும் ஆயிரம் பேர் கேரளா, ஆந்திராவிலிருந்து கிளம்பி பஸ் ஏறும் போதே திராவிடத்திற்கு ஒரு டிக்கெட் கொடுங்க என்று கேட்டு வந்து நம்மளை அடிமைப் படுத்துவது போல் உளறுகிறார்கள். இந்த 50 வருட திராவிட ஆட்சியில் எங்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை, அதனால் திராவிடத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்றீங்க, சரி இந்த 50 வருசமா உங்களுக்கு எதுவுமே கிடைக்கலியா? 50 வருசமா தமிழன் யாரும் படிக்கவில்லையா? சம்பாதிக்கவில்லையா? என்று எதிர் கேள்வி கேட்டால், இல்ல எத்தியோப்பியாவிலிருந்து ஒரு தமிழன் நேற்று பீட்சா வாங்கப் போக, அதுக்கு அந்த எத்தியோப்பிய கடைக்காரன் பீட்சா இல்லன்னு சொன்னதால் அன்றைக்கு அந்தக் குடும்பமே சாப்பிடாமல் பட்டினி கிடந்திருக்கிறார்கள். இதை இந்த திராவிட ஆட்சி தட்டி கேட்டிருக்கணும். கேட்கல, அதனால் இந்த திராவிடம் வேணாம் என்று சொல்கிறோம். அடடா இவனுக பிரச்சனை பீட்சா வரைக்கும் போயிருச்சே என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

திராவிட ஆட்சி வருவதற்கு முன் இந்த தமிழ்தேசியவாதிகளின் வீட்டில் ஒவ்வொருத்தர் வீட்டிலும் ஒரு IAS, IPS, இருந்தமாதிரியும், பார்ப்பனர்கள் அனைவரும் இவர்களைப் பார்த்து "நமஸ்காரம் நல்லா இருக்கேளா?" கேட்டுவிட்டு, கும்பிட்டுப் போன மாதிரியும், திராவிடம் தான் அதத் தடுத்த மாதிரியும் நெனப்பில் இருக்கிறார்கள். இந்த ஆண்டபரம்பரைக்காரர்கள். அன்று பார்ப்பனர் வீட்டுக் கொல்லைப்புறம் தான் இவர்களுக்குச் சொர்க்கவாசல் என்பது மறந்துவிட்டது போல, உண்மையில் இவர்களைப் படிக்கவைத்தது எது, கல்வி பெற்ற மாநிலங்களில் திராவிடம் இல்லையா? ஞாபகப்படுத்துவோம்.

"கல்வி விசயத்தில் தற்போதுள்ளவர்கள் மிகவும் மேன்மை பெற்றவர்கள். ஏனெனில் முந்திய சகாப்தத்திற்கும் பிந்திய சகாப்தத்திற்கும் கல்வி கற்பிப்பதில் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. நம் சகாப்தத்திற்கு முந்தைய காலத்தில், இன்னார் இன்னார் தான் கல்வி -கற்பிக்க உரிமை யுடையவர்கள் என்கின்ற நிபந்தனை இருந்தது. இன்ன இன்ன விஷயந்தான் கற்பிக்கப் படவேண்டும் என்றும் இருந்தது. இதோடு மாத்திரமல்லாமல், இன்ன இன்னார்தான் கல்வி கற்பிக்கப்பட உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனையும், இன்ன இன்னவர்களுக்கு எழுத்து வாசனையே கற்பிக்கப்படக் கூடாது என்கின்ற தான நிர்பந்தமும் இருந்து வந்தது. இந்த மாதிரி யான நியமங்களினாலும், நிர்பந்தங்களினாலும் கல்வி என்பது 'மூடுமந்திரம்' போன்று ஒரு இரகசியப் பொருளாகவே இருந்து வந்தது.

இந்தக் காரணங்களினால் முற்காலங்களில் ஆயிரத்தில் ஒருவர் இருவரே கல்வி கற்றவர்கள் என்பவர்களே எல்லா மக்கள் மீதும் எல்லா காரியத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்து வந்தார்கள். அன்றியும், மேல் சொல்லப்பட்ட இந்த நிபந்தனைகளும் ஆதிக்கங்களும் எல்லாம் மக்கள் பிரிவில் ஒரு தனிப்பிரிவார் மாத்திரம் அதுவும், பிறவி காரணமாய் உரிமை கொண்டாடத் தக்கதாய் இருந்து வந்ததே அல்லாமல், மற்றபடி பொதுத் தகுதியைக் கொண்ட தாகவோ, எல்லோருக்குமே சம உரிமை கொண்ட தாகவோ சிறிதும் இருந்து வரவில்லை.

சாதாரணமாய் நமது இந்தியாவை முழுவதும் எடுத்துக் கொண்டு, பழைய கல்வி போதனாமுறை என்பதை ஒரு முறையாக வைத்துப் பார்ப்போமானால், இந்தியாவில் உள்ள 35 கோடி(1931) மக்களில், 17.5 கோடி மக்களான பெண்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கல்வி கற்பிக்க முடியாததாகும். மற்றொரு பிரிவில் 7 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்திலும் படிப்பு என்பது நினைப்பதற்கே முடியாத காரியமாய் இருக்கும் மற்றும் பார்ப்பனர்கள், அரசர்கள், வியாபாரிகள் என்கின்ற வெகு சிறிய கூட்டத்தார்கள் மாத்திரம் கல்வி கற்க உரியவர்களாவார்கள். அவர்களிலும் கல்வி கற்பிப்பதில் பிரிவுக்கு பிரிவு வித்தியாசம் இருக்கும். ஆனால் இன்றைக்கு இவ்வித வித்தியாசங்கள் ஏது மில்லாமலும், யாருக்கும் யாவராலும் கல்வி கற்பிக்கப்படலாம்.

*- தோழர் பெரியார்- ஈரோடு மகாஜன ஸ்கூலில், 17.09.1931 இல் சொற்பொழிவு*

அக்ரஹாரத்தில் வசித்து வந்த பிராமணர் ஒருவருக்குக் கை நிறைய வருமானம் வரும் ஜோசியந்தான் தொழில். ஒரு முறை வெளியூரி லிருந்து வீடு திரும்பும் வழியில் தஞ்சை கலெக்டர் அழைப்பதாக செய்தி வரவும் அங்கே சென்றார். அந்த வெள்ளைக்காரக் கலெக்டர் அவரிடம் "உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?" எனக் கேட்க "தெரியும்" எனப் பதிலளித்தார். "கணக்கு பார்க்கத் தெரியுமா?" என அடுத்த கேள்வியைக் கேட்க "ஜோசியம் பார்க்கத் தெரியும், கணக்கும் பார்ப்பேன்" என்றார். விடாத கலெக்டர் "கிராமத்துக் கணக்கு வேலைகளைப் பார்ப்பீரா" எனக் கேட்க , "கொடுத்தால் பார்ப்பேன்" என்றார். அடுத்த நிமிடம் ஜோசிய பிராமணர் அரசு அலுவலரானார்.

*-ஆர். முத்துக்குமார் எழுதிய திராவிட இயக்க வரலாறு பகுதி -1 என்ற நூலிலிருந்து*

*இப்பிடித்தான் விண்ணப்பிக்காமல், போட்டி இல்லாமல், கோரிக்கை இல்லாமல் அரசுப் பணிகளில் பார்ப்பனர்கள் சேர்ந்தனர்.*

*முதன் முதலில் இட ஒதுக்கீடு என்கிற வார்த்தை உருவானதே தமிழ் நாட்டில் நீதிக்கட்சி ஆட்சியில் தான். 1921 ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் பனகல் அரசர் ஆட்சிக்காலத்தில் திரு. தணிகாசலம் அவர்கள் கொண்டுவந்த வேலைவாய்ப்பு இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால் அப்போது இருந்த இரட்டை ஆட்சி முறையால் கவர்னருக்கு அதிக அதிகாரம் என்பதால் கவர்னர் நிராகரிக்க - இந்தச்சட்டம் நிறைவேற்றப் படாமல் போனது.*

*மீண்டும் 1927ம் ஆண்டு திரு. சுப்புராயன் அவர்கள் காலத்தில் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது, இந்தச் சட்டம். 1947 ஆம் ஆண்டு விடுதலை அடையும் வரை இருந்தது. இந்தச் சட்டத்தினால் பார்ப்பனரல்லாதோர் ஓரளவு வேலை பெற்றனர். 1934 இல் சென்னை மாகாண பார்பனரல்லாதார் இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர்காலத்தில் போராடிப் பெற்ற இந்தச் சட்டத்திற்குச் சுதந்திர இந்தியாவில் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமே தடை விதிக்கப்பட்டது.*

*முதலில் வேலை வாய்ப்பில் தான் இட ஒதுக்கீடு இருந்தது. அதற்கும் தடையும் வந்தது. இந்திய அரசியலமைப்பு கொண்டு வந்த சட்டமும் வேலை வாய்ப்பில் மட்டும் தான் என்று சொன்னது. வேலைவாய்ப்பில் மட்டும் இடஒதுக்கீடு என்பதை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.*

*"நீ தெருவுக்கு நாலு பைப் போட்டுக் கொடுத்துடுற; தண்ணீ பிடிச்சுக்க-ன்னு சொன்ன ; ஆனால் டேங்க்குத் தண்ணீ விடலையே; எனக்கு வேலைவாய்ப்புக்கு இட ஒதுக்கீடு கொடுத்துட்ட, ஆனா, எங்காளு இன்னும் படிக்கவே இல்லையே, பிறகு எப்பிடி வேலை வாய்ப்புக்குப் போய் நிப்பான்?" என்று கேட்டார்.*

*டெல்லி உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பும் வகுப்புவாரி உரிமைக்கு எதிராக அமைந்தது. அந்தத் தீர்ப்பைத் துணையாகக் கொண்டு ,'வகுப்புவாரி உத்தரவை அமல்படுத்துவது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது; ஆதலால், அதனை அமல்படுத்தக்கூடாது' என மத்திய அரசு, மாகாண அரசுகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியது. இதன் தொடர்ச்சியாக 1951 ஆம் ஆண்டு தந்தை பெரியார் நடத்திய மாபெரும் மக்கள் கிளர்ச்சி போராட்டத் தால் இந்தியாவே அதிர்ந்தது வரலாறு. இந்திய அரசியலமைப்பின் முதல் சட்டத் திருத்தம் (விதி (15) (4) வந்தது.*

*ஆரம்பங்களில் பார்ப்பனருக்கு மட்டுமே கிடைத்த கல்வி எல்லோருக்குமாக மாற்றியதில் திராவிடத்தின் பங்கு அளப்பரியது. திண்ணைப் பள்ளிகள், குரு குலங்களாக இருந்தவை பின்னர் பள்ளிக்கூடங்களாக மாறியது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல.*

## காமராசர் ஆட்சிக்காலத்தில் அதிகமான பள்ளிகள் திறக்கப்பட்டன. அதற்கு அடித்தள மிட்டது நீதிக்கட்சியும், பெரியாரும் தான்.

*திராவிட ஆட்சிக்கு முன்னால் ஊரில் ஒரு சிலரே படித்தனர், குறிப்பாக வசதிபடைத்தோர் மற்றும் மேல் சாதியினர் தான்.அதை அளவு கோலாக வைத்து விட்டு நாங்கெல்லாம் திராவிடத்திற்கு முன்னே படித்து விட்டோம் என்று மொன்னை வாதங்களை வைக்கக் கூடாது.*

*ஆரம்பத்தில் எங்கள் ஊரில் ஒரே ஒரு மேல் நிலைப்பள்ளி தான் இருந்தது. அதில் தான் எல்லோரும் படித்தார்கள். இதனால் என்னாச்சுன்னு பார்த்தால், அதிகமான இடை நிறுத்தம் ஏற்பட்டது (Drop out) வெகு தொலைவிலிருந்து வந்து படித்தவர் களில் ஒரு சிலர் ஏதோ ஒரு காரணத்திற்காகப் படிப்பதைப் பாதியில் நிறுத்தினார்கள். கண்டிப்பாக திராவிடம் காரணமில்ல. இன்று ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு மேல்நிலைப்பள்ளி என்று வந்துவிட்டது. அதனால் படிப்பு விகிதம் அதிகமாகியுள்ளது. இதுக்கு யார் காரணம் திராவிடம் தான். எங்கப்பா பள்ளிப் பக்கமே போகாதவர், நான் ஒரு பொறியாளன். எனது அப்பா படிக்காமல் போனதற்கு அன்றைய மறுக்கப்பட்ட கல்விச் சூழல் ஒரு காரணம். இன்று எங்கள் குடும்பத்தில் எல்லோரும் படித்ததுக்குக் காரணம் பார்ப்பனர் களிடமிருந்த கல்வி எல்லோருக்கும் பரவியது தான். அதை இங்கே கொண்டு சேர்த்தது திராவிடம் தான்.*

- பெருமையுடன் பேசுவோம்

உடுமலை கவிதா



# பஞ்சாலைகளில் ஜாதிய வன்கொடுமைகள்

நான் இருபது வருஷமா நூல் மில் வேலைக்கு போறேன். அங்கே இருக்கிற அக்கிரமத்தைச் சொல்றேன் கேளுங்க தினமும் மில்லுல காலை, மதியம் டீ குடுப்பாங்க. டீ குடிக்கிறதுக்கு டம்ளரும் குடுத்திருக் காங்க ஆனா அந்த டம்ளருல பிற்படுத்தப் பட்டவுங்க டீ குடிக்க மாட்டாங்க. அவுங்க வீட்டிலிருந்தே டம்ளர் கொண்டு வந்துருவாங்க. ஏன்னு கேட்டா.. அந்த டம்ளர்ல தாழ்த்தப் பட்டவுங்க டீ குடிச்சிருப்பாங்க.. அதுல நாங்க எப்படி குடிக்கறதுன்னு சொன்னாங்க. அதுக்கு நான், தாழ்த்தப்பட்டவுங்களாக இருந்தாலும் அவங்களும் மனுசங்கதானேனு கேட்டா, அதெப்படி அவங்களும், நாங்களும் ஒன்னாவமா? அந்தக் காலத்திலிருந்தே இப்படித்தா இருக்குது இப்ப என்ன நீ புதுசா கேள்வி கேக்கற....

பாத்திங்களா இதுல இருந்தே தெறியுதா "மனு" அவுங்க மூளையில எப்படி பதிஞ்சிருக்குதென்று.

நான் அவங்ககிட்ட ஏங்கக்கா, உங்களுக்கு டீ கடையிலபோய் டீ குடிக்கிற பழக்கம் இருக்கா?. ம்.. குடிப்போமே ஏன்? எதுக்குக் கேக்குற? அங்க போகும் போது வீட்டுல இருந்தே டம்ளர் எடுத்துட்டுப் போய் டீ வாங்கி குடிப்பீங்களா?

இல்லை. அங்க இருக்கிற டம்ளரிலேயே குடிப்போம் அதுக்கு என்ன இப்போ... அப்படின்னா கடையில எல்லா ஜாதிக்காரங்களும் அந்த டம்ளரில் டீ குடிப்பாங்களே அங்க மட்டும் எப்படிக் குடிக்கிறிங்க மில்லுல ஏன் ஜாதி பாக்குறீங்க?

"அது வந்து கடையில எல்லாம் பாக்க முடியுமா? ஒரு காலத்துல எல்லாம் எங்க ஜாதிக்காரங்க டீ கடை வெச்சிருந்தாங்க. அப்பவல்லா.. வந்து கடைக்குள்ளையே வரமாட்டானுங்க. வெளியே வெச்சிருக்கிற டம்ளருலதான் டீ குடிச்சிட்டு அதை அவனுகளே கழுவி அதே இடத்துல வெச்சிட்டு போயிருவானுக. இப்பத்த அவனுகளுக்குத் தனியா டம்ளர் வெச்சா போலிஸ் கேஸ் ஆயிருனு சொல்றாங்க என்னமோ பி.சி.ஆர் கேஸ் குடுத்துருவாங்கனு வேற சொல்றாங்க. இந்த மலையாளத்து காரனுகளும், தெக்கத்துக் காரனுகளும் இங்க வந்து டீக்கடை வெச்சதுக்கப் பறந்தா அவனுகங்க கடைக்குள்ள வர்றதும் போறதும், எல்லா டம்ளருல டீ குடிக்குறதும், ஒன்னா உக்காரதும் எல்லா கருமமும் நடக்குது.

ஆனா சில கடைக்குள்ள எல்லா எங்க ஜாதிக்காரங்க போய் அவனுக டீ குடிக்க வந்தா தனி டம்ளருலதா டீ குடுக்கோணும்னு மெரட்டி வெச்சுருக்குமல்ல... நம்ம மில்லுக்குள்ள வேலை செய்யறது யார் யார், என்ன என்ன ஜாதியின்னு தெரியும். அது தெரிஞ்சும் எப்படி அவங்க குடிக்கிற டம்ளரில் நாங்களும் குடிக்குறதுன்னு" கேட்டாங்க. அதுக்கு நான், அதுல என்ன ஒட்டிட்டு வருதுனு கேட்டேன். அப்போ அவுங்க அப்படி எல்லா குடிக்க முடியாதுன்னே சொல்லிட்டாங்க.

ஒரு நாள் எங்கூட வேலை செய்யுற 'பத்தக்கா' தாகம் எடுக்குது எனக்கு தண்ணி வேணுமின்னு கேட்டாங்க. நான் போய் ஒரு கூடையிலே இருந்த வாட்டர் கேனை எடுத்துக் கொண்டுபோய்க் குடுத்தேன். அப்போ இந்தக் கேன் யாரோடது எங்கிருந்து எடுத்துட்டு வந்தையின்னு கேட்டாங்க.

அதுக்கு நான், 'ராமக்கா' கூடையில் இருந்து எடுத்தேன்னு சொன்னேன். அதுக்கு பத்தக்கா அவ கூடையிலிருந்து எதுக்கு எடுத்துவந்த? அப்படின்னு கேட்டாங்க. அப்போ நான், உங்க தோட்டத்துல கிணறு வெட்ட வந்தவங்களும், தண்ணீ பாய்ச வந்தவங்களும் அவங்கதானே? அது அவுங்க செய்யற வேலைதான் அது. அப்போ அவுங்க அந்த தண்ணியத் தொடறாங்கள்ள. அந்தத் தண்ணியக் குடிக்கிறீங்க. அது வேற இது வேறையா அது எப்படினு? நான் கேட்டேன். அதுக்கு அந்த பத்தக்காவால பதில் சொல்ல முடியவில்லை.

ஒரு சில மில்லுகள்ள வேலை செய்யும் பெண்களை அவுங்க ஜாதியைச் சொல்லி டாய்லெட்டை சுத்தம் செய்யச் சொல்ற கொடுமையும் நடக்குது.

- இதன் தொடர்ச்சி 29 ஆம் பக்கம்




விமல் பிரகாஷ்
அரசு கலைக்கல்லூரி
கோவை

# ரஜினி மராட்டியரா? ஆர்.எஸ்.எஸ். காரரா?

**நாத்திக அரசியல்**

தமிழ்நாடு இந்தியாவில் உள்ள மற்ற மாநிங்களை காட்டிலும் சமூகம், பொருளாதாரம், கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றவற்றில் மேலோங்கி உள்ளது. அதற்கு காரணம் தமிழ்நாட்டில் இருந்து வரும் அரசியல் கொள்கைதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பார்ப்பனர்களால் அடிமைப்படுத்தப்பட்ட ஒரு இனத்தை சுயமரியாதை உணர்வடையச் செய்த சித்தாந்தம்தான் திராவிடர் இயக்க சித்தாந்தம். நீதிக்கட்சி தொடங்கி வைத்த பார்ப்பனர் அல்லாதார் உரிமை போராட்டத்திற்கு முழு வடிவம் கொடுத்து அதனை தீவிரப்படுத்தி இயக்கம் கண்டவர் தந்தை பெரியார். திராவிடம் என்ற கோட்பாட்டைப் பலரும் பேசியிருந்தாலும் அதனை இன்றும் பார்ப்பனர்களால் நெருங்க முடியாத கொள்கையாக மாற்றியவர் பெரியார். அதற்கு அவர் முன்வைத்த கடவுள் மறுப்பு என்பது சாதி மற்றும் மத ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ்நாட்டு உரிமை இவற்றை அடிப்படையாகக் கொண்ட கடவுள் மறுப்பு ஆகும்.

தமிழ்நாட்டில் பெரியாரின் நாத்திக, பகுத்தறிவு பிரச்சாரம் செல்லாத இடங்களே இல்லை என்றே கூறலாம். பெரியாரைப் பின்பற்றி வந்த அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களும் பெரியாரின் கருத்துக்களை முழுமையாக ஏற்று அரசியல் செய்யவில்லை என்றாலும் பெரியாரின் சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே அரசியல் செய்து வந்தனர். சமூகநீதி மற்றும் நாத்திகத்தை அடிப்படையாகவேக் கொண்டு அரசியல் கண்டனர். நீதிக்கட்சி தொடங்கி வைத்த இந்தப் பார்ப்பனர் அல்லாதோரின் உரிமைப் போராட்டம்தான் பிற்காலத்தில் நாத்திகத்தை அடிப் படையாக கொண்ட உரிமைப் போராட்டமாக உருவெடுத்தது. எனவே, பார்ப்பனர் அல்லாதோரின் விடுதலை அரசியல் நாத்திகத்தையே மையமாகக் கொண்டது. உலக நாடுகளை எடுத்துக் கொண்டாலும் நாத்திகத்தையே அடிப்படையாக கொண்டு அரசியல் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இப்படி நாத்திக வழி வந்த திராவிடர் அரசியல் கட்சிகளால்தான் தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளான சில உரிமைகளைப் பெற்றுத் தந்தன.

**பல நூற்றாண்டுகளாக நடந்தது ஆன்மிக அரசியல் தானே?**

தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மேம்பாடு அடையச் செய்த நாத்திக அரசியலுக்கு மாற்றாக ஆன்மிக அரசியலை மேற்கொள்ளப் போவதாக ரஜினி அறிவித்திருக்கிறார். ஆன்மிக அரசியல் என்ன புதிதா? காலம் காலமாக பார்ப்பனர் கள் இந்தியா முழுவதும் செய்து வரும் அரசியல் ஆன்மிக அரசியல் தானே? ஆன்மிக அரசியல் யாருடைய நலனுக்கான அரசியல்? ரஜினி தனது ஆன்மிக அரசியலை பற்றி இவ்வாறு கூறுகிறார். "உண்மையான, நேர்மையான, நாணயமான அரசியல் என்றும் சாதி, மத சார்பற்ற அறவழி அரசியல் ஆகும் என்றும் ஆன்மீக அரசியல் என்பது ஆத்மாவுடன் தொடர்புடையது" என்று கூறுகிறார். இப்படி திராவிட இயக்கக் கொள்கைக்கு நேர் எதிராக அரசியல் செய்ய தனது 67 வது வயதில் கிளம் பியுள்ளார் ரஜினி. சாதி, மதம், கடவுள் இவை ஒவ்வொன்றையும் தனித்துப் பிரித்துப் பார்க்க முடியாது. இதை அறியாத அடிப்படை அரசியல் அறிவற்றவரா ரஜினி?

**"கடவுள் பற்றுள்ளவனால் உண்மையான, நேர்மையான, யோக்கியமான அரசியல் செய்ய முடியுமா? கடவுள் பற்றுள்ளவன் கடவுள் அமைப்பை கடவுள் செயலை எப்படி மாற்ற முற்படுவான்? அவனால் எப்படி கடவுள் பற்றோடு அதனை மாற்ற முடியும் அப்படி மாற்றுகிறேன் என்று சொன்னாலும் அவன் கடவுள் அமைப்பிற்கும், செயலுக்கும் விரோதமாகச் செய்ததாகத்தானே ஆகும்? எனவே**

**கடவுள் பற்றிருந்தால் சமுதாய அமைப்பை மாற்ற முடியாது. அது போல தான் மதத்திலும் கடவுள் அப்படி சொன்னார். மகான் அப்படி சொன்னார். அந்த அமைப்பு படி தான் நடக்க வேண்டும். அதை மாற்றக் கூடாது என்று சொல்லிக் கொண்டு இந்த இழிவு ஒழிய வேண்டும் என்றால் எப்படி ஒழியும்?". -**

*தோழர் பெரியார் (விடுதலை- 20.03.1969)*

*தமிழ்நாட்டில் சிஸ்டம் சரியில்லை என்று கூறி சிஸ்டத்தை சரிசெய்யக் கிளம்பியுள்ள ரஜினி ரசிகர்கள் சந்திப்பில், சங்கராச்சாரியார் சொன்னார் அந்த சாமியார் சொன்னார் இந்த சாமியார் சொன்னார் என்று சொல்லும் ரஜினி இந்த சிஸ்டத்தை யாருக்கு ஏற்றார்போல் சரிசெய்யப் போகிறார் என்று தெளிவாக புரிகிறது. பகவத் கீதையுடன் தனது உரையை தொடங்கினார் ரஜினி. பகவத் கீதையைப் பற்றி தோழர் அம்பேத்கர், பெரியார் மற்றும் கலைஞர் ஆகியோரின் கருத்து:*

**"கீதை ஒரு முட்டாளின் உளறல்"**

- தோழர் அம்பேத்கர்

'விடுதலை' தலையங்கம் 17.03.2010

**"நமது நாட்டில் நடைபெறுகிற முட்டாள் தனங்களிலும், பச்சை அயோக்கியத் தனங் களிலும் தலை சிறந்த, முதல் தரமான காரியங்களில் முதலாவது காரியம் என்ன வென்றால், பகவத் கீதை எனும் ஒரு காட்டு மிராண்டி, அயோக்கியத்தனம் கொண்ட நூலை விஷயத்தை, பிரச்சாரம் செய்வதும், பரப்புவதும்"**

- தோழர் பெரியார் 'விடுதலை' 16. 11. 1973

**" வருண பேதத்தை பரப்புவதே பகவத் கீதை"**

-கலைஞர் கருணாநிதி *(http://tamil.oneindia.com./news/2004/09/14/karunanidhi.html)*

*பிராமணன், சத்திரியன், வைஷியன், சூத்திரன் என்ற நான்கு வர்ணங்களை வலியுறுத்தும் பகவத் கீதையை ஏற்றுக்கொள்ளும் ஒருவனால் எப்படி சாதி சார்பற்ற, மதச் சார்பற்ற அரசியல் செய்ய முடியும். இவர் நடித்த படமும், இனி நடிக்கவிருக்கும் படங்களும் எப்படி சாதி ஒழிப்புத் திரைப்படங் களாக இருக்க முடியும்? அவற்றில் சாதி ஒழிப்பு என்பது எப்படி இருக்கும்? கால் மேல் கால் போடுவதும், ஷூ போடுவதும், கோட்சூட் போடுவதும் தான் சாதி ஒழிப்பாகக் காட்டப்படும். பார்ப்பனப் பண்பாட்டைப் பின்பற்றுவதும் இந்து மதத்தைப் பாதுகாப்பதுமே சாதி ஒழிப்பு. அட நம்பித்தாங்க ஆகணும்...*

*மதச் சார்பற்ற அரசியல் எப்படி இருக்கும்? 2004 ம் ஆண்டு நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க கூட்டணிக்குத் தான் வாக்களிக்கப் போவதாக அறிவித்து, வெளிப்படையாகத் தனது மதச்சார்பற்ற தன்மையைக் காட்டினார். அதை விட முக்கியம், ரஜினி அரசியலுக்கு வரப்போவதை பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் மற்றும் பார்ப்பனர்களும், சாமியார்களும், இந்து மதவாதிகள், சங்கரச் சாரிகளும் ஆதரித்தனர். இதிலிருந்தே தெரிய வில்லையா ரஜினி எவ்வளவு பெரிய மதசார்பற்றவர் என்று?*

**உலக நாடுகளை எடுத்துக் கொண்டாலும் நாத்திகத்தையே அடிப்படையாகக் கொண்டு அரசியல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்படி நாத்திக வழி வந்த திராவிடர் அரசியல் கட்சிகள்தான் தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளை பெற்றுத் தந்தன.**

*அட ஆமாங்க கபாலி படத்த எப்புடி சாதி ஒழிப்புப் படம், அதுல நடிச்ச ரஜினிய சாதி ஒழிப்புப் போராளினு நம்பினோமோ அதே மாதிரி இதையும் அதாவது மதச்சார்பற்றவர் (மத ஒழிப்பு போராளி) என்று நம்பித்தான் ஆகணும்".*

*கொள்கை என்ன என்று கேட்டால் "தலை சுத்துது" என்று கூறும் ரஜினியின் அரசியல் கொள்கை என்னவாய் இருக்கும். தனது கட்சியின் சின்னத்தில் வேண்டுமானாலும் தாமரையை நீக்கலாம். ஆனால் கொள்கையில்? இப்படித் தமிழர்கள் நலனுக்கு எதிராக அரசியல் செய்ய வரும் ரஜினியின் ஆன்மீக அரசியலை எதிர்க்காமல் சில ஆய்வாளர்கள் (நம் தமிழ்தேசியவாதிகள்) ரஜினி கன்னடர் ஆகவே அரசியலுக்கு வரக்கூடாது என்று கூறகின்றனர்.*

### ரஜினி தமிழர் தான்

*ரஜினி கன்னடர் என்றால் தமிழர் யார் என்று பார்க்க வேண்டும் அல்லவா! தமிழர் யார்? அவனுக்கு அடையாளம் என்ன? சட்டப்படி நாம் யார்? தமிழர் களின் பழக்க வழக்கம்,பண்பாடுகள் எல்லாம் தமிழர் களுடையதா? பார்ப்பன ஆரியர்களுடையதா? தமிழனுக்கு என்று தனி அடையாளம் இல்லாமல் சூத்திரர்களாக, கீழ் மக்களாக ஆக்கப்பட காரணம் என்ன என்று உணராமல் எப்படித் தமிழன் விடுதலை அடைய முடியும்?*

*ஒரு அடிமை தான் ஏன் அடிமைபட்டு கிடக்கின்றான் என்று உணராமல் அதை எதிர்த்து விடுதலை பெற முடியாது. இது எல்லா இனத்திற்கும் பொருந்தும். பார்ப்பனர்கள் என்ற இனம் தமிழர் களை மட்டுமில்லாமல் இந்தியா முழுவதும் உள்ள பார்ப்பனர் அல்லாத மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர். இப்படி அடிமைபட்டுக் கிடந்தாலும் பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்ட இந்து மதத்தையே பின்பற்றுகின்றனர். அவர்கள் உண்டாக்கிய புராணம், இதிகாசம், வேதங்கள், கடவுள் போன்றவற்றை ஏற்றுக் கொண்டு அதனையே பின்பற்றுகின்றனர். பின் எப்படி தமிழர்கள் விடுதலை அடைய முடியும். உண்மை யான தமிழர்களுக்காக போராடுகிறவன் என்றால் உண்மையில் இவற்றை அல்லவா எதிர்த்து போராடி இருக்க வேண்டும்.*

உண்மையாக தமிழர்களுக்காக போராடு கின்றவர்கள் என்றால் சீமான், மணியரசன் போன்ற தமிழ்தேசியவாதிகளும் தமிழர்களின் நலனை விரும்புகின்றவர்கள் செய்ய வேண்டியவை என்ன? அவர்கள் யோக்கியமானவர்கள் என்றால் தமிழர் களை அடிமைபடுத்திய பார்ப்பனர்களையும், அவர்கள் உண்டாக்கிய பார்ப்பன மதமான இந்து மதம், கடவுள், புராணம், கோவில்கள், பண்டிகை, பார்ப்பனக் கலாச்சாரம், பார்ப்பனப் பண்பாடு, மேலும் தமிழர்களைப் பிளவு படுத்திய சாதி அமைப்பு போன்றவற்றை தானே எதிர்க்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு முப்பாட்டன் முருகன், பாட்டன் சிவன், என்று கூறுவது மட்டுமில்லாமல் கிருஷ்ணனுக்கு மாயோன் விழா எடுக்கின்றனர். தமிழன் விடுதலைக்காகச் சிந்திப்பவன் இரண்டா யிரம் வருடங்களாக நம்மை அடிமைப் படுத்திய ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) ஆளக்கூடாது என்று தான் கூறவேண்டும். தமிழர்களை ஏமாற்றி பார்ப்பனர்களின் நலனுக்காகவும், தங்கள் பச்சை சுயநலத்திற்காகவும் அரசியல் செய்கின்றனரே தவிர இவர்கள் தமிழர்களின் நலனுக்காக பாடுபடு கின்றவர்கள் அல்ல. நாம் இப்படி பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்டவை அனைத்தையும் புறக்கணிக்க வேண்டும். சாஸ்திரப்படி மட்டுமல்ல அரசிய லமைப்புச் சட்டப்படியே நாம் சூத்திரர்கள் என்று தான் கூறப்பட்டுள்ளது.

எனவே, மானம், வீரம் என்று பேசும் தமிழர் களும், தமிழர்கள் நலனுக்காக போராடுகின்றோம் என்று கூறகின்றவர்களும் நம்மை ‘தேவடியாள் மக்கள்’ ‘பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள்’ என்று கூறும் பார்ப்பனர்களையும், இந்து மதத்தையும் ஒழிக்க வேண்டாமா? இந்து மதத்தை பின்பற்றினால் தமிழர்களாகிய நாம் சூத்திரர்கள் என்று தானே அர்த்தம்.

தமிழன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று பெரியார் கூறகிறார்.

**“மதத்தினாலும், இனத்தினாலும், நாட்டினாலும் ஆரியரில் இருந்து பிரிந்து இருக்கிற தமிழர்கள் தங்கள் நாட்டில் 100க்கு 90 பேர்களாக அவ்வளவு கூடுதல் எண்ணிக்கை உள்ளவர்களாக இருந்து கொண்டு சகல துறைகளிலும் ஆரியர்கள் மேலாகவும், தமிழர்கள் தாழ்வாகவும், இழி மக்களாகவும் இருப்பது உலகத்தில் 8 வது அதிசயமல்லவா என்று கேட்கிறேன். இதற்கு தமிழ் பெரியவர்கள், பண்டிதர்கள், கலைவாணர்கள் என்ன சொல்லபோகிறார்கள் என்பது தெரியவில்லை. முடிவாக நான் ஒன்று சொல்கிறேன். தமிழன் எவ்வளவு தூரம் இந்து மதத்தையும் இந்து மத கலை, ஆச்சாரம், கடவுள், கோவில், பண்டிகை, சடங்கு, வேஷம், குறி, உடை, நடை முதலியவைகளை வெறுத்து தள்ளு கின்றானோ எவ்வளவு தூரம்தான் மனிதத்தன்மையும் வரப்போகிறது என்றும் அவ்வளவு தூரம்தான் அவன் உண்மையான தமிழனாய் இருக்க முடியும் என்று வலிமையாகக் கூறகிறேன்”.**

- தோழர் பெரியார் ‘குடி அரசு’ 30.10.1943

எனவே, இவ்வாறு இந்து மதத்தைப் புறக்கணிப்பதே தமிழர்களாகிய நம் விடுதலை மட்டு மில்லாமல் ஒட்டு மொத்தப் பார்ப்பனர்கள் அல்லாத மக்களின் விடுதலையாக இருக்க முடியும் என்பதே உண்மை. ஆன்மீக அரசியல், தமிழ்தேசிய அரசியல், தலித் விடுதலை அரசியல், பொருளாதார விடுதலை அரசியல் போன்ற பல அரசியல்களும் சூத்திர, பஞ்சமர் தன்மையை ஒழிக்காமல் எந்த விடுதலையும் பெற முடியாது என்பதை உணரவேண்டும். எனவே பார்ப்பனீய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, மத ஒழிப்பு, பெண் விடுதலை இல்லாத எந்த ஒரு அரசியலும் பார்ப்பனர்களின் நலனுக்கான அரசாகத்தான் அமையும் அது மக்களுக்கு எந்த விடுதலையையும் ஏற்படுத்தாது.

இந்து மதக் கலாச்சாரம், சடங்குகள், கடவுள் (சிறுதெய்வம் மற்றும் குலதெய்வம் உட்பட), பழக்க வழக்கம், பெண் அடிமைத்தனம் இவற்றைப் பின் பற்றுபவர்களாக இருப்பவர்கள் எல்லாம் தமிழர்கள் என்றால் -தமிழர்களை அடிமைப்படுத்திய பார்ப்பனர்களும் தமிழர் என்றால் ரஜினியும் பச்சை தமிழன்தான். பார்ப்பான் தமிழன் என்றால் மராட்டியனும், கன்னடனும் தமிழன்தான்.

ரஜினியைக் கன்னடர் என்று எதிர்க்கும் தமிழ் தேசியவாதிகள் கமலஹாசன் அரசியலுக்கு வரப் போவதாக கூறியபோது ஏன் ‘கமலஹாசன் தமிழர் அல்ல’ என்று கூறவில்லை. காரணம் அவர்கள் பார்ப்பனர்களை எதிர்க்கத் தைரியமில்லாத பார்ப்பன அடிமைகள்.

**நாம் புரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுதான் ஆன்மீக அரசியல் பேசும் ரஜினி (பார்ப்பன அடிமையும்) முற்போக்கு வேடமிட்டு நாத்திகம் பேசும் கமலஹாசன் (பார்ப்பனர்) ஆகிய இரண்டு பேருமே நமக்கு எதிரிகள் தான்.**

**எதிர்க்க வேண்டியது பார்ப்பனர்களையும், பார்ப்பன நலனுக்காக ரஜினிகள் நடத்தும் ஆன்மீக அரசியலையும் தான். ரஜினியின் தேசிய இன அடையாளத்தை அல்ல.**

மதுரை வாசுகி

## இருவரின் பெற்றோர்களும்

# தலையிடக்கூடாது

## தனிக்குடித்தனம் கட்டாயமாக்கு!



**காட்டாறு ஏடு கடந்த 2017 ஆம் ஆண்டு 24. 12. 17 அன்று பாலினச் சமத்துவம் தொடர்பான பல்வேறு முழக்கங்களை முன்வைத்து சமையல் மறுப்புப் போராட்டத்தை நடத்தியது. போராட்டத்தின் முழக்கங்களில் ஒன்று "திருமணங்கள் உறுதி செய்யப்படும் போதே மணமக்களுக்குத் தனிக் குடித்தனம் என்பதைக் கட்டாயமாக்கு!" என்பதாகும். இந்த முழக்கம் தொடர்பாக மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதில் பொதுமக்கள் தெரிவித்த மாற்றுக்கருத்துக்களுக்கு உரிய விளக்கங்களை இக்கட்டுரையில் காணலாம்.**

40 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தாலே, என் மகள் படித்து முடித்து விட்டாள், அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று பேச ஆரம்பித்து விடுவார்கள். அந்தக் காலக்கட்டத்தில் கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பு படிப்பது அரிதாக இருந்தது. அதற்குப்பின், குறைந்தது பட்டப்படிப்பாவது பெண்களைப் படிக்க வைக்க வேண்டும் என நினைத்தார்கள். தற்போது, அது பொறியியல் பட்டப்படிப்பு வரை வளர்ந்துள்ளது.

ஆனால், 40 ஆண்டுகளுக்கு முன், பெண்களின் நிலை குடும்பத்தில் எவ்வாறு இருந்ததோ, அதில் எந்த விதமான மாற்றமும் இன்றளவும் இல்லை என்பதே அப்பட்டமான உண்மை.

பெண்கள் பள்ளிப்படிப்பு முடித்தவுடன் திருமணம் செய்து வைத்த போதாவது, பெண்ணுக்கு 16, 17 வயது தான் ஆகிறது, விவரம் போதாது என்று கூறி, கூட்டுக்குடும்பமாக வாழ வைத்ததையாவது ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். அனால் தற்போது, B.E, M.E போன்ற பொறியியல் பட்டம் பெற்ற பெண்களையும் வேலை வாய்ப்பு பெற்று மென்பொருள் நிறுவனங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் பெண்களையும், திருமணத்திற்குப்பின், கணவன் வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழச் செய்வது பெண்களுக்குச் செய்யும் பெரிய கொடுமை யாகும்.

கொடுமை என்ற வார்த்தை மிகைப்படுத்தப் பட்டதல்ல! ஏனென்றால் கூட்டுக் குடும்பத்தில், பெண்களுக்கு நிறைய கட்டுப்பாடுகள் உண்டு. உடுத்தும் உடையில் ஆரம்பித்து, அவளின் ஏராளமான பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உதாரணமாக, திருமணத்திற்கு முன், பெண் தனக்குப் பிடித்த உடைகளை எப்போதும் கூட அல்ல, குறைந்தபட்சம் வீட்டில் இருக்கும் போதாவது அணிந்து கொண்டிருப்பாள். ஆனால், திருமணத்திற்குப் பின், கூட்டுக் குடும்பத்தில், எங்கள் வீட்டில் அது பழக்கமில்ல, இது பழக்கமில்ல என்று கூறி வீட்டில் நைட்டி அணிவதற்குக்கூடத் தடை கூறுபவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, எங்காவது வெளியில் செல்ல வேண்டுமானால், மாமியார் மாமனார் அனுமதி பெற வேண்டும். பணம் செலவழிப்பதற்கும் கூட அனுமதி பெற வேண்டும். இந்த நடைமுறையானது, புதுமணத் தம்பதியரைத் திருமணம் செய்யாமலே இருந்திருக்கலாமோ? என்று நினைத்து மூச்சு முட்டச் செய்கிறது.

பெற்றோர் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை; சரியான பெண் அமையவில்லை என்று எல்லோரிடமும் வருந்திக் கொண்டிருப்பார்கள். ஆனால் திருமணம் முடிந்து மருமகள் வீட்டிற்கு வந்த பின், மணமக்களை நிம்மதியாக வாழ விடுவார்களா? என்றால் "இல்லை" என்பது தான் உண்மையான பதில்.

20, 25 வயது வரை வாழ்ந்து வந்த இடத்தை விட்டுப் பிரிந்து, புதிய இடத்தில் புதிய மனிதர்

களுடன், வாழ வரும் ஒரு பெண்ணிற்கு உடனேயே இயல்பாக எல்லோருடனும் பழக முடியாது. அப்படிப்பட்ட பெண்ணிடம், நீ உங்கள் வீட்டில் எப்படி இருந்தாயோ, அப்படியே இங்கும் இருக்கலாம் என்று கூறி நட்பு பாராட்ட மாட்டார்கள். மாறாக, அவளது ஒவ்வொரு நட வடிக்கையையும் உற்று நோக்கி, இவள் என்ன இப்படி செய்கிறாள்! அப்படி செய்கிறாள்! என்று குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருந்தால், அவளால் எப்படி அந்த வீட்டில் இயல்பாக இருக்க முடியும்?

தனிக்குடித்தனம் வைப்பதால் திருமணமாகி வரும் பெண்ணுக்கு மட்டுமல்ல, மாமனார் மாமியாருக்குமே அது நிம்மதியான வாழ்க்கையாக இருக்கும். ஏனெனில், சில வீடுகளில் மருமகள் கை ஓங்கியிருக்கும். ஒவ்வொரு விசயத்திலும், தான் சொல்வதைத் தான் அனைவரும் கேட்க வேண்டும் என்று ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் பெண்களும் உண்டு. இங்கேயும் மாமியார் என்னும் பெண் தான் அதிகம் பாதிக்கப்படுவார். எனவே கூட்டுக்குடும்ப முறையானது எல்லோருக்குமே, குறிப்பாக பெண்களுக்கு சிரமமான ஒரு வாழ்க்கை யாகவே அமைந்து விடுகிறது.

புதிதாகத் திருமணமானவர்களைத் தனிக்குடித் தனமாக வாழவிட்டால்தான் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், விருப்பு வெறுப்பு களைத் தெரிந்து கொள்ளவும் முடியும். அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு முன்னே, கூட்டுக் குடும்பத்தில் மற்றவர்கள் தலையிடுவதால், அவர்களிடையே Intimacy ஏற்படுவதற்குப் பதிலாக மனக்கசப்பையே உருவாக்குகிறது.

இங்கு மற்றவர்கள் என்பது மணமக்கள் இருவரது பெற்றோரையும் குறிக்கும். பெண்ணிடம் அவளது குடும்பத்தினர் அறிவுரை என்ற பெயரில், தேவையில்லாதவற்றைச் சொல்லிக் கொடுப்பதும், ஆணிடம் “நீ முதலிலேயே அவளுக்கு இடம் கொடுத்து விடாதே!” என்று அவனது பெற்றோர் கூறுவதும் இங்கு வழக்கமான ஒன்று. அவரவர் பெற்றோர் கூறுவது, அவரவருக்குச் சரியாகத் தோன்றுவதும் அவர்களிடையே விரிசலை ஏற்படுத்தி, மணமுறிவுக்கு இட்டுச் செல்கிறது.

**தனிக்குடித்தனத்தில் இருவருக்கிடையே, பெரிய சண்டையே வந்தால் கூட தனியாக யோசித்து, அவரவர் தவறைப் புரிந்து கொண்டு, மன்னிப்பு கேட்டு, சமாதானம் அடைந்து விடுவார்கள். ஆனால், கூட்டுக் குடும்பத்தில் சிறிய விசயத்தையும் பெரிதாக்கிவிடுவார்கள்.**

அதனால், வயதான காலத்தில், மணமகனின் பெற்றோர் தங்களின் வாழ்க்கையை நிம்மதியாக வாழ்வதற்கும், புதிதாக மணமுடித்தவர்கள் மகிழ்ச்சி யாகத் தங்கள் வாழ்வைத் தொடங்குவதற்கும், தனிக்குடித்தனமே சிறந்த அமைப்பாகும்.

அல்லது, அதற்கு மாற்று ஏற்பாடாக கேரளாவில் உள்ள நாயர் குடும்ப வழக்கத்தை நாமும் பின்பற்றலாம். அதாவது, திருமணத்திற்குப் பின், மணமகன் மணமகள் வீட்டிற்குச் சென்றுவிடுவார். இந்த நடைமுறையை நாமும் பின்பற்றினால், அப்பெண்ணிற்குப் புது இடத்திற்குச் சென்று தன் இயல்பைத் தொலைக்க வேண்டிய தேவையில்லை. அவளது தாயும் தன் பெண் கஷ்டப்படக் கூடாது என்ற நினைப்பில், வீட்டு வேலைகளில் உதவியாக இருப்பார். வேலைக்குச் செல்லும் பெண் என்றால் அவளது குழந்தைகளைப் பரமாரிப்பதையும் ஏற்றுக் கொள்வார். இதனால் வேலை பார்க்கும் இடத்தில் எந்தவொரு மன உளைச்சலுக்கும் ஆளாகாமல் வேலையில் அவளால் கவனம் செலுத்த முடியும். கூட்டுக் குடும்பம் என்றால், மேற்கண்ட நடை முறையைக் கடைபிடிக்கலாம். அல்லது தனிக்குடித் தனமாக வாழ்வதே பெண்களுக்குச் சிறந்த வாழ்க்கை யாக அமையும்.

தற்போது, பெரும்பாலானவர்கள் சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களில் இருக்கும் மென்பொருள் நிறுவனங்களில் வேலைக்குச் செல்லத் தொடங்கியதால், திருமணத்திற்குப் பின் தனிக்குடும்பமாக வாழத் தொடங்கியுள்ளனர். இது வரவேற்கத்தக்க மாறுதல்! இனி வருங்காலங்களில் இதுவே பழக்கமாக மாறி, பெற்றோர்களே மணமக்களைத் தனியாக வாழ வழிவகை செய்து கொடுத்தால் அவர்களின் வாழ்க்கை இனிதே அமையும்.

தனிக்குடித்தனத்தில் இருவரும் வேலைக்குச் சென்றால், குழந்தையை யார் கவனித்துக் கொள்வது? என்ற கேள்வி எழுகிறது. பரவலாக, குழந்தைகள் காப்பகங்களை அரசே ஏற்று நடத்தினால், குழந்தை பிறப்பிற்குப் பின், வேலைக்குச் செல்லவோ படிக்கச் செல்லவோ பெண்களுக்கு ஏற்படும் தயக்கம் காணாமல் போய்விடும்.

எனவே, பிள்ளைகளுக்குத் திருமணம் செய்த பின், அவர்களைத் தனிக்குடித்தனமாக வாழ வைத்தால்தான், அவர்கள் வாழ்வை நிம்மதியாக, முழுமனதோடு ரசித்து வாழ முடியும்.



தேவகி

# முதியோர் இல்லங்கள் பெருக வேண்டும்



பழங்காலத்தில், நிலங்களை பாதுகாக்கவும், விவசாயத்தை வளமாக்கவும். சொத்து சேர்ப்பதற்கும், ஜாதியை நிலைநிறுத்துவதற்கும், பாரம்பரியத்தைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் கூட்டுக்குடும்ப அமைப்புகள் இருந்தன. ஆனால் இன்றைய நிலையில் தனிக்குடித்தனமே சிறந்தது என்பதற்கான விளக்கத்தைச் சற்று பார்க்கலாம்.

பெரும்பாலும் கூட்டுக்குடும்பங்களில் நிச்சயக்கப்பட்ட திருமணங்களே நடைபெறுகிறது. உறவுமுறைகளுக்குள் அத்தை மகன், மாமன் மகள், கட்டும் முறை எனச் சொல்லி, குழந்தைகள் மனதில் தேவையற்ற ஆசைகளை வளர விட்டு உறவு உடையக் கூடாது, சொத்தைக் காக்க வேண்டும் என்றும் திருமணம் செய்து வைக்கின்றனர். இதனால் இணையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் பறிக்கப்படுவதோடு, நெருங்கிய உறவுமுறைகளுக்குள் திருமணங்கள் நிகழ்வதால் பிறக்கும் குழந்தைகள் உடல் மற்றும் மன வளர்ச்சி குன்றிப் பிறக்கின்றனர்

நிச்சயக்கப்பட்ட திருமணங்கள் ஒரு வேளை உறவுமுறைகளுக்குள் இல்லாமல் அன்னியமாக இருந்தாலும், (தற்போது) திருமணத்திற்கு முன்பு பேசிக் கொண்டாலும், சாதகமான விஷயத்தை மட்டும் பேசிக்கொள்வார்களே தவிர, எதிர் மறையான விஷயங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். அதனால் முழுமையான புரிதல் இருக்காது. பெண்கள், தன் குடும்பத்தை விட்டு இன்னொரு குடும்பத்துடன் இணைந்து பயணிக்கின்றனர். அந்த கஷ்டம் ஆணுக்கு இல்லை.

அப்படியே ஒன்றிரண்டு பேர் மனைவி வீட்டிலேயே தங்க முன்வந்தாலும், அவ்வீட்டில் உள்ள அனைவராலும் அவருக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். இல்லையேல் வீட்டோடு மாப்பிள்ளை என்பதால் தன்னைத் தாழ்வாக நடத்துகின்றனர் என்றும், தன்னுடைய கௌரவம் போய்விட்டதாகவும் நினைக்கிறார்கள். பெண்களை மட்டும் வீட்டோடு பெண் என்று அழைப்பது இல்லை.

கணவனுக்கும், மனைவிக்கும் பிரச்சனையாகி பெண் தாய்வீட்டுக்குச் சென்றால், வாழாவெட்டி என தாழ்த்தி கூறுகிறார்கள். ஆணுக்கு அப்படிப் பட்ட சொல்லே இல்லை. ஆணுக்குப் பெண் கீழானவள், அடக்கத்துக்குரியவள் என்று உறுதிபடுத்துவதும், நிலைநாட்டுவதுமாகவே தொடர்கிறது. கணவன் மனைவி இணைந்து எந்த முடிவும் எடுக்க முடியாமல் பெரியவர்களுக்குப் பணிந்து போகக்கூடிய சூழல் நிலவுகிறது. இருமனம் இணைந்து எடுக்கும் முடிவுகளில் எவர் தலையீடும் இருக்கக்கூடாது. யார் தலையிட்டாலும் நாகரீகமற்ற செயல். ஆனால் இதைத்தான் கூட்டுக்குடும்பம் கூசாமல் செய்கிறது.

பெரும்பாலும் கூட்டுக்குடும்பங்களில், மருமகள் என்ன சமைக்க வேண்டும்? என்ன ஆடை அணிய வேண்டும்? எங்கு? எப்பொழுது வெளியில் செல்ல வேண்டும்? என்பதெல்லாம் அவர்கள் விருப்பமாக இருக்கும். கணவனுக்கும், மனைவிக்கும் தனித்திருக்கும் நேரம் அரிது. இலகுவான மனநிலை இருக்காது. சில இடங்களில் பிற்போக்கான குறுகிய சிந்தனை உடைய விஷயங்களை, தாத்தா பாட்டி குழந்தைகளுக்குச் சொல்லி வளர்க்கும் போக்கும் இருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டுக்குடும்ப அமைப்பு பெண்களை மேலும் கூடுதல், கஷ்டங்களுக்கு உள்ளாக்குகிறது.

சில குடும்பங்களில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் வீட்டுவேலைகளுக்கு உதவுவதற்கும் பெண்கள் தன் தாயையோ, மாமியாரையோ, அழைத்துச் சென்று விடுகிறார்கள். மாமனார் தேவையற்ற சுமையாகக் கருதப்படுகிறார்.

பெரும்பாலும் பெற்றோர்கள் தன்பிள்ளைகளிடம் சிறு வயதிலிருந்து சொல்லி சொல்லி வளர்ப்பது என்பது, நாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு உங்களை படிக்கவைத்து ஆளாக்குவது எதுக்குன்னா நீங்க எங்களுடைய கடைசி காலத்தில் எங்கள வச்சி காப்பத்தனும் என்றுதான் சொல்லி வளர்க்கிறார்கள் தன் பிள்ளைகள் வளர்ந்த பின்பு நம்மை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில் தன் வாழ்க்கையை வாழும் காலத்தில் நிறை வானதாக வாழாமல் தனக்கென்று தனி சேமிப்பை ஏற்படுத்தாமல் பிள்ளைகளுக்காக வாழ்கிறார்கள் வயதான காலத்தில் பிள்ளைகளை நம்பி காலம்

கடத்த வேண்டியுள்ளது. பிள்ளைகளின் சூழல், காலத்திற்கு ஏற்ப வேகமாக மாறி வருவதால் பெற்றோரை கவனிக்க முடியாமல் போகிறது.

இருப்பினும் கடமைக்காக பாதுகாக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் அங்கு பெற்றோர்கள் ஒரு சுமையாக கருதப்படுகிறார்கள் இதனால் பெற்றோர்களின் சுயமரியாதை இழக்கப்படுகிறது.

சமீபத்தில் ராஜ்கோட்டில் உதவிபேராசிரியர் சந்திப் என்பவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு இருந்த தன் தாயைத் தன் வீட்டில் இருந்து மொட்டை மாடிக்கு அழைத்து சென்றதாகவும், அவர் கால் தவறி கீழே விழுந்து இறந்து விட்டதாகவும் காவல் துறைக்குத் தகவல் தெரிவித்தார். சி.சி.டிவி கேமராவில் பதிவான காட்சிகளை பார்த்த காவல்துறையினர், புகார் அளித்த மகன்தான் அவருடைய தாயை கீழே தள்ளி விட்டார் என்பதைக் கண்டுபிடித்தனர். சம்பந்தபட்ட நபரின் மனைவியும் இதற்கு உடந்தையென காவல் துறை சந்தேகித்தனர்.

விசாரனையில் அவர் கூறியதாவது தன்னுடைய மனைவி தன் இரண்டு குழந்தைகளைக் கவனித்துகொண்டு இருந்ததாகவும் அவருக்கு இதில் எந்த சம்பந்தம் இல்லை என்று மறுத்துவிட்டார். “உடல்நலம் சரியில்லாத தாயைக் கவனிப்பது தொடர்பாக எனக்கும் என் மனைவிக்கும் இடையே தொடர்ந்து வாக்குவாதம் நடந்து கொண்டே இருந்தது. பிரச்சனையைச் சமாளிக்க முடியாமல் வேறுவழியின்றி என் தாயைக் கொன்றுவிட்டேன்” என்று கூறினார்.

இதைப்போலவே வெளிநாட்டில் பணிபுரிந்த ஒருவர், இரண்டு மாதங்களுக்குப் பிறகு தனியாக வசித்து வந்த தன் தாயைப் பார்க்க இந்தியா வந்தார். ஆனால் தாயோ கவனிப்பாரற்று சோபாவில் அமர்ந்தநிலையில் இறந்து எலும்புக்கூடாகக் கிடந்தார்.

மேற்கண்ட இந்த இரண்டு சம்பவங்களிலும் அவர்களுடைய தாயைக் கவனிக்க முடியாத பட்சத்தில் முதியோர் இல்லத்தில் விட்டு இருந்தால், குறைந்தபட்சம் உயிருடனாவது இருந்திருப்பார்கள். பெற்றோர்களைப் பராமரிக்க முடியாத நிலையில் முதியோர் இல்லங்களில் விடுவதற்கு குற்ற உணர்ச்சிக்கு ஆளாகவேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கமே முதியோர் இல்லங்களைப் பொறுப்பேற்று நடத்த முன்வர வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளை குற்றமாக கருதவேண்டிய அவசியம் இல்லை.

எனவே வாழும் பொழுது தன்வீடு, தன் பிள்ளை என்று வாழ்வை சுருக்கிக்கொள்ளாமல் இந்தச் சமூகத்திற்க்காகவும் வாழ வேண்டும். தனக்கென ஒரு சேமிப்பு ஏற்படுத்தி, இறுதி காலத்தில் அந்த சேமிப்பை கொண்டு தன் பிள்ளைகள் தயவின்றி வாழலாம். அடுத்த தலைமுறையாவது அவர்களது வாழ்க்கையை அவர்கள் விரும்பியபடி வாழ்வார்கள்.

22 ஆம் பக்கத்தொடர்ச்சி

அதுக்கு நான் என்ன தான் மில்லுக்கு வேலைக்கு வந்தாலும் தாழ்த்தப்பட்டவங்கன்னு சொல்லி அவங்களையே கழுவ சொல்றிங்களே அதற்குக் காரணம் உங்க மண்டையில பார்ப்பான் புகுத்திய சாதியமே என்று நான் சொல்வேன்.

மதிய சாப்பாடு நேரத்தில் பெண்கள் எல்லாரும் சாப்பிடும் போது தாழ்த்தப்பட்டவங்க தனியாக உட்கார வைக்கப்படுறாங்க.

**மில்லில் வந்து சேர்ந்த உடனேயும் பெண்கள் கேக்குற கேள்வி நீங்க எந்த ஊரு? என்ன பேரு? எந்தத் தெரு? ஊருக்குள்ள முக்கியமான ஒரு நபரைக் குறிப்பிட்டு அவுங்க வீட்டுக்கு பக்கமானுட்டு நீங்க, வாங்க, போங்க என்று பேச ஆரம்பிச்சவங்க என்ன ஜாதினு தெரிஞ்சிட்டு நீ, வா, போ என்று ஒருமையாய் பேசறாங்க.**

மில்லில் வேலை செய்யுற ஒரு பெண் எனக்கு கல்யாணம்னு சொல்லி பத்திரிக்கை கொடுத்தாங்க. அதை வாங்கிக்கொண்டு கல்யாணத்தேதி அன்னைக்கு அந்தப் பொண்ணு கல்யாணத்துக்கு போலாமானு கூட வேலை செய்யும் பெண்கள் கிட்ட கேட்டேன். நீ போறதா இருந்தா போ... நாங்க எல்லாம் அங்க வரமாட்டோம்னு சொன்னாங்க. ஏன் என்று கேட்டதுக்கு, அந்தப் பொண்ணு தாழ்ந்த ஜாதிப் பொண்ணு அப்படினு சொல்றாங்க. இதுபோன்ற சாதிய சிக்கல்களும் பெண்களுக்கு நிகழ்கிறது என்பது வேதனையாக இருக்கிறது.

மில்லில் சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் வேலைக்கு வரும், வெளிமாவட்டப் பெண்களையும், அவுங்க என்ன ஜாதியோ என்ன குலமோ என்று இழிவாகப் பார்க்கும் நிலைமையும் உள்ளது. உதாரணத்துக்கு, நான் வேலை செய்யுற மில்லில்கூட ஒரு அக்காவை, ஒரு பெண் அம்மானு கூப்பிட்டப் போ, என்ன சாதியோ, என்ன கிரகமோ என்னை அம்மானு கூப்பிடுற என்று கோவப் பட்டாங்க. அம்மா என்று கூறுவது ஒரு நல்ல உறவு முறை. மரியாதை நிமித்தமும் கூட. அதையும் கூட சாதியப் பார்வையில் தான் ஆலைகளில் பார்க்கிறார்கள்.

சு.விஜயபாஸ்கர்





# திராவிட ஆய்வாளர் வைரமுத்துவின் "தமிழை ஆண்டாள்"

ஆய்வுக்கட்டுரையின் வடிவம், 'கருது கோளில்' (hypothesis) தொடங்கி, 'ஆய்வுமுறையில்' (research methodology) மூழ்கி முத்தெடுத்து, இறுதியில்ஆய்வாளரின் 'கருத்தோடு' (Conclusion) முடியும். வைரமுத்துவின் கட்டுரை மேற்சொன்ன வகையிலான 'ஆய்வுக்கட்டுரை' தான். ஆனால், கட்டுரை பேசும் அரசியலையும், அதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகளையும், முன் கூட்டியே கணித்த வைரமுத்து, 'கட்டுரை முடிவைத்' தன்கருத்தாகச் சொல்லாமல், மற்ற ஆய்வாளர்களின் கருத்தாகச் சொல்கிறார். மற்றபடி இதுஒரு தரமான ஆய்வுக்கட்டுரை, உண்மையில் இப்படிச் சொல்வதின் மூலம் கட்டுரையின் அழகுகூடுகிறதே தவிர குறையவில்லை. 'தனிப்பட்ட சாய்வை' சிறிதளவுகூட வெளிப்படுத்தக்கூடாது என்ற ஆய்வுக் கட்டுரையின் தார்மீக அடிப்படையை வைரமுத்து கிஞ்சித்தும் மீறவில்லை.

இனி, கட்டுரையின் உள்ளடக்கத்திற்குச் செல்வோம். மார்கழி மாதத்தை வைரமுத்து அறிமுகப்படுத்தும் விதமே, அவரின் பல்துறை அறிவுக்குச்சான்று. "அறிவியலாளன் வைரமுத்து, இயற்கை ரசிகன் வைரமுத்து, பகுத்தறிவாளன் வைரமுத்து" என தனது பலமுகங்களை வெளிப் படுத்தும்போதே, 'ஆண்டாள் யார், கண்ணன் யார், நான் யார், தன் கருத்து' என்ன என்பவற்றைத் தெளிவாக வெளிப்படுத்திவிடுகிறார்.

இலக்கியம் என்பது சொற்களால் ஆனது என்றாலும், அது வெறும்சொற்களின்குவியல் அல்ல. சொற்கள் வெளிப்படுத்தும் பொருளே இலக்கியத் திற்குச் சுவையூட்டும். சொற்களைச் சரியான வகையில் பயன்படுத்துவது எழுத்தாளனின் திறமை. அது வைரமுத்திற்கு நிறையவே வாய்த்திருக்கிறது.

மார்கழி மாதம் என்பது உற்பத்திக்காலம், உற்பத்திக்கு அடிப்படை கலவி. இப்படித்தான் கட்டுரையைத் தொடங்குகிறார். "மார்கழிமாத அதிகாலை ஒழுக்கத்திற்கு (அதிகாலைக் குளியல், இறைவழிபாடு) 'பாவைநோன்பு' என்பது சடங்கு. கண்ணன் என்பதொருகாரணம்" என்கிறார் வைரமுத்து.

அப்படியானால் மார்கழி மாதத்தின் பாவை நோன்பிருக்கும் எல்லாப் பெண்களும் கண்ணனை அடைய விரும்புகிறார்களா? இல்லை என்பதே வைரமுத்துவின் வாதம். அதுவே உண்மை. நோன்பிருக்கும் மற்றபெண்கள் கண்ணனிடம் வேண்டுகின்றனர். ஆண்டாளோ கண்ணனையே அடைய விரும்புகிறாள். இது சற்று வித்தியாசமாக உள்ளதல்லவா? இறைவனிடம் (கடவுளிடம்) பக்தர்கள் யாசிப்பது உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கும் பொதுப்பண்பு. ஆனால், இறைவனையே கணவனாக யாசிப்பது எங்கும் காணப்படாதது. இங்கே இந்துமதத்தில் (7 ஆம் நூற்றாண்டில் வைணவமதத்தில்) அப்படி ஒரு பழக்கம் காணப்படுவதின் காரணம் என்ன?

காரணமின்றி காரியங்கள் நடக்குமா? அந்தக் காரணங்கள் யாவும் தேவதாசி எனும் காரியத்திற் காகவே என்று தமிழ்இலக்கியத்தில் இருந்தே ஆழமான ஆதாரங்களுடன் நிறுவுகிறார் வைரமுத்து தமிழகத்தில் 6 ஆம் நூற்றாண்டில்இருந்தே முனைவர் கே. சதாசிவன் "தமிழகத்தில் தேவதாசிகள்" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஆண்டாள் எழுதிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரண்டும் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடல்கள் எழுதப்பட்டகாலம் கிபி 6 ஆம்

*நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டுவரை எனக் கருதப் படுகிறது. தேவர்க்குத் தொண்டுசெய்யும் பெண்கள், 'தேவர் அடியாள்கள்' என முதலில் அழைக்கப் பட்டுப் பின்னர், தேவதாசிகள், தேவடியா எனத் திரிந்து விட்டது என்று கருதினால், அந்தத் தொண்டை வைணவமதத்தின் அனைத்துப் பிரிவுப் பெண்களும் செய்திருக்கவேண்டும். ஆனால் செய்ய வில்லை என்பதே வரலாறு தரும் சான்று. ஆண்டாள் பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்த பெண்ணில்லை என்று கூறுவதின் மூலம், பார்ப்பனரல்லாத பெண்கள் மட்டுமே தேவதாசிகளாக மாற்றப் பட்டுள்ளனர் என்பதைத் தெளிவு படுத்துகிறார்.*

*ஆறாம் நூற்றாண்டு தமிழக, இந்தியச் சமூகத்தில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்திய காலம். சமண, பௌத்த மதங்களின் வீழ்ச்சியால் வேதமதங்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட காலம் அது. அதற்காகப் பல்வேறு பக்திஇலக்கியங்கள் படைக்கப்பட்டன. பக்தி என்பது கடவுளை வழி படுவதோடு நின்றுவிடுகிறதா? நின்றிருந்தால் இந்து மதத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் ஏற்பட்டிருக் காதே! மற்ற மதங்களில் கடவுள்தான் வழிபாட்டுக்கு உரியவர். ஆனால் இந்துமதத்தில் கடவுளின் செயலாளர்களும் வழிபடப்படுவர்களாக உள்ளனர்.*

*மனிதநேயத்தோடு இறைநம்பிக்கையை பின்னிப்பிணைக்க 'மக்கள்சேவையே மகேசன் சேவை' என்ற வாதம் உருவானதைப்போல, 'கடவுள் களின் செயலாளர்களுக்குச் செய்யும்சேவையே கடவுளுக்குச் செய்யும்சேவை' எனக் கருத்துரு வாக்கம் செய்யப்பட்டது. அதன்பெயரே தேவதாசி. தேவதாசிகளின் தொடக்கமே ஆண்டாள். ஆண்டாள் பார்ப்பனரல்லாத பெண். இப்படியாகப் பல குறியீடுகள்.*

*கடவுளர்களின் செயலாளர்கள் யார்? பார்ப்பனர்கள், ஆண்கள். அவர்களுக்குப் பெண்கள் என்ன சேவை செய்ய இயலும்? "தன்னை ஒப்படைப்பது, தன் உடலைத்தருவது". ஏன் பார்ப்பனப் பெண்கள்அந்தச் சேவையைச் செய்ய வில்லை? என்ற கேள்வியைத் தந்தை பெரியாரின் மூலம் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கேட்டதே அதற்கு விடையாக அமைந்துள்ளது. பார்ப்பனரல்லாத பெண்கள் தேவதாசிகளாக மாற்றப்பட்டனர் என்பதற்கு இந்தச்சான்றுகள் போதுமா? தொடர்வோம்.*

*கடவுள்கள் பார்ப்பனர்களின் கைகளில் மாட்டிக்கொண்ட விளையாட்டுப் பொம்மைகள் என்றுகூறியஅண்ணல் அம்பேத்கர், "கடவுள்களைப் பொம்மைகளாகப் பயன்படுத்தப்பட்டதின் காரணம் சந்தையில் புதிய பொருளை விற்பனைக்குக் கொண்டு வருவதற்காகப் பார்ப்பனர்கள் செய்த சந்தைப் படுத்தல் உத்தியே ஆகும்" என்கிறார்.*

*தேவதாசி முறையைச் சந்தைப்படுத்தப் பார்ப் பனர்கள் கடைப்பிடித்த வழிமுறை பற்றி கீழ்வரு மாறு விவரிக்கிறார் வைரமுத்து.*

*வேதமதங்களின் வர்ணபேத இறுக்கத்தின் காரணமாகவும், அதை எதிர்த்த சமண - பௌத்த மதங்களின் எழுச்சி காரணமாகவும், வீழ்ந்த வேத மதங்கள் தம்மை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டி இருந்தது. பலதரப்பட்ட மக்களைத் தன்னுள்ளே இழுக்கவேண்டும். மதத்தை மேலும் பரப்ப வேண்டும். எனவே, வேதமதத்தின் பண்புகளான 'யாகம், யக்ஞம், தவம், வேள்வி' ஆகியவற்றை விட்டுவிட்டு, 'வாத்சல்யம்' (பேரன்பு கொள்ளுதல்), 'காருண்யம்' (கருணை கொள்ளுதல்), சௌலப்பியம் (எளிதில் அணுக்கூடியதன்மை) ஆகிய பண்புகளை முன்னிறுத்தியது வேதமதம். பெண்களைக் கடவுளின் பெயரால் உள்ளிழுத்து (இது அனைத்துக் கீழ்வர்ண சாதிகளுக்கும் பொருந்தும்) பார்ப்பனர் களுக்குப் பணிவிடை செய்ய வைப்பதே இதன் நோக்கமாகும். பார்ப்பனப் பெண்கள் ஏற்கனவே மகளாக, மனைவியாக, தாயாகச் சேவை செய்து கொண்டிருப்பதால், அவர்களுக்குத் தேவதாசி முறையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.*

### காமத்தை ஆண்டாள் பேசுவதேன்?

**மனு வின்படி**

**பெண்கள் அழகைப்பற்றி கவலைப்படுவதில்லை. வயதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை. ஆணாக இருந்தால் போதும். அழகாக இல்லா விடினும் உடலுறுவு கொள்ளத் தயங்குவதில்லை.** - அ 9: சு14

**இரவும் பகலும் பெண்களை அவர்தம் குடும்பத்து ஆடவர் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும். உடலுறவு நாடும் பெண்களை ஒருவர் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.** - அ 9: சு2

**சிறுமியாயினும், இளம்பெண்ணாயினும், ஏன் முதியவளாயினும், தம்வீட்டில்கூட சுதந்திரமாக எதையும் செய்திட அனுமதித்தல் கூடாது.** - அ 4: சு147

*ஆக, எந்தச்சூழலிலும் பெண்கள் சுதந்திரமாக இருத்தல் கூடாது என்று கூறிய மனு,*

**கணவனும் மனைவியும் ஒன்றெனக் கூறப் படுவதின் பொருள், திருமணத்திற்குபின் மணமுறிவு, பிரிவு என்பதே கிடையாது என்றும் கூறுகிறார்.** *- அ 11: சு 45*

*ஒருஆணைப் பெண்ணுடன் கட்டிப் போடுவ தன்று, மாறாக பெண்ணை ஆணுடன் கட்டிப் போட்டுவிட்டு, ஆணைச் சுதந்திரமாக உலவ விடுவதே மனுவின் நோக்கமென்று அண்ணல் அம்பேத்கர் மனுவைக் கட்டுடைக்கிறார்.*

*ஆனால், இதற்கு மாறாக ஆண்டாள் மிகச் சுதந்திரமாக இருக்கிறாள். தனது காம வேட்கையைத் துணிச்சலாக வெளிப்படுத்துகிறார். வளர்ப்புத் தந்தை தேடிய மணாளனை மணக்க மறுக்கிறாள். கன்னிகழியும் முன்னே பாலுறவு கொள்ளத் துடிக்கிறாள். கண்ணன் தன்னை வாயோடு வாய் வைத்து (Lip to Lip kiss) முத்தமிடும் சுவையை ரசிக்கிறாள். இவற்றை யெல்லாம் கவிப்பேரரசு வைரமுத்து தன் தமிழறிவு கொண்டு கட்டுடைக் கிறார்.*

தம்வீட்டுப் பெண்கள் உடல் தெரியும் வகையில் உடை அணிவதையும், காமம் பற்றி வெளிப் படையாகப் பேசுவதையும் அனுமதியாத ஆண்கள், பிறபெண்களின் உடலுறுப்புகளைக் கண்டு காம வேட்கை அடைகிறான். பிறபெண்கள் காமம்பற்றிப் பேசுவது கேட்டுக் கிளர்ச்சி அடைகிறார்கள். இதற்கு இக்கால சினிமாவே சாட்சி. இது வர்ணசாதி முறைக்கும் பொருந்தும்.

பார்ப்பனரல்லாத பெண்களின் குரலாக ஆண்டாளின் ஊடாக காமம் வெளிப்படையாகப் பேசப்படுகிறது. தான்விரும்பும் கடவுளான கண்ணனுடன் உடலுறவு கொள்வதைப்பற்றி ஆண்டாள் கனவு காண்பது திட்டமிடப்பட்டதா எனக் கேள்வி எழுப்புபவர்களுக்கு ஆண்டாள் எழுத்துக்களின் மூலமே பதிலுரைக்கிறார் கவிப்பேரரசு.

ஆண்டாளின் காமவேட்கை அவளோடு நின்றுவிடவில்லை.

**“நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி மையிட்டெழுதோம், மலரிட்டு நாம்முடியோம், செய்யாதன செய்யோம்”**

**என்று மற்றபெண்களையும் உறவுக்கு அழைக் கிறாள். இதை இன்னும் வலுவாக, ஆண்டாள் பாடியதாகச் சொல்லப்பட்ட ‘திருப்பாவையையும், நாச்சியார் திருமொழியையும்’,**

**“நாச்சியார் திருமொழி காதல் உணர்ச்சியினால் (தன்னுணர்ச்சி) எழுதப்பட்டது எனவும், திருப்பாவையோ கண்ணனுடன் தான்பெற்ற இன்பத்தை மற்றவரும் (பொதுஉணர்ச்சி) பெறட்டும் என்ற கருத்தை மையமிட்டுள்ளதாக உள்ளது”** என்ற ஒப்பீட்டின் மூலம் நிறுவுகிறார்.

அவர்தம் கட்டுரையை நேரடிச் சொற்களால் பின்வருமாறு விளக்கலாம்.

பார்ப்பனரல்லாத பெண்களைப் பார்ப்பனர் களுக்குத் தாசிகளாக மாற்றுவதே நோக்கம். அதற்குப் பயன்பட்டவள்தான் ஆண்டாள். இறைவழிபாடு, இறைவனோடு காதல் மட்டுமே என்றால் நாச்சியார் திருமொழியோடு நின்றிருக்கும். யாகம், யக்ஞம், தவம், ஆகிய கடுநெறிகளை வேள்வியைக் கைவிட்டுவிட்டு, ‘வாத்யல்சம், காருண்யம், சௌலப்பியம்’ ஆகிய மென்நெறிகளை அறிமுகப் படுத்தி, கீழ்வர்ணசாதி மக்களை வேத மதத்திற்குள் மீண்டும் உள்ளிழுக்கச் செய்யப்பட்ட உத்தியின் ஓர் வடிவமே ஆண்டாள். மதத்திற்குள் கொணர்ந்து விட்டால் போதாது, மதத்தின் செயலாளர்களுக்குப் (பார்ப்பனர்களுக்கு) பணிவிடை செய்ய வைக்க வேண்டும். பார்ப்பனர்களுக்குச் சேவை செய்ய வீட்டில் பார்ப்பனப் பெண்கள் இருக்கின்றனர். தன் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கோவிலில் செலவழிக்கும், பணியிடத்தில் பணிவிடை செய்ய உருவாக்கப்பட்டவர்கள் “தேவதாசிகள்” என்ப தாகும்.

பெரியாழ்வார் தனது கிருஷ்ண காமத்தைக் கவியுக்தியாக வெளிப்படுத்தக் கற்பனை செய்து கொண்ட கற்பனை மகளே ஆண்டாள் என்பது இராஜாஜி கருத்து.

இராஜாஜியின் கருத்தோடு வைரமுத்தை ஒப்பிட்டு, கீழ்க்கண்ட முடிவிற்கு நம்மால் வர இயலுகிறது. பார்ப்பனர்களுக்குத் தாசியாகப் பார்ப்பனரல்லாத பெண்களைப் பயன்படுத்த “கடவுளுக்குச் சேவை செய்பவர்கள்” என்ற கட்டமைப்பு தேவைப் பட்டது. தேவதாசிகளை விளம்பரப்படுத்த ஆண்டாள் பயன்படுத்தப் பட்டாள். ஆண்டாளை விளம்பரப்படுத்த “திருப்பாவையை” ஆண்டாளின் பெயரிலேயே பார்ப்பனர்கள் எழுதிக் கொண்டனர் என்ற ஐயமும் வருகிறது.

எனவேதான்,

**பார்ப்பனர்களுக்கு வைரமுத்து வின் கட்டுரையின் மீது கோபம் வருகிறது. பார்ப்பனர்களுக்கு முன்புத்தி கிடையாது என்று தந்தை பெரியார் சொல்வதுண்டு. அந்த வகையில் வைரமுத்துவின் எண்ணற்ற படைப்புகளுக்குக் கிடைக்காத விளம்பரத்தை, “தமிழை ஆண்டாள்” கட்டுரைக்கு ஏற்படுத்தித் தந்த பார்ப்பனர்களுக்கு நன்றி. நம்காலத்து திராவிட ஆய்வாளரான வைரமுத்துவைப் பாராட்டுவோம். அவர்தம் ஆண்டாள் கருத்துக்களைத் தொடர்ந்து விவாதிப்போம். பல உண்மைகள் வெளிவரட்டும். அதற்குத் “தமிழை ஆண்டாள்” பயன்படட்டும்.**

ராயல் சேலஞ்ச்





# காட்டுமிராண்டிகளின் ‘பத்மாவத்’

வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் பார்ப்பன ஜாதி வர்ணாஸ்ரமத்தையும், பெண்ணடிமைத் தனத்தையும் மிக அழுத்தமாகப் பின்பற்றும் ஜாதி ஆதிக்கவாதிகளைப் போற்றிப் புகழும் படம். கணவன் இறந்தால், அவனது உடலை எரிக்கும் போது அந்த நெருப்பிலேயே மனைவியையும் உயிரோடு கொளுத்த வேண்டும் என்ற உடன் கட்டை ஏறுதலை நியாயப்படுத்தும் படம். பெண்ணின் முகத்தைக் கணவனைத் தவிர வேறொரு ஆண் பார்த்துவிட்டாலே, பெண்ணின் கற்பு கெட்டுவிடும் என்ற காட்டுமிராண்டித் தனங்களை ஆதரிக்கும் படம். காட்டில் தனியாக வேட்டையாடும் அளவுக்குத் துணிச்சலாக வாழ்ந்த ஒரு பெண்ணை, கணவனுக்குப் பணிவிடைகளை மட்டுமே செய்யும் ஒரு இயந்திரமாக மாற்றுவதை நியாயப்படுத்தும் படம்.

இஸ்லாமியர்கள் கொடூரமானவர்கள், பெண் பித்தர்கள் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. பச்சை நிற, பிறைக் கொடியுடன் கேவலமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். போர்களில் சிறந்த தளபதியான மாலிக்கபூரை வெறும் புரோக்கர் போலக் காட்டுகின்றனர்.

ஒரு பொருளை எப்படிச் சந்தைப்படுத்துவது? என்பதில் தேர்ந்த அனுபவம் கொண்ட, குஜராத்தியான சஞ்சய் என்பவர் குஜராத்தைச் சேர்ந்த இந்தியாவின் மிகப்பெரும் பன்னாட்டு நிறுவனமான ரிலையன்ஸ் நிறுவனத்தோடு இணைந்து உருவாக்கியுள்ள படம் தான் பத்மாவத். இரு தரப்புமே வணிக நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்றவர்கள். படத்தைத் தயாரிக்கும் போதே அதைச் சந்தைப் படுத்தும் வணிக யுக்தியையும் தயாரித்து இயக்கி விட்டனர். அதுதான் கர்ணி சேனா போன்ற அமைப்புகளின் எதிர்ப்புகள்.




இது போல எதிர்ப்புகளை உருவாக்கி, அதை வைத்துத் திரைப் படத்தைப் பெரும் வெற்றி பெற வைக்கும் நுட்பத்தை ஏற்கனவே இந்தக் கூட்டணி செயல்படுத்தியுள்ளது. 2013-ல் ‘ராம்-லீலா’ என்ற இந்திப் படம் பல மாநிலங் களில் உயர்நீதி மன்றங்களாலேயே தடைசெய்யப்பட்டு, பிறகு படத்தின் பெயரில் சிறு சிறு மாற்றங்களைச் செய்து மீண்டும் வெளியிட்டார்கள். ராம்-லீலா 100 கோடி படங்களின் பட்டியலில் இடம் பெற்றது.

அதே வணிக யுக்தியைப் பத்மாவத்திலும் பின்பற்றி னார்கள். படம் வெளியான இரண்டே நாட்களில் ரூ. 56 கோடி வசூலானது. ஒரு படம் வெளியாகி இரண்டு நாட் களில் அதிக வசூலைப் பெற்ற படம் என்றால், அது கடந்த ஆண்டு வெளியான ‘கோல்மால் எகைன்’ ஆகும். அதன் இரண்டு நாள் வசூல் 36 கோடி. அதைவிடப் பெரும் வணிக வெற்றியைப் பத்மாவத் பெற்றுள்ளது என்பதே குஜராத்தி களின் எதிர்ப்பு யுக்தியின் வெற்றியைக் காட்டுகிறது.

படத்திற்கு எழுந்த திட்டமிடப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து 2017 நவம்பரில் புதுடெல்லியில், பத்திரிகை யாளர்களுக்காகச் சிறப்புத் திரையிடல் நடந்தது. அது முடிந்தவுடன் பா.ஜ.க வின் ஊதுகுழலான ரிபப்ளிக் டி.வியின் அர்னாப் கோஸ்வாமி, ரஜத் சர்மா போன்றவர்கள் பத்மாவதியை ஆதரித்து அறிக்கை வெளியிட்டனர். படம் வெளியான பிறகு, இந்து மக்கள் கட்சியின் நிறுவனர் அர்ஜூன் சம்பத் படத்தின் இறுதிக்காட்சியில் வரும் உடன் கட்டை ஏறும் நிகழ்ச்சி தன்னை மெய்சிலிர்க்க வைக்கிறது என்றுகூறி, படத்தை ஆதரித்து அறிக்கை வெளி யிட்டுள்ளார். (தமிழ் இந்து 27.01.2018)

ஜாதிய ஒடுக்கு முறைகளையும் - பெண்ணடிமைத் தனத்தையும் புனிதப்படுத்திவிட்டு, ஒரு தனிப்பட்ட பார்ப்பானை மட்டும் வில்லனாகக் காட்டு வதுதான் பார்ப்பனர்களின் தந்திரம். நாம் பார்ப்பனர்களை எதிர்ப்பதற்கான அடிப் படைக் காரணம், அவர்கள் பார்ப்பனர் களாகப் பிறந்து விட்டதற்காக அல்ல. அவர்கள் பார்ப்பன ஜாதி முறையையும், பெண்ணடிமைத் தனத்தையும் மிகக் கடுமையாகப் பின் பற்றுவதாலும், பரப்பு வதாலும் தான் நாம் எதிர்க் கிறோம்.

ஜாதிய ஒடுக்குமுறையையும், பெண்ணடிமைத் தனத்தையும் பார்ப்பனர் அல்லாத இராஜபுத்திரர்களோ - பிற் படுத்தப்பட்ட ஜாதியினரோ - பட்டியலின மக்களோ யார் பின்பற்றினாலும், பரப்பி னாலும் அது பார்ப்பனர்களுக்குத்தான் வெற்றி.

**வெறுத்து - புறக்கணிக்க வேண்டிய காட்டுமிராண்டிகளின் கதை**

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com





